திசை
THISAI

திசை 2 30-3-1990 வெள்ளிக்கிழமை விலை : ரூபா 5-00 பக்கங்கள் 14 முகம் 11

## “ஒரு பெரிய தேசிய சாதனை”

“அமைதிப்படையை வெளியேற வைத்தது ஒரு பெரிய தேசிய சாதனையாகும்.” இவ்வாறு தெரிவித்தார் பேராசிரியர் ரால்வ் புல்ஜின்ஸ். அவர் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அமைதிப்படை வெளியேறியதுபற்றிச் சொல்லும்போது, கோவா, சிக்கிம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடந்துகொண்டதுபோல இலங்கையில் தன்னுடைய அதிகார விஸ்தரிப்பை நிலைநிறுத்த இந்தியாவால் முடியாது போய்விட்டது என்றும் சொன்னார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் “இந்திய அக்கிரமிப்புக்கான சந்தர்ப்பங்களை நாமே எமது சொந்தக் கொள்கைகளால் உருவாக்கிக் கொடுத்தோம் என்பதை நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும்” என்றும் சொன்னார்.

# பிரதமர் சுயம்வரம்: யாருக்கு மாலை?

**அமைச்சுகள் சம்பந்தப்பட்ட விவரணப் படங்களை ஜனாதிபதி பார்த்தாயிற்று; அமைச்சர்களின் ஆண்டறிக்கைகளையும் வாசித்தாயிற்று! இனி எஞ்சியிருப்பது பிரதமரையும், அமைச்சர்களையும் தெரிவுசெய்வதுதான்!**

புதிய அமைச்சரவைக்கு வழிவிட்டுக் கொடுக்கும் வகையில் பிரதம மந்திரி விஜயதுங்காவும் ஏனைய அமைச்சர்களும் தமது பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளனர். இதனால், யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யவிருந்த அமைச்சர்கள் வின்சன்ற் பெரேராவினதும் தேவராஜ்ஜினதும் விஜயங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. ஏனென்றால் இவர்கள் இங்கு வருகைதரும்போது அமைச்சர்கள் என்ற தோரணையில் வரமுடியாது.

பிரதமமந்திரி பதவிக்கும், அமைச்சர்களின் பதவிகளுக்கும் பலருடைய பெயர்கள் அடிபடுகின்றன. ஆனால், இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை எதுவும் திட்டவட்டமாகத் தெரியவில்லை.

சில அரசியல் அவதானிகளின் கருத்துப்படி, முன்பு அமைச்சரவையில் இருந்த எவரும் புதிய அமைச்சரவையில் தள்ளிவிடப்பட மாட்டார்கள் என்றும், சிலவேளைகளில் இரண்டு அல்லது மூன்று புதியவர்கள் மேலும் சேர்க்கப்படலாம் என்றும் கருதப்படுகிறது.

பிரதமர் பதவிக்கு ஜனப் ஹமீதின் பெயரும் முன்னாள் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபால மெண்டிஸின் பெயரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தனவின் பெயரும் அடிபடுகின்றன.

இம் மூவரிலும் ஜனப் ஹமீதுக்கே மாலை சூட்டப்படலாம் என சில அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் வருமாறு: ஜனப் ஹமீதைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஜனாதிபதி தேர்ந்தெடுத்துள்ளார். அவர் ஒரு சிறுபான்மை இனத்தவராக இருப்பதனால் அவரைப் பிரதமராகத் தேர்ந்தெடுப்பதன் மூலம் சிறுபான்மை இனத்தவரின்,

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் மனித உரிமை மீறல்கள் கண்காணிப்புச் செயலகம்

ஐ. நா. சபையின் மனித உரிமைகள் குழுப் பிரதிநிதிகள் ஜூன் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ய விருப்பதாக அறியப்படுகின்றது.

இப் பிரதிநிதிகள் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பதை ஆராயவிருக்கின்றனர்.

மேற்கண்ட தகவல்களை மகிந்தா ராஜபக்‌ஷவும் வாசுதேவ நாணயக்காரவும் அண்மையில் வெளியிட்டனர்.

இலங்கையிலுள்ள மனித உரிமைகள் அமைப்புக்களை ஒருங்கிணைத்த செயலகத்தினைக் கொண்ட ஓர் நிலையத்தினை கொழும்பில் அமைத்து அதன் மூலம் மனித உரிமைகள் சம்பந்தமான தகவல்கள் சேகரிக்கப்படும் என்றும் மேலும் அவர்கள் கூறினர்கள்.

மேற்குறிப்பிட்ட இருநாடாளுமன்ற உறுப்பினர்களும் சென்ற மாதம் ஜெனீவாவிற்கும் பிரித்தானியாவிற்கும் விஜயம் செய்து இலங்கை அரசின் மனித உரிமைமீறல்களுக்கு எதிராக சர்வதேச ஆதரவைத் திரட்டுவதில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரு ஜனாதிபதிகள், இரு பாணிகள்

“பழைய ஜனாதிபதியின் பாணிவேறு; இன்றைய ஜனாதிபதியின் பாணிவேறு” என அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அடுத்த சார்க் உச்சிமகாநாடு கொழும்பிலேயே நடைபெற வேண்டும் என இலங்கை வற்புறுத்தி வருவதாகவும், இந்தியப்படை எமது மண்ணை விட்டு விலகாத நிலையில் தான் அதை மாலைதீவில் வைக்க வேண்டும என்ற ஆலோசனை முன் வைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

ஏனைய நாடுகள் கொழும்பில் இந்த உச்சிமகாநாடு நடைபெறுவதற்கு உடன்படாவிட்டால் சார்க் அமைப்பை விட்டு இலங்கை வெளியேறுமா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, அந்தத் தடையை எட்டும்போது நாம் தாண்டுவோம் என அமைச்சர் பதிலளித்தார்.

இது குறித்து மாலைதீவுடன் இலங்கை தொடர்பு கொண்டுள்ளதா என்று கேட்கப்பட்டபோது, இல்லை பாகிஸ்தான் தான் சார்க்கிற்குத் தலைமை தாங்குகிறது என அமைச்சர் பதிலளித்தார்.


இவ்வாண்டு சார்க் உச்சி மகாநாடு மாலைதீவிலும், அடுத்த ஆண்டில் இலங்கையிலும் நடத்தப்படலாமே என்று நிருபர் ஒருவர் கூறியபோது, அமைச்சர் அதற்குப் பின்வருமாறு பதிலளித்தார்: “அது தொடர்பு சாதனங்களின் கருத்து. ஜனாதிபதி அந்த வகையிற் பிரச்சினைகளைத் தீர்ப்பவர் அல்லர். முன்னைய ஜனாதிபதிக்கு ஒரு பாணி இருந்தது, திரு. பிரேமதாஸவிற்கோ வேறு பாணி இருக்கின்றது.”

இலங்கை இந்திய நட்புறவு ஒப்பந்தத்தின் நிலை பற்றிக் கேட்கப்பட்டதற்கு அமைச்சர் அளித்த பதில்: “இந்தியப்படை இங்கிருந்து விலகப்பட்டதும் ஜனாதிபதி இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவர் என்பதுதான் எமது நிலைப்பாடு. இலங்கையிலிருந்து இந்தியப்படை விலக முன்னர், ஒப்பந்தம் கைச்சாத்தாக வேண்டும் என ஒரு விசேட தூதுவர் மூலம் இந்தியா எம்மிடம் கோரியது இலங்கை அதற்கு உடன்படவில்லை”

## ‘ரோ’விற்கு கல்கட் கண்டனம்

இலங்கையில் தமிழ்ப் போராளிகளின் பலத்தைக் குறைவாக மதிப்பிட்ட இந்தியப் புலனாய்வுத் துறையை (ரோவை) விலகிச் சென்ற இந்திய அமைதிப்படைத் தளபதி லெப்டினட் ஜெனரல். ஏ. எஸ். கல்கட் கண்டித்தார்.

இலங்கையிலிருந்து விலகிச் சென்ற அமைதிப் படையின் கடைசி அணியை வரவேற்கும் வைபவத்தில் புதுடில்லியில் பேசுகையில்: கண்டித்த கல்கட் மேலும் சொன்னதாவது இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா இனிமேல் ராணுவ ரீதியாகத் தலையிடாது. இலங்கையில் இந்தியாவின் ராணுவப் பணி பூர்த்தியடைந்து விட்டது. அரசியல் பிரச்சினையில் ராணுவத்திற்கு எதுவித சம்பந்தமும் கிடையாது.




‘சற்றடே றிவியூ’வின் சகோதர வாரப் பத்திரிகை

திசை
THISAI

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா: 300/-
அரைவருடம்–ரூபா: 150/-

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 350/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரப் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு
த. பெ. 122,
யாழ்ப்பாணம்

# விலகிச் சென்ற இந்தியப் படை

## ஒரு வெட்டு முகம்

இம்மாதம் 24 ஆம் திகதியோடு இந்தியப் படையின் கடைசி அணியும் இலங்கையை விட்டு வெளியேறியது. வரும்போது, தமிழ் மக்களால் நிறை கும்பம்வைத்து மாலை சூட்டி வரவேற்கப்பட்ட இந்தியப்படை, விலகிச் செல்லும் போது, அதை வழியனுப்பி வைக்க எந்தத் தமிழனும் போகவில்லை. தமிழ் மக்கள், மௌனமாக பழிவாங்கியவனுக்குண்டாகும் திருப்தியோடு படைவிலகலை அவதானித்துக் கொண்டிருந்தார்கள்.

எந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியப்படை இலங்கைத் தீவுக்குள் நுழைந்ததோ, அந்த ஒப்பந்தத்திற்கு எதிரான சக்திகள் வலிமை பெற்றதான, அல்லது நிறுவப்பட்டதான ஒரு சூழ்நிலையில் அது விலகிச் சென்றிருக்கிறது.

தமிழ் மக்களின் மிகக்கெட்ட காலம் என்று சொல்லப்படக் கூடிய 32 மாதகாலம் இந்தியப் படை இலங்கையில் நிலைகொண்டிருந்தது. இந்த 32 மாதங்களிலும் முதலிரு மாதங்களில் ஒருவகை பொய்யான அமைதி நிலவியது. கிட்டத்தட்ட 70 நாட்களின்பின் அந்த அமைதி சிதறியது. போர் மூண்டது; இந்திய அரசு ராணுவ ரீதியாகவும் தோல்வி கண்டது. அரசியல் ரீதியாகவும் தோல்வி கண்டது. அவமானத்தோடும் காயத்தோடும் விலகிச் சென்றது. ராணுவ ரீதியில் புலிகளை நிராயுதபாணிகளாக்க அவர்களால் இயலவில்லை. உலகின் நாலாவது பெரிய ராணுவத்தால் நகரங்களையும் பிரதான நெருக்களையுமே கைப்பற்ற முடிந்தது. அங்கும்கூட திடீர்த்தாக்குதல்களின்போது இழப்புக்குள்ளாக நேரிட்டது. கிராமங்களை அவர்களால் கைப்பற்றவே முடியவில்லை. காடுகளைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?

### சொந்தக்காலில் நிற்றல்

83 யூலைக் கலவரத்தின் பின்பு எல்லா இயக்கங்களின் தலைமைகளும் தமிழ் நாட்டிலேதான் மறைந்து வாழ்ந்தன. பயிற்சிக்கும், பணந்திரட்டவும், பிரசார வசதிகளுக்கும் தமிழ் நாடு ஒரு பாதுகாப்பான பின்தளமாயிருந்தது. ஆனால் இந்தியப் படைகளுடனான போர் ஆரம்பமானதின் பின் புலிகள் தமிழ் நாட்டிலும் வேட்டையாடப் பட்டார்கள். தங்கள் சொந்தக் காடுகளையே பின்தளமாகக் கொண்டியங்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் அவர்களுக்கேற்பட்டன. தங்கள் சொந்தக்காடுகள்தான் பாதுகாப்பான, நன்னிறைவான மறைவிடங்கள் என்ற அனுபவத்தை இந்தியப் படையுடனான இரண்டு ஆண்டுகளுக்கும் மேலான போரில் புலிகள் பெற்றுவிட்டார்கள். இந்தப் பிராந்தியத்தில் அவர்கள் சந்திக்கக் கூடிய, மிகப்பெரிய ராணுவத்தோடு (கிட்டத்தட்ட ஒரு லட்சத்துக்கும் அதிகமான துருப்புக்கள்) அவர்கள் பொருதியபோது தங்கள் சொந்தக் காடுகளையே பின்தளமாகக் கொண்டியங்கினார்கள். இனி அவர்கள் சந்திக்கக்கூடிய எந்த ஒரு எதிரியோடும், தங்கள் சொந்தக்காடுகளையே பின்தளமாகக் கொண்டு (வேறு எந்தநாட்டிலும் தங்கியிராது) போர்புரிவது புலிகளைப் பொறுத்தவரை கஷ்டமாக இராது.

### ரோவின் அம்பலம்

இந்தியப் படையின் இலங்கை வருகையோடுதான் இந்தியாவின் புலனாய்வு நிறுவனமான 'ரோ' முன்னெப்போதுமில்லாதபடி அம்பலமாக்கப் பட்டது. சர்வதேசப் பரப்பில் அது அபகீர்த்திக்கு ஆளாகியது. புலிகள்தான் முதலில் 'ரோ'வைப் பகிரங்கமாக அம்பலப்படுத்தினார்கள். தொடர்ந்து தமிழ்ப் புத்தி ஜீவிகளும் பத்திரிகைகளும், கொழும்புப் புத்தி ஜீவிகளும், கொழும்புப் பத்திரிகைகளும், இந்தியப் புத்திஜீவிகளும் இந்தியப் பத்திரிகைகளும் ரோவைச் சாடலாயினர். ரோவிற்கு எதிரான விமர்சனங்கள் திரளத் தொடங்கின. அமெரிக்காவின் சி. ஐ. ஏ. ஐப்போல; ரஷ்யாவின் கே. ஜீ. பி யைப்போல, 'ரோ'வும் இந்திய வல்லாதிக்கத்தின் குறியீடாகியது. ஆனாலும், இலங்கையில் ஒரு சிறு இனத்தின் போர்த்திறனிற்கும், மரணங்களிற்கும் முன், 'ரோ' இந்து மாகடலில் தோற்கடிக்கப்பட்டதோர் உளவு நிறுவனம் ஆகிவிட்டது.

இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே. என் தீக்ஷித் நடந்துமுடிந்த கொடுமைகளுக்கெல்லாம் ரோவே காரணம் என்ற தொனிபடக் கூறியுள்ளார். இதன் மூலம், ஏற்கனவே அபகீர்த்திக்காளாகியிருக்கும், 'ரோ' மீது வீணானதொரு போரிற்கான முழுப் பழியையும் தீக்ஷித் சுமத்தப்பார்க்கிறார். ஆனால், நடந்து முடிந்த போரிற்கான பாவத்திலிருந்து தன் கைகளைக் கழுவிக்கொள்ள முனையும் ஒரு புதிய பிலாத்துவாகவே தீக்ஷித் எமமுன் நிற்கிறார்.

### இந்தியாவின் ஆதரவு என்பது ஒரு மாயை

அரசியல் ரீதியாக இலங்கையில் இந்தியப் படைகள் தோற்றமை என்பது, புலிகளுக்கும், இலங்கை அரசிற்குமிடையிலான பேச்சு வார்த்தைகளில் இந்தியாவின் மத்தியஸ்தம் புறக்கணிக்கப்பட்டதிலிருந்தும், இந்தியா தமிழர்களின் காவலன் என்ற மாயை உடைக்கப்பட்டமையிலிருந்தும் புரிந்து கொள்ளப் படவேண்டியதொரு தோற்றப் பாடாகும்.

விடுதலைப் புலிகள் மீதான ராணுவ நிர்ப்பந்தங்கள் மூலம் அவர்களைப் பலவீனப்படுத்தி, வெறுமனே ஒரு வன்முறைக் கும்பலாக, அவர்களின் அரசியல் அந்தஸ்தைக் குறைத்துவிடவே இந்தியா எண்ணியது. விடுதலைப்புலிகள் நிபந்தனைகளற்ற யுத்த நிறுத்தத்திற்கும், பேச்சுவார்த்தைக்குமாக, நேரடியாக அல்லது மறைமுகமாக மேற்கொண்ட சகல எத்தனங்களையும் ராஜீவ் அரசு புறக்கணித்தது; அவமதித்தது. ஆனால், ஜனாதிபதி பிரேமதாஸவின் பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகளற்ற அழைப்பைப் பற்றிக்கொண்டு, புலிகள் இந்திய அரசின் முகத்தில் அறைந்தாற்போல் கொழும்பிற்குப் பேசப்போனார்கள். இது இந்திய அரசால் எதிர்பார்க்கப்படாத ஒரு திடீர்த் திருப்பமாகும். அந்த நேரத்தைப் பொறுத்தவரை மிகவும் புத்திசாலித்தனமானதொரு துவக்கமாகும். புலிகளும், இலங்கை அரசும் இந்திய அரசின் மத்தியஸ்தத்தைப் புறக்கணித்து விட்டுப் பேசலானார்கள்.

இலங்கை இனப்பிரச்சினையில், இனங்களுக்கிடையிலான பதட்டந்தான் இந்தியாவுக்குள்ள பிரதான துரும்பு ஆகும். சண்டையிடும் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில், 'தமிழரில் இரக்கமுடைய' மத்தியஸ்தராக வேஷம்காட்டி, இத்தீவில் தன் பிடியைத் தளராமல் வைத்திருப்பதே, 1983 யூலைக்குப் பின் இந்திய அரசின் அணுகுமுறையாக இருந்து வந்துள்ளது. ஆனால், புலிகள் கொழும்புப் பேச்சுவார்த்தையில் இந்திய அரசின் மத்தியஸ்தம் தேவையற்றதாகியதும், இலங்கையில் இந்தியப் படையின் பிரசன்னம் அருவருப்பான தொன்றாகியது.

இந்தியப் படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த 32 மாத காலத்தையும், இந்திய ராஜதந்திரம் துர்க்கிரகங்களால் பீடிக்கப்பட்டிருந்த ஒரு காலம் என்றே குறிப்பிட வேண்டும். டில்லியின் பண்டிதர்கள் இலங்கைத் தமிழர்களை மிகவும் பிழையாகப் புரிந்து கொண்டுவிட்டார்கள். புலிகளின் விட்டுக்கொடுப்புகளற்ற போராட்டமும், பிரேமதாஸ அரசின் நெருக்குதல்களும், மாறிவரும் சர்வதேசச் சூழல் காரணமாயும், இந்திய அரசு தன் படைகளை விலக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. இந்திய அரசால் தமிழர்களைப் பகைத்திருக்கவும் முடியவில்லை, சிங்களவர்களைத் திருப்திப் படுத்தவும் முடியவில்லை. புலிகளோ. புதுப்பலத்தோடு நிறுவப்பட்டு விட்டார்கள். இந்திய அரசு நினைத்ததிற்கெல்லாம் நேர்மாறாகவே சம்பவங்கள் நிகழ்ந்தன. புலிகளுக்கும், கொழும்புக்கும் இடையிலான பேச்சுக்களில இந்திய மத்தியஸ்தம் புறக்கணிக்கப்பட்டமை, புலிகள் தங்கள் சொந்தக் காடுகளையே பின்தளமாகக் கொண்டியங்கும் ஆற்றலை, அனுபவத்தைப் பெற்றமை, புலிகளின் விரோத இயக்கங்கள தமிழ் மக்களிடம் வேர் கொள்ள முடியாது போனமை, இன்று முழுத்தீவுமே இந்திய எதிர்ப்பில் ஒன்றுபட்டுவிட்டமை என்பவற்றிற்கூடாக, இந்தியப்படை இலங்கையில் நிலைகொண்டிருந்த 32 மாத காலத்திலும் இந்தியாவின் நலன்களுக்கு விரோதமாகவே செயற்பட்டிருக்கிறது எனலாம். □

நசிகேதன்



''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்''
— கொன்றை வேந்தன்

தாயும் தகப்பனும் முன்னே காணப்பட்ட தெய்வங்கள்
(Mother and Father are Visible Gods)

ஔவைப் பிராட்டியார் அருளிய ''கொன்றை வேந்தன்'' தமிழ், ஆங்கில மொழிப்புடன் பெற்றுப் பயன்பெற ''மில்க்வைற்'' மேலுறையிலிருந்து 25 திருக்குறள் அனுப்பி வையுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

## புதிய எம். பி.

ஈழவர் ஜனநாயக முன்னணியைச் சார்ந்ததிரு. இ. இரத்தின சபாபதி தமது எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்ததின் பேரில் திரு எஸ். தில்லைநாதன் புதிய எம். பியாக நியமிக்கப் பட்டுள்ளார்.

## பலாலி பேச்சுவார்த்தை : இணக்கம் காணப்பட்டது

அமைச்சர் ஹமீத்திற்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே புதன்கிழமை (28-3-90) பலாலியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் ஐந்து அம்சங்களில் உடன்பாடு காணப்பட்டதாக அறியப்படுகின்றது

உடன்பாடு காணப்பட்ட விடயங்களாவன: வல்வெட்டித்துறை இராணுவ முகாம் 48 மணித்தியாலங்களுக்குள் மூடப்படும்; பலாலியிலும யாழ். கோட்டையிலும் இலங்கை ராணுவம் தொடர்ந்தும் தங்கியிருக்கும்; காரைநகர் கடற்படைத்தளம் விஸ்தரிக்கப் படமாட்டாது; பலாலி ராணுவ முகாமும் விஸ்தரிக்கப்படமாட்டாது; பலாலி விமானநிலையம் சர்வதேச தரத்திற்குயர்த்தப்படும்; நயினாதீவுப் படகுச் சேவையில சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்படும். கோயில் துறங்குதுறையை மக்கள் பாவிக்கலாம்.

இப்பேச்சு வார்த்தைகளில் அரசு தரப்பில் அமைச்சர் ஹமீட்டும், முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிக்கலவும், பொலிஸ்மா அதிபர் ஏணஸ்ற் பெரேராவும், இராணுவத்தளபதி லெப். ஜெனரல் வனசிங்காவும், கடற்படை வைஸ் அட்மிரல் M.A. சில்வாவும், வடமத்திய வடகிழக்கு இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஸ்டான்லி சில்வாவும் கலந்துகொண்டனர்.

விடுதலைப்புலிகளின் சார்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்டன் பாலசிங்கம், யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்டான்லி டொமினிக், யாழ் மாவட்ட இராணுவத் தளபதி பானு கட்சி அமைப்பாளர் ராஜன், தீவுப்பகுதி ராணுவப் பொறுப்பாளர் ஜேம்ஸ் உட்பட வேறு சிலரும் கலந்து கொண்டனர்.

## இராணுவத் தாக்குதலை அரசாங்கம் நிறுத்தும்

ராணுவத்தாக்குதல் நடவடிக்கைகள் யாவற்றையும் அரசாங்கம் நிறுத்தவுள்ளது என்றும், சரணடைவோருக்கான தேசிய குழு ஒன்றினை அரசாங்கம் விரைவில் நியமிக்கப்போவதாகவும் அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன அண்மையில் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

# உலகப் பெண்களே ஒன்றுசேருங்கள்

கண்ணம்மா

மார்ச் மாதம் 8 ஆம் திகதி சர்வதேசப் பெண்கள் தினத்தையொட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே, யாழ். பல்கலைக்கழக பெண்கள் சங்கத்தாலும், பெண்கள் ஆய்வு வட்டத்தாலும் ஒரு கருத்தரங்கு நடாத்தப்பட்டது. "பெண்களும் அபிவிருத்தியும் – ஒரு மீள்பார்வை" என்ற தலைப்பின் கீழ் நால்வர் பேசினார்கள். இவர்களுள் மூவர் பெண்களாக இருந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாக இருந்தது. ஏனெனில் பெண்களுடைய பிரச்சினைகள் என்ன, அவற்றுக்கான தீர்வுகள் என்ன என்பதை ஆண்களே இத்தனை காலமாக விளக்கிவந்தார்கள். இப்போது பெண்கள் தமது வரலாற்றுக் கடமையை உணர்ந்து செயற்பட்டு வருகிறார்கள் என்பது புலனாகிறது.

க்கருத்தரங்கின் கேள்வி நேரத்தின்போது கூறப்பட்ட சில கருத்துக்களை ஆராய்தல் பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன். சபையில் இருந்த ஒருவர், 'இங்கே இருந்துகொண்டு ஆபிரிக்கப் பெண்கள் பற்றியும் ஆசியப் பெண்கள்பற்றியும் கதைத்துக் கொண்டிருப்பது வீண்வேலை. தொழில்நுட்ப முன்னேற்றம் வந்தவுடன் பெண்களுக்குப்பூரண விடுதலை வந்துவிடும்' என்று கூறி, யப்பான், தென்கொரியா போன்ற நாடுகளை உதாரணமாக எடுத்துக்காட்டினார்.

யப்பான், தென்கொரியா, போன்ற நாடுகள் நவீன தொழில் நுட்ப முறைகளைத் தமது விவசாயத் துறையிலும் கைத்தொழில் துறையிலும் கையாளுகின்றன என்பது உண்மைதான். ஆனால் அங்கு வர்க்கச் சுரண்டல் ஒழிந்து விட்டதா? அல்லது பெண்களின் இரண்டாம்பட்ச நிலை ஒழிந்துவிட்டதா? தொழில்நுட்ப அபிவிருத்தி பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கு எவ்வளவு தூரம் வழிகோலியுள்ளது?

இந்நாடுகளைப் பொறுத்தவரையில் தொழில் நுட்ப முன்னேற்றமானது பெரும் கம்பனிகளினதும் (Toyota போன்றன) முதலாளி வர்க்கத்தினதும் முதலினையும், இலாபத்தினையும் பெருக்க உதவுகின்றதே யொழிய, தொழிலாள வர்க்கத்திற்கோ அல்லது உழைக்கும் பெண்களுக்கோ அது உதவுவதாக இல்லை. ஆசியாவிலே பெண்களை மிகவும் அதிகளவில் ஒடுக்கும் நாடுகளில் யப்பானும் ஒன்று என்பதைப் பலரும் அறிவர்.

தொழில்நுட்ப முன்னேற்றம் தான் ஒருநாட்டின் பெண்களின் முன்னேற்றத்தைக் குறிக்கும் குறிகாட்டியாகக் கொள்ளப்படின், மேற்கு ஐரோப்பிய, வட அமெரிக்கப் பெண்கள் எல்லோரும் பூரண விடுதலையடைந்தவர்களாக அல்லவா இருக்க வேண்டும்? ஆனால் அங்கு என்ன நிகழ்ந்துள்ளது? ஆண்களும் பெண்களும் ஒரு தொழிற்சாலையில் ஒரே வேலையைச் செய்தால்கூட, அந்த வேலைக்கு ஆண்களுக்குப் பெண்களைவிட கூடுதலான சம்பளம் வழங்கப்படுகிறது. ஆண்கள் செய்யும் வேலையை 'வினைத்திறன் உள்ளது' (Skilled) எனவும் பெண்கள் செய்யும் வேலையை 'வினைத்திறன் அற்றது' (Unskilled) எனவும் வகைப்படுத்துவதன் மூலம், அரசாங்கச் சட்டங்களுக்கு முரண்படாதவாறு, கம்பனிகளால் ஆண்களைவிட பெண்களுக்குக் குறைந்த சம்பளத்தைக் கொடுக்கவும், தமது இலாபத்தை உச்சப்படுத்தவும் முடிகின்றது. இது மட்டுமல்ல, பொருளாதாரம் மந்தநிலைகளை (Economic depression) அடையும்போது, பெண்களே முதலில் வேலையை இழக்கவேண்டியுள்ளார்கள். அதேபோல, புதிய தொழில் நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படும் வேளைகளில் தொழிலாளர் குறைப்பு நடைபெறும்போதும், பெண்களே அதிகளவில் வேலையில் இருந்து நீக்கப்படுகிறார்கள். ஒட்டு மொத்தமாகப் பார்க்கையில் தொழில்நுட்ப அபிவிருத்தியால் ஆண்களைவிட பெண்களே கூடிய அளவில் பாதிப்படைகிறார்கள்.

மூன்றும் உலகப் பெண்களுடன் ஒப்பிடுகையில், கைத்தொழில்மயமான நாடுகளில் வாழும் பெண்களின் வாழ்க்கைத்தரம் உயர்வானது. எனினும் இதற்கான காரணங்களை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். சர்வதேச வர்த்தகம், அந்நிய முதலீடு, பல்தேசியக் கொம்பனிகள் என்பவற்றின் மூலம் இந்நூற்றாண்டிலும், காலனித்துவ ஆட்சியின் மூலம் கடந்த மூன்று நூற்றாண்டுகளிலும், மேற்கத்தைய உலகு மூன்றும்உலகில் இருந்து சுரண்டிச் செல்பவையும், சென்றவையும்தான் மேற்கத்தைய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெருமளவில் உதவி உள்ளன.

மேற்கத்தைய பெண்களின் இச் சார்பு ரீதியான உயர்ந்த வாழ்க்கைத்தரம் (3 ஆம் உலகுடன் ஒப்பிடுகையில்), அவர்களுக்குப் பால் ரீதியான விடுதலையை ஏற்படுத்தவில்லை. அங்குள்ள பெண்களும் தொடர்ந்தும் குடும்பம், அரசு, மதம் போன்ற நிறுவனங்களினால் பொருள் முதல்வாத அடிப்படையிலும், சித்தாந்த ரீதியிலும் தொடர்ந்து ஒடுக்கப்படுகிறார்கள்; சுரண்டப்படுகிறார்கள். இதைவிட, பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் குறைவதாக இல்லை. உலகில் உள்ள பெண்கள் அனைவருக்கும் பொதுவான இவ் அடக்குமுறையை உணர்ந்தே, உலகெங்கிலும் உள்ள பெண்ணிலைவாதிகள் சர்வதேச பெண்கள் தினத்தைக் கொண்டாடுகிறார்கள். சர்வதேச சகோதரித்துவம் (Sisterhood) என்பது உலகெங்கிலும் உள்ள பெண்ணிலைவாதிகளுக்கு அர்த்தம் மிக்க, புனிதமான ஒரு உறவாக உள்ளது. இது ஏறத்தாழ, 'உலகப்பெண்களே ஒன்று சேருங்கள்!' என்ற கோஷத்திற்குச் சமமானதாகப் பிரயோகிக்கப்படுகின்றது.



எங்கள்பெண்களின் பிரச்சினைகள் சில தனித்துவமானவை; ஆனால் பல, ஏனைய நாட்டுப் பெண்களுக்கும் பொதுவானவை. பாட்டாளிவர்க்கத்திற்குத்தான் தெரியும் அதன் ஒற்றுமையின் வலிமையும் முக்கியத்துவமும், அதேபோல, பெண்களுக்குத்தான் தெரியும் சர்வதேசப் பெண்களின் ஒற்றுமையின் வலிமையும் முக்கியத்துவமும்!

இக் கூட்டத்திலே பெண்கள் பிரச்சினைகள் குறித்து இளந்தலைமுறையைச்சேர்ந்த ஆண் சகோதரர்கள் கொண்டிருந்த விழிப்புணர்வும், அக்கறையும் பலருக்கு உற்சாகமும் நம்பிக்கையும் கொடுப்பதாக அமைந்தன. □

---

(ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர்களுக்கூடாகவும் 'சித்திரை நங்கைப்' போட்டியைப் புத்தாண்டு விழாவாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதை ஒட்டி, விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை இங்கே பிரசுரிக்கப்படுகிறது.)

# எமது கலாசாரத்தை மேம்படுத்துவோம்!

எதிர்வரும் சித்திரை மாதம் 14 ஆம் திகதிப் தமிழ் புது வருடம் பிறக்கிறது.

எமது தாயகம் இன்று முழுமையான சுதந்திரம் பெற்ற பூமியாகத் திகழவில்லை என்றாலும் —

கடந்த சில வருடங்களாக எம் மக்கள் அனுபவித்து வந்த இன்னல்கள் இன்று குறைந்துவிட்ட நிலையில், வருகின்ற புத்தாண்டை. ஆனந்தம் கலந்த ஆர்வமுடன் வரவேற்க மக்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

இது இயல்பானதே.

நாட்டில் இப்பொழுதே புத்தாண்டுக் களை தோன்றிவிட்டது.

ஒவ்வொரு பிரதேசத்தில் உள்ளவர்களும் தத்தமது வாழ்நிலைமைகளுக்கும் கலாசாரப் பாரம்பரியத்திற்கும் ஏற்ப கலை – கலாசார நிகழ்ச்சிகளை வரும் புத்தாண்டு தினத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்து கொண்டு இருக்கிறார்கள்.

இதே வேளை புத்தாண்டு விழா நிகழ்ச்சிகளில் ஒன்றாக 'சித்திரை நங்கைப்' போட்டி நடைபெற இருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது.

ஒவ்வொரு அரசாங்க அதிபர்களுக்கூடாகவும் சித்திரை நங்கைப் போட்டியை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சி மூலம் அழகில் சிறந்த யுவதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டு அவர் 'சித்திரை நங்கை' எனப் பெயர் சூட்டப்படுவார்.

தெரிவு செய்யப்படும் நங்கைக்கு சூட்டப்படும் பெயரில் மாற்றம் ஒன்றைத் தவிர இந்த 'சித்திரை நங்கைப்' போட்டிக்கும், ஆபாச அங்க அசைவுகளுடனும், அரைகுறை உடையுடனும் வெளிநாடுகளில் நடைபெறும் அழகுராணிப் போட்டிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

நாகரிக வளர்ச்சி என்பது வெளிநாட்டு நடைமுறைகளை அப்படியே பின்பற்றுவதல்ல. எமது சமுதாயத்தின் கலாசார மேம்பாட்டுக்குரிய நடைமுறைகளையே நாம பின்பற்ற வேண்டும்.

பெண்களை அழகு என்ற பெயரில் அசிங்கமாக்குகின்ற இத்தகைய அழகுப் போட்டிகளையும், இப்போட்டிகளின் மூலம் எமது கலாசாரத்தைச் சீரழித்து எமது போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்கின்ற நடவடிக்கைகளையும் நாம் அனுமதிக்க முடியாது.

எமது தேசத்தின் விடுதலைக்காக—

எமது சமூக, பொருளாதார அரசியல் தனித்துவததைப் பேணுவதற்காக —

நாம் இன்று எத்தனையோ உயிர்களைத் தியாகம்செய்து, இரத்தம் சிந்திப் போராடிக் கொண்டிருக்கிறோம். உன்னதமான இந்தப் போராட்டத்தில் தமது பங்கினை உணர்ந்து இன்று ஆயிரக்கணக்கான பெண்கள் ஆயுதம் தாங்கிய போராளிகளாகியுள்ளனர். பல்லாயிரக்கணக்கான பெண்கள் போராட்டச்திற்கெனத் தமை அர்ப்பணிக்க மனப்பூர்வமாய் முன்வந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் பெண்களின் விடுதலையைப் பின்தள்ளும் வகையில் அமைந்ததும், எமது தனித்துவமான கலாசாரத்தைச் சின்னாபின்னப்படுத்துவதனூடாக எமது விடுதலைப் போராட்டத்தினைக் கொச்சைப்படுத்தும் வகையில் அமைந்ததுமான இந்த 'சித்திரை நங்கைப்' போட்டிக்கு என்ன அவசியம் வந்தது?

ஒரு இனத்தின் தனித்துவத்தைக் காட்டுவது அதன் கலாசாரமே!

தமிழினத்தின் தேசியத் தன்மையைக் குன்றச் செய்யக்கூடிய இது போன்ற கலாசாரச் சீரழிவு நிகழ்ச்சிகள் ஒருபோதும் எம் மண்ணில் இடம் பெறாதவாறு நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ப்படியான கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகளில் எம் மகளிர் ஒரு சிலர் ஈடுபடுவதும், இப்படியான சிந்தனைகளை மக்கள் மனதில் தூண்டி விடுவதும், ஊக்குவிப்பதும் எத்தனை கேவலமானது?

காலத்தின் தேவைக்கேற்ப – எமது பாரம்பரியத்தை, எமது கலாசாரத்தை வெளிப்படுத்தக்கூடிய, வளர்க்கக் கூடிய, பெண்களின் தேசத்தின் விடுதலைக்கான எழுச்சியை ஊட்டக்கூடிய எத்தனையோ நிகழ்ச்சிகளை நாம் நடத்தலாம.

எப் மக்களின் தேசிய உணர்வை மழுங்கடிக்கக்கூடிய இது போன்ற கீழ்த்தரமான நிகழ்ச்சிகள் எம் மண்ணில் இடம் பெறாதவாறு எம் மக்கள் அனைவரும் ஒமித்த சிந்தனையுடனும், தெளிவான நோக்குடனும செயற்பட வேண்டும்.

தமிழீழப் பிரதேசத்தின் எந்தவொரு மூலையிலாவது இது போன்ற கலாசாரச் சீரழிவுகள் இடம்பெற அனுமதிக்க முடியாது.

இதுபோன்ற கலாசார சீரழிவு நடவடிக்கைகளை ஒழிப்பதன் மூலம், எமது கலாசார மேம்பாட்டுக்காக உழைப போம் என உறுதி பூணுவோம். □

# கனவுகள் - ஒரு விஞ்ஞான நோக்கு

ஜி. எஸ். சவரிமுத்து

எலியாஸ் ஹர்வ் தையல் இயந்திரத்தின் பொறிமுறையை வடிவமைக்க முயன்று கொண்டிருந்த காலம். எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. ஒரு நாள் இரவு எலியாஸ் ஒரு கனவு கண்டார். அந்தக்கனவில் அவருக்குத் தோன்றிய ஒரு உருவம் "நீ தையல் இயந்திரத்தை உருவாக்கு. அல்லாவின் உன் உயிரை எடுப்பேன்'' என்று கூறி, ஒரு ஆயுதத்தால் குத்த முயன்றது. அந்த ஆயுதத்தின் கூரிய முனையில் ஒரு துவாரம் இருந்தது, எலியாசுக்குப் புலனாகியது. வழக்கத்துக்கு மாறான இந்த அமைப்புப் பற்றிய எண்ணத்துடன் எழுந்த எலியாஸ், தையல் இயந்திரத்தை வெற்றிகரமாக வடிவமைத்தார்.

"நனவு நிலையில் நாம் சிந்திக்கும் கருமத்தைக்கனவுகள் மேலும் மேம்படுத்த உதவுகின்றன'' என்று கூறுகிறார் கிறிஸ்தோப்பர் இவான்ஸ் — இங்கிலாந்தின் பிரபல உளவியலாளர். "வாழ்க்கையின் நடைமுறைப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு கனவுகள் தான்'' என்கிறார், ஜொனத்தன் வின்சன் என்ற மற்றுமொரு உளவியலாளர். இவரால் எழுதப்பட்ட 'Landscapes of the Night' என்ற நூல் கனவுகளைப் பற்றிய, பல பயனுள்ள முக்கியமான செய்திகளைத் தந்துள்ளது.

## கொம்பியூட்டரைப் போல

நாம் நித்திரை செய்யும் போது எமது மனத்தில் உள்ள பழைய தகவல்களையும், புதிய எண்ணங்களையும் ஒன்று சேர்க்கின்றோம். ஒரு கொம்பியூட்டருக்கு ஒரு பிரச்சினையைச் சமர்ப்பிக்கையில் எவ்வாறு அளவையியல் ரீதியில் (Logical) சிந்தனையை உருவாக்கி, தனக்குள் தீர்வைத் தருகின்றதோ (off — line processing) அவ்வாறான வேலையையே, நாம் துயில் நிலையில் செய்கிறோம். பழைய, புதிய தகவல்கள் ஒன்றுசேர்க்கப்படுவதோடு மட்டுமல்லாமல், தேவையற்ற தகவல்கள் நீக்கப்பட்டு, எஞ்சியிருக்கும் விடயங்கள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. Rapid Eye Movement (REM) எனப்படுகின்ற விரைவுக் கண்ணசைவு நிலையில் (கனவு காணும் போதுள்ள ஓய்வு நிலை) இவை நடப்பதால் இதை எம்மால் அறிய முடியாதுள்ளது.

அடுத்தநாள் நிகழப் போகும் ஒரு விடயத்தைப் பற்றி சிந்தித்தவண்ணம் நாம் நித்திரைக்குச் செல்லும் போது, கனவுகள் இந்தப் பிரச்சினையை ஏற்கனவே ஒத்திகை பார்த்து விடுகின்றன. அதாவது பிரச்சினைக்குத்தகுந்த ஒரு விடையைத் தருகின்றன. ஆனால் இதன் பலனை நாம் முழுமையாகப் பயன்படுத்துவதில்லை. முழுமையான பலனை அடைவதற்குத் தேவையான சில வழிமுறைகளை ஆர்தர் உலென் என்ற எழுத்தாளர் Feeling Fine என்ற நூலில் விபரிக்கிறார்.

## பயன்பெற வழிமுறைகள்

1. எம்மைத் தயார்ப்படுத்தல்– நித்திரைக்குச்செல்ல முன்னர் 'எனது கனவுகளை எல்லாம் ஞாபகப்படுத்த வேண்டும்' என்றமனவுறுதியை உருவாக்க வேண்டும்:

2. காலையில் நித்திரை விட்டு எழும்பு முன்னரே, பொதுவாக மனிதன் கனவு காண்கிறான். ஆகவே வழமையாக நித்திரைவிட்டு எழும்பும் நேரத்துக்கு அரைமணிநேரம் முன்னர் மணிக்கூட்டு 'அலார்மை' (Alarm) தயார் செய்துவிட்டுப் படுங்கள். இதனால் அந்தக்கனவை முழுமையாக உங்களால் அறியமுடியும். நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் உருவாகும்.

3. இரவில் இடையிடையே நித்திரையில் நின்று எழும்ப நேர்ந்தால், உங்கள் மனதைச் சரியாக ஆராய்ந்து, நீங்கள் கண்ட கனவை வரிசைக்கிரமமாக எழுதுங்கள்.

## கனவுகளின் பொருள்

ஆரம்பத்தில், இந்தக்கனவுகள் பொருள் நிறைந்தவையாக எமக்குத் தோன்றாவிட்டாலும், காலகதியில் இவற்றின் உட்பொருள்கள் நிச்சயம் எம்மைப் பிரமிக்க வைக்கும். முதலில் உங்கள் கனவுகளுக்கு நேரடிப் பொருளைப்பெறுங்கள். பின்னர் அதன் மறைபொருளை நீங்களாகவே உணர்ந்து கொள்ளுவீர்கள். நீங்கள் வழமையாகக் காணக்கூடிய கனவுகளும் அவற்றுக்குச் சாத்தியமான சில பொருள்களும் கீழே தரப்படுகின்றன.

1. ஒரு பஸ்சையோ, புகைவண்டியையோ தவறவிடுகிறீர்கள் — வாழ்க்கையில் தகுந்த முன்னேற்றமடையவில்லைஎனப் பயப்படுகிறீர்கள்.

2. நீங்கள் வீதியில் நடந்து செல்லும் போது ஒரு புகார் வழியை மறைக்கிறது— அடைய முடியாதவொன்றை அடைய முயல்கிறீர்கள்.

3. சனக்கூட்டத்தின் மத்தியில் நிர்வாணமாக நடந்து செல்கிறீர்கள் — ஏதோ ஒரு வகையில் நீங்கள் பலவீனமடைகிறீர்கள்.

4 தொலைபேசியில் யாருடனோ பேசமுயல்கிறீர்கள். ஆனால் தொடர்பு கொள்ள முடியவில்லை — உங்களுக்கு மிகவும் வேண்டிய ஒருவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

இவ்வாறாக, நாம் காணும் ஒவ்வொரு கனவும் அர்த்தம் நிறைந்ததாக உள்ளது. 'இதைச்செய்ய வேண்டும்; இதைச் செய்யக் கூடாது' போன்ற முக்கியமான முடிவுகளை எடுக்கவும் கனவுகள் உதவுகின்றன,

## தகவல் சேகரிப்பு மையம்

எமது மூளையில் தகவல்களை சேகரித்து வைக்கும் பகுதி ஒன்று உள்ளது இது Hippo-campus எனப் பெயர் பெறும். ஆரம்பத்தில் இங்கு சேகரிக்கப்படும் தகவல்கள் பின்னர் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு 'நீண்டகால நினைவுப் பகுதி' என்ற பகுதிக்கு அனுப்பப்படுகின்றன. இங்கு சேகரிக்கப்படும் தகவல்கள் நீண்டகாலத்துக்கு நினைவில் நிலைத்திருக்கும். 'நேற்றுப் பார்த்த தொலைக்காட்சி நிகழ்ச்சியை நினைவுகூர முடியாத ஒரு முதியவர், நீண்டகாலத்துக்கு முன்னர் படித்த திருக்குறளை நினைவுகூருகிறாரே என்ற வியப்புக்கு விடை; மேலே கூறப்பட்ட விளக்கம் தான்!

ஒரு சிறுகுழந்தை பிறந்த பின் சில வருடங்களுக்கு, அதற்குத் தேவையான முக்கியமான ஒன்று – நித்திரைதான். நித்திரையின்போது அதன் கனவில் உருவாகும் எண்ணங்கள்தான் அதன் வருங்கால ஆளுமையை நிச்சயிக்கின்றன. இதனால் தான் வைத்தியர்கள் குழந்தை ஒரு அமைதியான சூழலிலே ஒரு நாளுக்கு 12 மணி நேரமாவது தூங்க வேண்டும் என்றுகூறுகிறார்கள். எதிர்காலத்தில் குழந்தையின் நடத்தை எவ்வாறு இருக்கப் போகிறது என்பதற்கு, இந்த நித்திரைதான் அடியத்திவாரம்.

கனவுகள் எவ்வளவு தூரம் பொருள் நிறைந்தவை என்பது அண்மைக் காலங்களிலேதான் அறிவியல் ரீதியாக வெளிப்படுத்தப்பட்டிருப்பினும் 1800 ஆம் ஆண்டுகளிலேயே, பல பிரபலமான அறிஞரும், பெரியார்களும் கனவுகளைத் தமது வாழ்க்கையிலே பயன்படுத்தியுள்ளார்கள்.

இரசாயனவியலில் முக்கியமான பாடப்பகுதியாகிய 'சேதன இரசாயனத்'தில் பென்சீன் எனப்படும் சேர்வையின் கட்டமைப்பையறிவதிலே விஞ்ஞானிகள் பல சிக்கல்களை எதிர்நோக்கினார்கள். 1865 இலே ஜேர்மனிய விஞ்ஞானியாகிய பிரட்ரிக் அகஸ்ட் கெக்குலே என்பவர், ஒரு பாம்பு தனது வாயால் தனதுவாலையே கவ்விக் கொண்டிருப்பதாக ஒரு கனவு கண்டார். இந்தக் கனவை அடிப்படையாக வைத்து, பென்சீனின் கட்டமைப்பை கெக்குலே வெளியிட்டார். உலகமும் அதனை ஏற்றுக் கொண்டது. பிரித்தானிய கணித மேதையாகிய பெர்ட்ரான் றஸ்ஸல் பல கணிதத் தேற்றங்களைக் கனவுகளின் மூலமாகவே வடிவமைத்ததாகக் கூறியிருக்கிறார். ஸ்ரீவ் அலன் என்பவரால் படைக்கப்பட்ட "This Could be the start of some thing big" என்ற பிரபல பாடல் கூட, அவரது கனவிலிருந்தே உருப்பெற்றது.

சரியான ஒரு வாழ்க்கைப் பாதையில் அடியெடுத்து வைப்பதற்கு கனவுகள் எவ்வளவு தூரம் உதவுகின்றன என்பது, பலருக்கு வியப்பாக இருக்கலாம். ஆனாலும் சில பெரியார்களின் கண்டுபிடிப்புகளும், அறிவியல் உலகம் 'கனவு' என்பதற்கு கொடுத்துள்ள விளக்கமும் அவை எவ்வளவு தூரம் ஒரு மனிதனுக்குத் தேவை என்பதை நிச்சயம் புலப்படுத்தும். "கனவுகளே கனவுகளே, காலமெலாம் வாரீரோ" என்று கவிஞன் ஏன் பாடினான் என்பதற்கு, அறிவியல் சார்பாகவும் விளக்கம் கிடைத்துள்ளது! □

# "மண்ணே உன்னை வாழ்த்தி நின்றனம்"

இலங்கையின் பெரும் பிரச்சினைகளில் மண் அரிப்பும்ஒன்று. ஆண்டுதோறும், இலட்சக் கணக்கான தொன்கள் மண், மழை நீரினால் சமுவப்பட்டு, ஆறுகள் வழியாகக் கடலுக்கு அள்ளிச் செல்லப்படுகின்றது.

மண், ஒரு நாட்டின் பெரும் சொத்துக்களில் ஒன்று. அதை இழப்பின், நாடே வறுமையடைந்து விடும். பயிர்கள் வளர்வதற்கு மண் தேவை; அதுவும் செழிப்பான மண் தேவை. மண்ணை இழப்பின் பயிர்கள் வளரா. பயிர்கள் வளராவிடின் மனிதன் தன் உணவுக்கு எங்கே போவது? விறகையும் மரங்களையும் எப்படிப் பெறுவது?

கிணறு வெட்டியவர்களுக்குத் தெரியும், ஒரு சில அடிகள் ஆழத்திற்கு மட்டுமே மண் உண்டு என்பது; அதற்குக் கீழ் கற்பாறை.

பூமியின் மேற்பரப்பிலுள்ள மெல்லிய மண் படலம் எப்படித்தோன்றியது?நாம் வாழும் பூமி 400 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. தோன்றியபோது அது ஒரு தீப்பிழம்பாக இருந்தது. பின்பு படிப்படியாகக் குளிர்ந்து மேற்பரப்பு உருவாகியது. அப்பொழுது அது ஒரே பாறை - தீப்பாறை என்று அதைப், புவிச்சரிதவியலாளர் அழைப்பார்கள். காலப்போக்கில் அப்பாறை சூரிய வெப்பத்தில் வெடித்து. காற்றாலும் மழையாலும் அரிக்கப்பட்டு,உடைக்கப்பட்டு, மண்ணாக மாறியது.

ஆரம்பத்தில் அது ஆற்று மணல் போலப் பருக்களாகத்தான் இருந்திருக்கும். அதன் பின் புல் முளைத்து, மரம் வளர்ந்து, இலைகள், சருகுகள் உதிர்ந்து. மண் புழுக்களும் கறையானும் மற்றும் பூச்சி புழுக்களும் வாழ்ந்து மண் பதம் பெற்றது; பசளைத் தன்மை பெற்றது. இது ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நடம் பெற்ற செயல்முறை.

இன்றும் அச்செயல் முறை தொடர்ந்து நடந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால் ஒவ்வோர் ஆண்டிலும் புதிதாக உருவாகும் மண்ணிலும் பார்க்கப் பல மடங்கு மண்ணை இழந்து வருகிறோம். அந்த இழப்பை, மழைகாலத்தில், மலைநாட்டிற்குப் போனால் நீங்களே அவதானிக்க முடியும். மலையிலிருந்து வழிந்தோடும் நீர் மண்ணை அள்ளிக் கொண்டு பாய்வதைக் காண்பீர்கள்.

மண்ணரிப்புக்கு மனிதன் தான் முக்கிய பொறுப்பாளி. தேயிலைத் தோட்டங்களில் 'சுரண்டி'யைக் கொண்டு, ஓர் இசழ் புல்லும் இல்லாமல் சுரண்டி எடுத்து விடுவார்கள்; தேயிலைக்கு ஊடும் பசளையைப் புல் உண்டு விடும் என்பதற்காக. ஆனால், மழைநீர் மண்ணை அரித்துச் சென்றுவிடுகிறது. அத்துடன், எமது கொத்தும், உழும் முறைகளும் மண்ணரிப்பை ஊக்குவிக்கின்றன.

மண்ணரிப்பின்போது பசளை மிக்க மண் துகள்கள்தான் கழுவிச் செல்லப் படுகின்றன. பருக்கன் மண் தப்பிவிடும். இதனால் மண்ணரிப்பு உள்ள நிலம் பசளைத் தன்மையைப் படிப்படியாக இழக்கிறது. அத்துடன், பயிர்களுக்குத் தேவையான கனிப்பொருள்களையும் இழக்கின்றது. பசளையையும் கனிப்பொருள்களையும் இழந்து விடும் நிலத்தால் பலன் இல்லை. அங்கு பயிர்கள் வளர்ந்தாலும், அவைகளால் கிடைக்கும் உற்பத்தி வெகு குறைவு. அத்தகைய நிலங்கள் பயிர்ச் செய்கைக்கு உதவாதவை எனக் கைவிடப்படுவது வழக்கம்.

மண்ணரிப்பைக் கட்டுப்படுத்த வழியுண்டு. புற்செய்கைதான் அவற்றுள் சிறந்தது. விவசாயப் பயிர்களுடன் போட்டி போடாத புல்வகைகள் உண்டு. சில புல்வகைகள் விவசாயப் பயிர்களுக்கு உதவுவன. அவரை இனத்தைச் சேர்ந்த பயிரினங்கள் மண்ணுக்கு நைதரசன் வளத்தை ஊட்டுவன.

இவைகளைவிட, மலைச்சாரல்களில், வரம்புகள் போல வளர்க்கத் கூடிய புல்லினங்களும் உண்டு. நெல் வயல்களின் வரம்புகளிலும் அவற்றைப் பயிரிடலாம். அவை வளர்ந்து, மண்ணை இறுகப் பிடித்துக் கொள்ளும்; மண் அரிபட்டுப் போவதைத் தடுக்கும்.

அத்தகைய புல்வகைகளில் சவந்தரா என்ற புல்லினம் ஒன்று. அதைப் பயிரிடுமாறு வன இலாகாவினர் சிபார்சு செய்கின்றனர். 'சவந்தரா?' புல் பயிரிடுவது இலகு; செலவும் குறைந்தது. சவந்தரா புல்லை எட்டு அங்குலத்திற்கு ஒன்றாக வயலில் அல்லது காணியின் எல்லையில் நட்டால் அவை வளர்ந்து மண் அரிப்பைக் குறைத்துவிடும்.

சவந்தரா புல் ஆற்றங்கரைகளில் இப்பொழுது வளர்க்கப் படுகின்றது. சவந்தராவின் வேர் ஒன்பது அடி ஆழத்திற்குச் செல்லக் கூடியது.

(11ஆம் பக்கம் பார்க்க)

அறிவியல் உலகம்

# அணுவும் விண்வெளியும்:

## 20ஆம் நூற்றாண்டில் பௌதிக விஞ்ஞான ஆய்வு

கனக திருச்செல்வம்

தற்போது 20 அம் நூற்றாண்டின் இறுதிக்கால கட்டத்தில் இருக்கிறோம். இன்னும் பத்து வருடங்களில் இந்த நூற்றாண்டு பூர்த்தியாகி விடும்; கி. பி. 2000க்கு வந்து விடுவோம்.

இந்த நூற்றாண்டில் (1900 - 2000) பௌதிக விஞ்ஞானிகளின் (Physicists) ஆராய்ச்சிகளில் இரண்டு முக்கியமான அம்சங்கள், உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. ஒன்று, அணு ஊடுருவல், மற்றது விண்வெளி ஊடுருவல்.

### பரிசோதனை ரீதியாக

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன், பழைய இந்துக்களாகிய கபிலர், பதஞ்சலி போன்ற உலகாயத்து சித்தரும் பழைய கிரேக்கர்களாகிய டெமோக்கிரிட்டஸ், எப்பிக்யூறஸ் போன்ற பொருள்முதல் வாத தத்துவஞானிகளும் அணுவைப் பற்றி ஊகித்திருந்தனர் விண்வெளியிலுள்ள கிரகங்கள், நட்சத்திரங்கள் (உடுக்கள்) பற்றியும் ஓரளவு அறிந்திருந்தனர். ஆனால் பரிசோதனை ரீதியாக அணுவைத் துளைத்து அதன் உள்ளமைப்பை ஆராயத் தொடங்கியது இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேதான். அதேபோல, விண்வெளிக்கு றொக்கெட்டுகள் என அழைக்கப்படும் ஏவுகணைகளை அனுப்பி விண்ணின் அமைப்பைஆராயத் தொடங்கியதும், இந்த நூற்றாண்டின் நடுக்கட்டத்திலே தான். இவ்விரு ஆய்வுகள் காரணமாக இந்த நூற்றாண்டிலேயே விஞ்ஞான வளர்ச்சி கடுகதியில் நிகழ்ந்திருக்கிறது.

கண்ணுக்குப் புலப்படாத குறுகிய அணுவும் எண்ணத்துளடங்காத பரந்த விண்வெளியும், பருமனில் எவ்வளவோ வித்தியாசப்பட்டிருக்கலாம். எனினும் மிகமிகச் சிறியதும் (நுண்பருமனும்). மிக மிகப் பெரியதும் (மாண்பருமனும்) ஆன இவை இரண்டிற்கும் ஒருமைப்பாடு இருக்கத்தான் செய்கிறது.

### வட்ட அல்லது நீள் வட்டப் பாதை

றதர்ஃபோர்டு (Rutherford), நீல்ஸ்ஃபோர் (Niels Bohr) முதலிய விஞ்ஞானிகள் இந்தநூற்றாண்டுத் தொடக்கத்தில் நிகழ்த்திய ஆய்வுகூடப் பரிசோதனைகளின் பயனாக உருவாகியுள்ள அணு உள்ளமைப்பு பற்றிய கொள்கையின்படி, ஒவ்வொரு அணுவிலும் அதன் திணிவின் பெரும்பகுதி பொதிந்து கிடக்கும் மையமான அணுக்கருவைச் சுற்றி, இலத்திரன்கள் என்னும் துகள்கள் வெவ்வேறு வட்ட அல்லது நீள் வட்ட சுற்றுப் பாதைகளில் (ஓர்பீட்டல்கள்) சஞ்சரிக்கின்றன இதே போன்ற நிகழ்ச்சி விண்வெளியிலும் நடைபெறுகிறது. பெரும் திணிவுடைய சூரியனை மையமாகக் கொண்டு புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூறேனஸ், நெப்ரியூன், புளூட்டோ ஆகிய கிரகங்கள் (கோள்கள்) வெவ்வேறு வட்ட அல்லது நீள் வட்ட சுற்றுப் பாதைகளில் இயங்குகின்றன. சூரியனைப் போன்று பிற விண்மீன்களும் (உடுக்கள்) தம்மைச்சுற்றி இயங்கிக் கொண்டிருக்கும் கோள்களையுடையதாயிருக்கலாமென வானியலார் கருதுகின்றார்கள். மேலும், ஓர் இலத்திரனானது அணுக்கருவை வலம் வருவது மட்டுமல்லாமல் தன்னைத் தானே சுற்றிச் சுழன்று கொண்டுமிருக்கும் (கறங்கல்) என ஆய்வு மூலம் ஊகிக்கப் பட்டுள்ளது. இதைப் போலவே பூமியானது சூரியனை வலம் வருவது மட்டுமல்லாமல் பம்பரம் போலச் சுழல்வதால் இரவு, பகல் உண்டாகிறது என்பதைப் புவியியல் மாணவர் அறிவார்கள்.

### வேறுபாடு

அணுவில் இலத்திரன்களின் சுற்றியக்கத்துக்கும் விண்வெளியில் கோள்களின் சுற்றியக்கத்துக்குமுள்ள வித்தியாசமென்னவெனில்: நேர் மின்னேற்றமுடைய அணுக்கருவைச் சுற்றும் மறை மின்னேற்றமுடைய இலத்திரன்களினியக்கம், மின் காந்த விசைகளினால் ஏற்படுகிறது:

மேலும், இலத்திரன் முகில் எனும் தன்மையடையத் தக்கதாக இலத்திரன்கள் மிக மிக விரைவாக அசைகின்றன. ஆனால் சூரியனைச் சுற்றும் கோள்களினியக்கமோ ஈர்ப்பு (Gravitation)விசைகளினால் ஏற்படுகிறது. மின்விசைக்கும் காந்த விசைக்குமுள்ள அன்னியோன்னியத்தொடர்பைப் பற்றி பௌதிகம் படிக்கும் மாணவர் அறிவர். ஆனால் ஒருபுறம் மின்காந்த புலங்களுக்கும் மறுபுறம் ஈர்ப்பு புலத்துக்குமிடையே ஏதாகிலும் தொடர்பு இருக்கக் கூடுமோ என்பது பல காலமாக பௌதிக விஞ்ஞானிகளுள் ஒரு பெரும் புதிராக இருந்து வந்தது. எனினும், இந்த நூற்றாண்டு கண்ட சிறந்த விஞ்ஞானியான ஐன்ஸ்டீன் (Einstein) இத் தொடர்பைக் கணிதத் தத்துவரீதியாகக் கண்டு பிடித்தார். ஏற்கனவே இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் (1905) தனது சார்புக் கொள்கையினால் Relativity Theory) பௌதிகவியலில் பெரும் புரட்சியை உண்டு பண்ணியிருந்த இவ்விஞ்ஞானி. தனது மரணத்துக்குக் கொஞ்ச நாட்களுக்கு முன்னர் "ஒன்றிய புலக் கொள்கை" (Unified Field Theory) என்னும் புதிய கொள்கையை வெளியிட்டு, மின் காந்த விசைபுலத்துக்கும் ஈர்ப்புவிசைப்புலத்துக்குமுள்ள தொடர்பை ஓரளவுக்கு விளக்கினார். ஆகவே புலங்களெல்லாம் ஒரே தன்மையானவை என ஊகிக்கக் கூடியதாகவுள்ளது.


எல்லாவற்றையும் கடந்தும் எல்லாவற்றின் உள்ளும் இருப்பது ஒரே தன்மைத்தான கடவுள் (கட + உள் = கடவுள்)என்பது சித்தாந்தக் கொள்கை. கடந்ததும் (விண்வெளி) உள்ளுரவுள்ளதும் (அணு) ஒரே மாதிரியானவை என்பது இந்த நூற்றாண்டின் விஞ்ஞான ஆய்வுகளின் முடிபு.

### கொள்கை பரிசோதனை

விஞ்ஞானமென்பது கொள்கையளவில் மாத்திரம் நின்றுவிடும் வறண்டதத்துவ ஞானமல்ல. கொள்கைகளை நிறுவுவதற்கு பரிசோதனைகள் நிகழ்த்தப்படுகின்றன. பரிசோதனையின் பயனாக பழைய கொள்கைகள் மாற்றியமைக்கப்படுகின்றன; புதிய கொள்கைகள் உருவாகின்றன. இவ்வாறு கொள்கை, பரிசோதனை, புதிய கொள்கை, இன்னும் நுணுக்கமான பரிசோதனை — என்ற தொடரில் விஞ்ஞான ஆய்வு வளர்கிறது. அணுக்கொள்கை பற்றியும், விண்வெளிக் கொள்கை பற்றியும் இந்த நூற்றாண்டிலேதான் வெற்றிகரமான பரிசோதனைகள் நிகழ்த்த பட்டு வருகின்றன. இதன் காரணமாக தற்காலத்தைச் சிலர் "அணுயுகம்" எனவும், வேறு சிலர் "விண்வெளியுகம்" எனவும் அழைக்கின்றனர்.

### போட்டியும் வளர்ச்சியும்

19 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற தொழில்துறைப் புரட்சியில் (Industrial Revolution) இளம் போட்டி முதலாளித்து



வங்கள் விஞ்ஞான வளர்ச்சியை ஊக்குவித்தன. ஆனால் பின்னர் முதுமையடைந்த ஏகபோக முதலாளித்துவம் விஞ்ஞான வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தது. எனினும் இந்த நூற்றாண்டில் முதலாம் உலக யுத்தத்தின் (1914– 1918 இறுதியில் ரஷ்யாவில் சோஷலிசப் புரட்சி ஏற்பட்டு, சோவியத் ஒன்றியம் உருவானது. அதன்பிறகு முதலாளித்துவத்துக்கும் சோஷலிஸத்துக்குமிடையேயான போட்டிகாரணமாக, விஞ்ஞான வளர்ச்சி மீண்டும் ஊக்குவிக்கப்பட்டது. இளம் சோவியத் ஒன்றியத்தில் தொழிலாள வர்க்க சர்வாதிகாரத்தின் தலைவன் ஸ்டாலின், பொருளாதார உற்பத்திக்கு மட்டுமல்லாமல் விஞ்ஞான ஆய்வுக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டினன். (காவியப் புகழ் பெற்ற ஸ்டாலின், ரஷ்யாவின் ஜோர்ஜிய சிறுபான்மையினத்தைச் சேர்ந்த சப்பாத்துத் தைக்கும் தொழிலாளியின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.) இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்திய தேசியக் கவியாக மிளிர்ந்த சுப்ரமணியபாரதிக்கு இந்தப் புரட்சி (1917), சமகால நிகழ்வாக இருந்தது அவன் உடனே தனது "புதிய ருஷியா" எனும் கவிதையில் அதை இந்த நூற்றாண்டின் ஒரு யுக நிகழ்ச்சியாக வரவேற்றான். ("ஆகாவென்றெழுந்தது பார் யுகப்புரட்சி .. கிருதயுகம் எழுக மாதோ!") சோஷலிஸத்துடன் ஒரு புதிய திட்டமிட்ட கூட்டாய்வு விஞ்ஞானமும் எழுந்தது எனலாம்.

பிறகு 2 ஆம் உலக யுத்தத்தின் (939 – 1945)பின் சீனவும் சோஷலிஸத்தைத் தழுவி, திட்டமிட்ட பொருளாதாரம்-விஞ்ஞானம் அங்கேயும் ஏற்பட்டதால், விஞ்ஞான ஆய்வுப் போட்டி இன்னும் வலுப்பெற்றது. தற்காலத்தில், சோஷலிஸ நாடுகளில் மட்டுமன்றி, அதைப்பார்த்து முதலாளித்துவ நாடுகளிலும் அரசுகளினால் திட்டமிடட விஞ்ஞான ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

### அணுயுகம்

அமெரிக்க அரசின் ஊக்குவிப்பினால், 2 ஆம் உலக யுத்தத்தின் போது (1942 இல்), ஃபேர்மி (Fermi) என்னும் விஞ்ஞானியின் தலைமையில் சில ஆய்வாளர்கள் ஒரு யுரேனியம் அணு அடுக்கில் தானாகத்தொடர்ந்து இயங்கும் அணுக்கரு ஊடுருவல் தாக்கத்தை ஏற்படுத்துவதில் வெற்றிகண்டார்கள். கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல, அணுவைத் துளைக்க பூதாகாரமான அசுர சக்தி கிளம்பியது இங்ஙனம் அணுக்கருவில் அடைபட்டுக் கிடக்கும் மாபெரும் சக்தியை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல், இவ்வணுச் சக்தியைக் கால்வாய்ப்படுத்தி மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கான மாபெரும் ஆக்க வேலைகளில் பிரயோகிப்பதற்குரிய சாத்தியக் கூறுகளையும் வெளிப்படுத்திய படியால், இந்த ஆய்வு கூடப் பரிசோதனை அணுயுகத்தை ஆரம்பித்து வைத்ததெனலாம். ஆனால் அணுசக்தியின் முதற்பிரயோகம் ஒரு கொடூரமான நாச வேலையாக இருந்தது. 1945 இல் ஜப்பானின் மேல் அமெரிக்க விமானப்படை வீசிய இரண்டே இரண்டு அணுக்குண்டுகளினால் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகரங்கள் நிர்மூலமாகின. ஹிரோஷீமாவில் மாத்திரம் ஒரு அணுக்குண்டு வீச்சினால் சுமார் 2 இலட்சம் பேர் உடனே மாண்டனர். நகரத்தின் சுற்று வட்டாரத்தில் பல கிலோ மீற்றருக்கப்பாலிருந்த இன்னும் 2 இலட்சம் பேர் குண்டு வெடிப்பிலிருந்து ரவிய அணுக்கதிரியக்கத்தினால் பாதிக்கப்பட்டு, புற்றுநோய் போன்ற நோய்களினால் அவதிப்பட்டனர். இவர்களில் பாதிப்பேர் கடந்த 45 ஆண்டுகாலத்தில் அல்லுற்று இறந்துவிட்டனர். மீதமானோரும் அவர் சந்ததியினரும் இன்றும் அவல நிலையில் வாழ்கின்றனர்.

### விண்வெளி ஊடுருவல்

தற்காலத்தில் அபாயமில்லாமல் அணுச் சக்தியை நேரடியாக பிரமாண்டமான மின்சக்தியாக மாற்றுவதற்கான ஆய்வுகளில் சோவியத் ஒன்றியமும் அமெரிக்க ஐக்கிய நாடும் ஈடுபட்டுள்ளன. விண்வெளி ஊடுருவலிலும் இவ்விரு அதிவல்லரசுகள் (Super Powers) போட்டியிட்டு வருகின்றன.

இந்தநூற்றாண்டின் தொடக்கத்திலேயே (1903), ரஷ்யாவில் ஜார் மன்னனின் கொடுங்கோலாட்சியால் சிறைப்படுத்தப் பட்ட விஞ்ஞானி ஸியோல்கோவ்ஸ்கி (Tsiolskovsky) பின்வருமாறு எழுதினான்: "மனிதன் நிரந்தரமாக புவியிலேயே இருக்கமாட்டான். ஒளியையும் வெளியையும் நாடி அவன் முதலில் பயபக்தியுடனும் பின்னர் துணிவுடனும், புவியின் வளிமண்டலத்தின் வரைபறுப்பை மீறி அப்பால் செல்வான். அதன்பின் சூரிய மண்டலத்து விண்வெளி முழுவதையும் வெற்றி கொள்வான்." தற்போது, புரட்சிக்குப்பின், சோவியத் ஒன்றியத்தின் திட்டமிட்ட விஞ்ஞானத்தினால், ஸியோல்ஸ்கோவ்ஸ்கியின் கனவு நனவாகி வருகிறது.

### ரஷ்யாவும் அமெரிக்காவும்

முதன் முதலில், இந்நூற்றாண்டின் நடுக்கட்டத்தில் ரஷ்யா தனது சக்திவாய்ந்த

(9 ஆம் பக்கம் பார்க்க)

**கலைச்சாரல்**

# போர்க்கால இலக்கியம்

எஸ். வி. ராஜதுரை

**1941** ஜூன் 21ஆம் நாள் சோவியத் யூனியன் மீது ஹிட்லர் திடீர்ப் படையெடுப்பு நடத்தினான். 1936 38 ஆம் ஆண்டுகளில் நடந்த பயங்கரமான 'களையெடுப்பு'களின் காரணமாக கட்சி, அரசு, ஆகியவற்றின் எல்லா உறுப்புகளும் பலவீனமடைந்திருந்தன; மிகப்புகழ்பெற்ற செஞ்சேனைத் தளபதிகளும் பலியாகியிருந்தனர். சோவியத் யூனியன் நடத்திய தேசப் பாதுகாப்புப் போரின் முதல் கட்டங்களில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு அது மட்டுமே காரணம் அல்ல என்றபோதிலும், முக்கியமான காரணமாக அமைந்தது. 1942 இலையுதிர் காலத்தில் ஹிட்லரின் படைகள் காகாசஸ் மலையடிவாரங்களுக்கும் வோல்கா நதிக்கரைக்கும் மாஸ்கோ, லெனின்கிராட் ஆகிய நகரங்களுக்கும் வந்துவிட்டன. சோவியத் யூனியனின் மக்கட்தொகையில் சரிபாதிப்பேர். வாழும் பிரதேசங்கள் அப்படைகளால் ஆக்கரமிக்கப்பட்டிருந்தன. நாட்டின் தொழிலுற்பத்திக்கான மையப்பகுதிகளிற் பாதி எதிரியின் ஆக்கிரமிப்பின் கீழ் இருந்தது இந்த நிலை ஸ்டாலினின் சர்வாதிகாரத்துக்கு மட்டுமல்லாமல் முழு நாட்டின் வாழ்வு, பல்வேறு தேசிய இன மக்களின் பண்பாடு, வாழ்க்கை, வரலாறு ஆகியவற்றுக்கான அச்சுறுத்தலாகவும் இருந்தது. சோவியத் யூனியனின் மக்கள் அனைவரும் தம் நாட்டைப் பாதுகாக்க எழுந்தனர். இராணுவத்தில் ஏற்பட்ட இழப்புகள் விரைவில் ஈடுசெய்யப்பட்டன. கிழக்குப்பகுதிகளில் உள்ள தொழிலுற்பத்தி பிரம்மாண்ட அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டு எல்லாவகையான நவீன ஆயுதங்களும் போருக்குத் தேவையான பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டன. ஆக்கிரமிப்பாளனுக்கு எதிரான போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான திறமையான இராணுவத் தலைவர்களும், தளபதிகளும் போர்முனைக்குச் சென்றனர். பல லட்சம் தேசபக்த இளைஞர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தனர். இவையனைத்தும் சேர்ந்து போரின் போக்கை மாற்றியமைத்தன. நாட்டின் மேற்குப் பகுதியில் சோவியத் ஆயுதப்படைகள் முன்னேறிச் சென்று எதிரிக்கு மிகப் பலத்த அடிகள் கொடுத்து இராணுவரீதியில் ஹிட்லரைக் காட்டிலும் தமக்கிருந்த திறமையையும் வலுவையும் நிரூபித்துக் காட்டின. ஹிட்லருக்கான ஆயுத-இராணுவபலத்திற்கான ஊற்றுக்கண்கள் அன்று ஜெர்மனில் மட்டுமல்லாது, அவனது ஆக்கிரமிப்பின் கீழிருந்த மேற்கு ஐரோப்பாவிலும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவும் பிரிட்டனும் தமக்கு முதலில் ஏற்பட்ட பின்னடைவுகளிலிருந்து மீண்டும் தமது இராணுவ எந்திரத்தை முடுக்கிவிட்டு அச்சு நாடுகள் மீதான நிர்ப்பந்தத்தை அதிகரித்தன. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் அந்த அச்சுநாடுகளின் ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்பியக்கங்களுக்கும் எதிர்ப்புப் போர்களும் வலுவடைந்தன. 1945 மே 9ஆம் தேதி சோவியத் யூனியன் முழுவெற்றியடைந்தது.

## தாய் நாட்டைக் காப்போம்

கோடிக்கணக்கான உயிர்களைப் பலிகொடுத்துப் பெறப்பட்ட விடுதலை அது. லட்சக்கணக்கான மக்கள் போரின் போது பட்டினியால் மடிந்தனர். 'சோவியத் தாய்நாட்டைக் காப்போம்' என்ற முழக்கத்தின் கீழ் ஒவ்வொரு குடிமகனும் கட்சி, சித்தாந்த, வர்க்க, மொழி, இன வேறுபாடுகளைக் கடந்து செயற்பட்ட ஒரு வீரகாவியக் காலகட்டம் அது. அந்தக் காலகட்டத்தில் சோவியத் இலக்கியம் முழுக்க முழுக்க ஒரு 'போர் இலக்கிய'மாகவே இருந்தது என்பது வியப்புக்குரியதல்ல. சோவியத் மக்களின் மிகப்பிரமாண்டமான பாசிச எதிர்ப்புப் போர் இலக்கியத்தின் எல்லா வகைகளுக்கும் வேண்டிய விஷயதானங்களை வழங்கியது. இத்தகைய இலக்கியங்களைக் கட்சியும் அரசும் கட்டாயமாக ஆதரிக்கவும், அவற்றைப் போர் நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதியதும்கூட வியப்பானவை அல்ல. கட்டாய இராணுவ சேவையிலிருந்து எழுத்தாளர்களுக்கு விதிவிலக்குத் தரப்பட்டது. ஆவேசமும் உற்சாகமும் ஊட்டும் இலக்கியப் படைப்புகள் போர்முனை நடவடிக்கைகளுக்கு நிகரானவையாகக் கருதப்பட்டன. அப்படியிருந்தும் ஆயிரக்கணக்கான எழுத்தாளர்களும் அறிவுஜீவிகளும் பத்திரிகையாளர்களும் இராணுவத்தின் பல்வேறு துறைகளில் பணியாற்றினர். அவர்களில் நூற்றுக்கணக்கானோர் தம் இன்னுயிரைத் தியாகம் செய்தனர். அவர்களில் யூரிக்ரைமோவ், ஆர்க்கடிகய்தர், வாஸிலி ஸ்டாவ்ஸ்கி, அலெக்ஸான்டர் அஃபினாஜெனோவ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். தேசபக்த, பாசிச எதிர்ப்புப் போர் இலக்கியங்களை 'உற்பத்தி' செய்யுமாறு கட்சியும் அரசாங்கமும் எழுத்தாளர்களுக்கு ஆணையிட வேண்டிய தேவையே இல்லாமல் போயிற்று. மற்றோர் புறம் அழகியல் தராதரங்கள், கலா நேர்த்தி என்ற விஷயங்களும் இக்காலகட்டத்தில் பொருளிழந்துவிட்டன. விஷயங்களைப் பதிவு செய்வதும் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்புவதும இலக்கியத்தின் முதன்மை நோக்கமாக இருந்தது. ஆயினும் இந்தக் காலகட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான படைப்புகள் சோவியத் மக்களுக்கும் மனிதகுலத்திற்கும் இன்னும்கூட உத்வேகம் தரக்கூடிய மகத்தான படைப்புகளாய் விளங்குகின்றன.

## கட்டுரைகள், சித்திரங்கள்

புனைவிலக்கியங்கள் மட்டுமல்லாது, இலியா ஏஹ்ரன்பர்க், அலெக்ஸி தோல்ஸ்தோய், மிகய்ல் ஷோலக்கோவ், டிகானோவ் ஆகியோர் நாளேடுகளில் எழுதிய கட்டுரைகளும் சொற்சித்திரங்களும் மிக முக்கியத்துவம் பெற்றிருந்தன. குறிப்பாக ஏஹ்ரன்பர்க் எழுதிய கட்டுரைகள் போர்முனையிலிருந்தவர்களுக்கும் அவர்களுக்கு உதவி செய்துவந்த சாதாரண குடிமக்களுக்கும் சரிசமமான உத்வேகங்களைத் தருவதாக அமைந்தன. நூற்றுக்கணக்கான சோவியத் எழுத்தாளர்கள் போர்முனைகளில் பத்திரிகை நிருபர்களாகப் பணியாற்றினர். போர் நிகழ்ச்சிகளையும் சோவியத் மக்களின் பாசிச எதிர்ப்புப் போராட்டங்களையும் ஒரு இயற்கைவாதமுறையில் விவரிப்பதை அவர்கள் விரும்பவில்லை. 1942 ஏப்ரலில் நடந்த சோவியத் எழுத்தாளர் சங்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் "உளவியல் யதார்த்தவாதமும் மனிதாபிமான அணுகுமுறையும் மட்டுமே மக்களிடம் தொடர்புகொள்ளக்கூடிய ஒரு பொதுமொழியை இலக்கியத்திற்கு வழங்கும்" என்று கூறியது. இத்தீர்மானத்தில் பொதிந்திருந்த உணர்வுகளை நிறைவேற்றும்வகையில் எழுதப்பட்ட படைப்புகளில் வாஸிலி க்ராஸ்மனின் "அமரத்துவம் பெற்றவர்கள்" என்ற நவீனமும் ஒன்று.

## சாமான்யர்கள் பற்றி

முப்பதுகளின் இறுதியில் மேலோங்கியிருந்த இலக்கியப் போக்குகள் அப்பழுக்கற்ற கதாநாயகன், புரட்சிகர ரொமாண்டிசிசம், 'நிர்மாண வேலைகளைத் தனியொருவனாகவே செய்யும் கட்சி உறுப்பினர்' போன்றவை மறைந்து, பாத்திரங்களின் சாதாரண மனிதத்தன்மைகளுக்கு அழுத்தம் தரும் படைப்புகள் தோன்றலாயின. க்ராஸ்மன் போன்ற எழுத்தாளர்கள், நாடகப்பாணியிலும்செயற்கையான முறையிலும் உருக்கமான அல்லது வீராவேசப் பேச்சுகளைப் பேசும் பாத்திரங்களைப் படைக்காமல் மிக அடக்கத்தோடு நாட்டுக்காகத் தம் இன்னுயிர் இழக்கும் சாமான்யர்களைப்பற்றி எழுதினர். இத்தகைய மனிதர்களைப் பற்றி அவர் எழுதுகிறார்:

"போர்க்காலத்தில் வீழ்ந்தவர்களின் பெயர்கள் பல நூற்றாண்டுகள் வாழும் என்று கவிஞர்கள் சொல்வது வீண்; மடிந்துபோனவர்களிடம் அவர்கள் உண்மையில் இறக்கவில்லை. புகழ்மிக்க நினைவுகளில் அவர்கள் என்றென்றும் தொடர்ந்து வாழவே செய்கிறார்கள்என்று இக்கவிஞர்கள் கூறுவதும் வீண். நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பெயர்களை மனிதனால் தன் நினைவில் தக்கவைத்துக் கொள்ளவே முடியாது. இறந்தவர்கள் இறந்தவர்கள்தாம். கடினமான வேலைக்குப் போவதைப் போலவே போருக்கும் லட்சக்கணக்கானோர் சென்றனர் எல்லையற்ற போர்க்களத்தில் மிகச் சாதாரணமாக, துறவிகள் போல் எளிமையுடன் மடிந்தவர்களின் பெற்றோர்கள் மகத்தானவர்கள் — வாழ்க்கை முழுவதும் உழைத்த அந்த எல்லாத் தச்சர்களும், சுரங்கத் தொழிலாளிகளும், குழி தோண்டுபவர்களும், நெசவாளிகளும், விவசாயிகளும் மீளாத்துயில் ஆழ்ந்துள்ளனர். அவர்களது முன்னோர்களைப் போலவே முன்பு அவர்கள் தமது வியர்வையையும் கடினமான — பல சமயங்களில் சகிக்க முடியாத — உழைப்பையும் தந்திருக்கிறார்கள். இப்போதோ அந்த பயங்கரமான நேரம் வந்ததும் தமது ரத்தத்தையும் வாழ்க்கையையும் தந்திருக்கின்றனர்"

## ஸிமனோவின் கவிதை

போர்க்காலம், இதுகாறும் புறக்கணிக்கப்பட்டோ அல்லது ஒடுக்கப்பட்டோவந்தஎழுத்தாளர்கள் அனைவரும் கமநுகசப் புணர்வுகளை மறந்துவிட்டு தேசத்தின் பாதுகாப்புக்காகத் தமது இலக்கியப் பாத்திரங்களை வகித்தமாறு செய்துவிட்டது, போரிஸ் பாஸ்டர்நாக், அன்னா அக்மதோவா போன்ற மகத்தான கவிஞர்கள் தேசப்பற்றை ஊக்குவிக்கும் கவிதைகள் எழுதினர். போர்க்காலத்தில் எழுதப்பட்ட கவிதைகள் போர் முனைகளிலும் பிற இடங்களிலும் மிகப்பெரும் உத்வேகத்தைத் தட்டியெழுப்பக் கூடியனவாக இருந்தன. கான்ஸ்டான்டின் ஸிமனோவ் (1915 – 1974) எழுதிய கவிதை ஒன்று பல லட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது. 1942 பிப்ரவரியில் நாஜிப் படைகள் மாஸ்கோவிலிருந்து விரட்டியடிக்கப்பட்டபோது 'ப்ராவ்தா' நாளேடு வெளியிட்ட இக்கவிதையைப் போர் வீரர்கள் செய்தித்தாள்களிலிருந்து கத்திரித்து எடுத்து, பதுங்கு குழிகளில் பிரதிகளெடுத்து, மனப்பாடம் செய்து மனைவியருக்கும், காதலிகளுக்கும் அதை எழுதி அனுப்பினர். போரில் காயமடைந்தவர்கள், இறந்தவர்களின் சட்டைப்பைகளில் இக்கவிதையடங்கிய தாள்கள் காணப்பட்டன. 'எனக்காகக் காத்திரு' என்ற தலைப்பிடப்பட்ட அக்கவிதை:

எனக்காகக் காத்திரு, திரும்பிவருவேன் நான்
காத்திரு, வருவேன் நான்
இலையுதிர்காலத்து மஞ்சள் நிற மழையினூடும்
அதுதரும் சலிப்பினூடும் காத்திரு.
உன் இதயத்தை திடப்படுத்து வருந்தாதே,
பனிக்காலத்தின் மூட்டத்தினூடே காத்திரு
காற்றினூடும் சீறும் சூறாவளியினூடும் காத்திரு.
கோடையின் ஒளிவீச்சினூடே காத்திரு.
மற்றவர்கள் இனிமேலும் காத்திராத போதும்
என் கடிதங்கள் நின்றுபிட்ட போதும்
மங்காத நம்பிக்கையுடன் காத்திரு
காத்திரு, கைவிடாதே நம்பிக்கையை.

எனக்காகக்காத்திரு, திரும்பிவருவேன் நான்
அன்பே, பொறுமையைக் கற்றுக்கொள்.
நான் திரும்ப மாட்டேன் எனச் சொல்பவரிடமிருந்து
நீ விலகி நில்
என் மகனும் தாயும் துக்கத்தின்
கண்ணீரைச் சிந்தி அழட்டும்
என்னை மறந்துவிட வேண்டியதுதான் என
நண்பர்கள் அடித்துச் சொல்லட்டும்
அவர்களின் அனுதாபச் சொற்களைக் கேட்காதே
என் நினைவுக்காக அவர்கள் குடித்தால்
சேராதே அவர்களுடன்

எனக்காகக்காத்திரு, காத்திராத அவர்கள்
சொல்லட்டும் உன்னுடன் நான் இணைந்த பின்னர்
அதிர்ஷ்டம்தான் நம்மை இணைத்ததென்று
மரணத்தின் ஒவ்வொரு வகையையும் சிதைத்து
அந்தக் கொடும் தீப்பிழம்பினூடே
நான் நலமுடன் வந்தேன் என்பதை
நம்மிருவர் மட்டுமே அறிவோம்
உறுதியோடும் பிடிவாதத்தோடும்
நீ காத்திருக்கக் கற்றதினால்
பூமியில் வேறு எவர்மாதிரியுமின்றி
அன்பே, நீ எனக்காகக் காத்திருந்ததனால் மட்டுமே
நிகழ்ந்தது அது.

(11ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் பேச்சுவார்த்தைகளின் நடைமுறை: 1983-86

(சென்ற வாரத் தொடர்ச்சி)

17 நீர்கொழும்புகத்தோலிக்க மதகுருமார் –

இனப் போராட்டம் - நீர்கொழும்பு கத்தோலிக்க மதகுருமார் பார்வையில்: "தெற்கிலுள்ள தமிழருக்கு ஈழம் தேவையில்லை" 83 08.22. 3. ப.

1983 ஆகஸ்ட் 22 ஆம் திகதி டெயிலி நியூஸ் பத்திரிகையிலிருந்து மறு பிரசுரம். ப.12. இக்கட்டுரை வறிய சிங்கள மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான கொள்கைக்கும் தொடரும் இனப்போராட்டத்திற்கும் இடையிலான தொடர்புகளை விளக்குகின்றது. ஐக்கிய இலங்கையின் கட்டுக் கோப்புக்குள் தீர்வுக்காகச் செயற்படும்படி அரசியற் கட்சித் தலைவர்களை, நீர்கொழும்பு மாவட்ட கத்தோலிக்க மதகுருமார் கேட்டுள்ளனர். இரு இனங்களுக்கிடையிலான மனக்குறைகளையும் இனங்கண்டு பரஸ்பர புரிந்துணர்வு மூலம் அரசியற் சட்ட விதிமுறைகட்கு ஏற்ப தீர்த்துக் கொள்ள வேண்டும்.

18. தேசிய இணக்கத்திற்காக பிரசைகள் குழு.

ஜூலை, 1983 ஆம் ஆண்டு குழப்பங்களை ஒட்டிய அறிவித்தல். தேசிய இணக்கத்திற்காக பிரசைகள் குழுவினால் வெளியிடப்பட்டது. கொழும்பு: தேசிய இணக்கத்திற்கான பிரசைகள் குழு. 83 08 22 4.ப. 1983, செப்ரெம்பர் 15. லங்கா காடியனில் — பகுதி மறுபிரசுரம். V.6 (9&10) ப-12-16. தலைப்பு — இலங்கை பௌத்த சங்கம். (ACBC) இளம் பௌத்த சங்க அங்கத்தவர்கள். (YMBA) சிங்கள பல மண்டலவின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பு தேசிய இணக்கத்திற்கான பிரசைகள் குழு ஆகஸ்ட் 21 - 22 ஆம் திகதிகளில் நடந்த கூட்டத்தில் அண்மைக்கால இனக் குழப்பங்கள் காரணமாக எழுந்துள்ள முக்கிய பிரச்சினைகளை ஆராய்ந்தது. இக் கூட்டம், இனப்பிரச்சினைக்கு பிரசைகளும், அரசு சார்பற்றநிறுவனங்களும்குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செலுத்தக்கூடிய வகையிலான ஓர் வேலைத் திட்டத்தினை முன்வைத்தது. இவ்வறிக்கை அண்மைக் கால நிகழ்வுகள் பற்றிய ஆய்வு, அரசாங்க சிபார்சுகள் பற்றியதாகும்.

19. எப்பிட்டாவல, பிரேமகுமார், திரு ஜி. பார்த்தசாரதிக்கு ஓர் திறந்த கடிதம்.

பேராதனை: சிங்களசமாஜய, 83 08 24 — 6 - ப. ஆசிரியர் பேராதனையில சிங்கள சமாசத்தின் செயலாளர் ஆவர். இவர் இலங்கையின் இனப்போராட்டத்திற்கு எவ்வித தீர்வினையும் திணிக்க வேண்டாம். என்றும், தமிழருடைய குறைகள் யாவும் பிரித்தானியர் அவர்கட்கு காட்டிய சாதகமான நிலை காரணமாக உருவாகியதென்பதாக இலங்கையின் இந்தியத் தூதுவராக வந்த பார்த்தசாரதிக்கு சிபார்சு செய்துள்ளார்.

20. அலி, சல்மற் - இந்தியாவின் உதவி. தூரகிழக்கு பொருளாதார றிவியூ — 830825. V. 121(34) 19. ப. 1983 ஜூலை கலவரத்தின் பின் திருமதி இந்திரா காந்தி நடுநிலை வகிப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள், இலங்கையின் சுதந்திரம், ஐக்கியம், ஒற்றுமை என்பவற்றன் உறுதிபபாட்டோடு இந்தியா இணங்குவதாகவும், அத்துடன் தமிழர் நிலைமையில் அக்கறை கொண்டதாகவும் அமைந்தது. ஜனாதிபதி ஜெயவர்த்தன மாவட்ட அபிவிருத்திச் சபைகள் ஊடாக நிர்வாக பரவலாக்கலை உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்வாரம்ப முயற்சியின் பிரதான அம்சம் யாதெனில் இலங்கையின் செயற்பாடு இந்திய ஆர்வத்தினையும் நலனையும் மதிப்பதாக அமைந்ததே. அத்துடன் இலங்கை அரசாங்கம் மூன்றும் உலக நாடொன்றிலிருந்து இராணுவ உதவி பெறுவது இந்தியாவுக்கு பயமளிக்கின்றதென்பதும் தெளிவாகின்றது.

21. நடுத்தீர்ப்பு வழங்கும் பங்கு இந்தியாவிற்கா?

ஏசியா வீக் 83 08.26 V.9(34) இக்கட்டுரை, பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்ற சாதகமான படியாக திருமதி இந்திராகாந்திக்கும் திரு எச். டபிள்யூ. ஜயவர்த்தனவிற்கும் இடையில் ஓர் சந்திப்பிற்கான வாய்ப்பை அளிக்கிறது. இதில் இந்தியா நடுத்தீர்ப்பாளரான பங்கை வகிக்க வேண்டும் என்பதும், த. ஐ வி. முன்னணி அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதில்லை என்ற நிலைமையினை விடுதல் வேண்டும் என்பதும் கூறப்படுகின்றது.

22. பிரிவினைவாதிகளின் ஆட்சிக் கட்டளை உரிமையில் விடாப்பிடியாக நிற்றல்

ஏசியா வீக் 3.09.02 - V 9 (35) ப - 44. பேச்சுவார்த்தைகளுக்குத் தடையாக இருக்கும் பிரதான காரணியாக, தமிழர் தனியான அரசை அமைக்கும் கொள்கையினைக்கைவிடவேண்டும் என்றும், அந் நிலைமைக்கு தமது சம்மதத்தினைத் தரமறுத்தலுக்குமான இலங்கை அரசின் வற்புறுத்தல் கோரிக்கைகளே எனக் கூறப்படுகின்றது.

இக் கட்டுரை த, ஐ வி. முன்னணித் தலைவர் அமிர்தலிங்கத்தின் பேட்டி ஒன்றினையும் கொண்டுள்ளது.

23. கடினமானதும் சூழ்ச்சியானதுமான பாதை முன்னே

தமிழ் ரைம்ஸ் 83 09 03 - ப - 18.

1983 செப்ரெம்பர் 3ஆம் திகதி இந்து பத்திரிகை ஆசிரியர் தலையங்கப் பகுதியிலிருந்து மறு பிரசுரம்.

இலங்கையின் இனப்பூசலைத் தீர்ப்பதற்கு இந்தியாவின் துடிப்பான பங்கிற்கு சாதகமாக ஆசிரியர் குறிப்பு அமைந்துள்ளது. சிங்கள, தமிழ் தீவிரவாதிகள் கவனத்தைக் கடைப்பிடித்து பேச்சு வார்த்தை மூலமான தீர்விற்கு இந்தியா அளிக்கும் தராணத்தினைப் பயன்படுத்த வேண்டும் என வற்புறுத்துகின்றது.

24. அலி, சல்மன். சிறப்பற்ற ஓர் தூதுவர்.

தூரகிழக்கு பொருளாதார றிவியூ. 83 09.08 V. 121 (36) ப - 2, 40 — 41. தமிழரின் தனிநாடு கோரிக்கை தொடர்பாக த. ஐ வி முன்னணிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான பிணக்கில் இலங்கைக்கான இந்தியத் தூதுவரான பார்த்தசாரதி எதனையாவது சாதிக்க முடியும் என்பதில் ஆசிரியர் மிகுந்த ஐமிச்சத்தைவெளிப்படுத்துகின்றார்.

பேச்சுவார்த்தைக்குமுன்னேற்பாடான நிபந்தனையாக தமிழர் தமது கோரிக்கையினை கைவிட வேண்டும் என இலங்கை அரசு விரும்புகிறது. இதனை த. ஐ. வி. முன்னணி மறுத்துவிட்டது. புதுடில்லியில் தமிழர் தனிநாட்டிற்கு சிறிதளவான ஆதரவினையே த. ஐ வி. முன்னணித் தலைவர் பெற்றுள்ள போதிலும், தமிழ்நாட்டினுடைய உணர்ச்சி பூர்வமான நடவடிக்கைகளுக்குச் செவிசாய்க்க இந்திய அரசு தயாராக உள்ளது.

25. இந்திய நல்லெண்ணம் தொடர்பான பத்திரிகைப் பார்வை.

லங்கா கார்டியன். 83.10 01 V - 6. (11) ப - 9. சண் பத்திரிகையிலிருந்து மறு பிரசுரம். இந்துபத்திரிகை நிருபர் ஜீ.கே. ரெட்டி குறிப்பிட்ட கூற்றுப்படி, இந்திய நல்லெண்ணத்தினை சாதகமாகப்பயன்படுத்தி இலங்கையின் பிரச்சினையில் விரைவான ஓர் தீர்வு காணக்கூடிய நிலையில் சர்வதேச நிலை சாதகமாக உள்ளது. அத்துடன் அவர் த ஐ. வி. முன்னணித் தலைவர் அமிர்தலிங்கத்தின் ஐக்கிய இராச்சிய விஜயம், மற்றும் வேறு ஐரோப்பிய நாடுகட்கான விஜயம் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

26. ரெட்டி, ஜீ கே இலங்கைப் பிரச்சினையின் நம்பிக்கையான அறிகுறி.

லங்கா கார்டியன் 83 10.01 V, 6 (11) ப-10 இக்கட்டுரை, இந்தியாவின் சிறப்புத் தூதுவராக திரு. பார்த்தசாரதியின் இலங்கை விஜயம் பற்றிக் குறிப்பிடுகின்றது. சிங்கள தமிழ்த்தலைவர்களுடன் கலந்து யோசித்ததன் பின்னர், தனிநாடு கோரிக்கையினை விடுவதற்கு மாற்றாக தமிழர் பிரதேச சுயாட்சி முறையை வேண்டுகின்றார்கள் என்பது தெளிவாகின்றது. அரசாங்கம் இதற்குத் தீர்வாக மாவட்ட அபிவிருத்திச் சபையைக் குறிப்பிட்டுள்ளது.

27. பெரேரா, அஜித்த: நிபந்தனைகள் அற்ற பேச்சுவார்த்தைக்கு சுதந்திர ஜனநாயக சபை (C L.D.) லங்கா கார்டியன்,

83.10 15 V. 6 (12) ப - 2 10-11.

ஜூலையில் இடம்பெற்ற கலவரங்களின்போது அரசாங்கம் தனது முதற் கடமையாகிய சட்டத்தினையும், ஒழுங்கினையும் நிலைநாட்டத் தவறிவிட்டது. தொடர்பாக, சுதந்திர ஜனநாயக சபை, கவனத்தை வெளியிட்டுள்ளது.

1977 ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டபடி, சர்வகட்சி மாநாட்டினைக் கூட்டும்படியும், மாவட்ட அபிவிருத்திச் சபைகளைப் பலப்படுத்துமாறும், அரசாங்கம் தனது உறுதிமொழிகளை நிறைவேற்றுதல் வேண்டும் என இச்சபை கேட்டுக்கொண்டுள்ளது.

இச்சபை இக்கலவரங்கள் தொடர்பாக சுதந்திரமான விசாரணை ஒன்றை மேற்கொள்ளப்பட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளதோடு சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளும் அரசாங்க பாஷைகளாக்கப் படவேண்டும் எனவும் ஆலோசனை தெரிவிக்கின்றது. த. ஐ. வி. முன்னணியும் தமிழரும் தனிநாட்டுக் கோரிக்கையினைக் கைவிட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

28. வட்டமேசை - ரிபியூன் 83 10 22 V. 28 (1) 2-ப 2 - 3 வட்டமேசை மாநாட்டிற்கு இலங்கை சுதந்திரக்கட்சி.

லங்கா சமசமாஜக்கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, கம்யூனிஸ்ட்கட்சி போன்றவற்றை அழைப்பதற்கு ஜனாதிபதி முடிவு செய்துள்ளதாக இதன் ஆசிரியர் குறிப்பு தெரிவிக்கின்றது. இதில் மேலும், லங்கா கார்டியனில் திருமதி பண்டாரநாயக்கா அளித்த பேட்டியின் சாரம் அதாவது த. ஐ. வி. முன்னணி முன் நிபந்தனைகளின்றி மாநாட்டிற்கு அழைக்கப்படுதல் வேண்டும் என்ற ஆலோசனையும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

29. இலங்கை அகதிகளை இந்தியா ஏற்றுக்கொள்ள மாட்டாது. தமிழ் ரைம்ஸ் 83 11 00 V. 3 (1) ப–17

இனக் கலவரங்கள் காரணமாக இலங்கையிலிருந்து வரும் லட்சக்கணக்கான தமிழ் அகதிகளை இந்தியா ஏற்றுக்கொள்ள மாட்டாது என இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி தெளிவாகக் காட்டியுள்ளார். மேலும் அவர், இந்திய அரசாங்கத்திற்கும், தமிழ்த் தலைவர்கட்கும் இடையில் நேரடியான தொடர்பு அவசியம் என்பதனை வலியுறுத்துவதோடு, அதற்கு இந்தியா தனது நல் ஆதரவினை வழங்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

30. தேசிய சமாதானம், இணக்கத்திற்கான மக்களின் பிரகடனம்: கொழும்பு – 83.11.00 – 24. ப

1983 ஒக்டோபர் 1-2 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் சமுகமளித்திருந்த நபர்களினால் கையெழுத்திடப்பட்ட அறிக்கை இதில் கூறப்பட்டுள்ள விபரங்களாவன: ஓர் நிறைவு தொகுப்பு, அறிமுகம், விதிகள், சமுதாயத்தில் பொதுவான இனச்சீரழிவுக்கான குறியீடுகள் இனச்சீரழிவுக்கான காரணங்கள், கல்வி முறை, அரசசட்டங்களையும், சமூக நியமனங்களையும் மீறுதல், சமுதாய தலைமையினைப் பலவீனப்படுத்தல் அரச சேவையுடன் தலையீடு செய்தல், தவறான வாழ்க்கை முறைகளை உருவாக்குதல், இனச்சீரழிவுக்கான காரணங்களைக் களைவதற்கான வழிகள் ஆகியனவாகும். மேலும் பொதுவான சிபார்சுகள், சமுதாய வளர்ச்சிக்கான சிபார்சுகள், மக்கள் பங்கேற்றல், அரசியல் கட்சிகள், நிறைவேற்று ஜனாதிபதி, கல்வி, நிலம், மக்கள், தொழில், தீர்மானம் எடுத்தல் போன்றவையும் காணப்படுகிறது.

31. கொழும்பிற்குப் பார்த்தசாரதியின் தூதுக்குழு தமிழ் ரைம்ஸ் 831100 V. 3 (1) - 24 ப

இக்கட்டுரை, கொழும்பிற்கு இந்திரா காந்தியின் சிறப்புத் தூதுவரின் வருகை பற்றியும், இரு அரசாங்கங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டங்கள் பற்றியும் மேலோட்டமாக ஆராய்கிறது இத்திட்டங்கள் முற்று முழுதாக தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதவை எனவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

32. டீ சில்வா மேர்வின் பேச்சுவார்தைக்கான காலம் உகந்தது. ஆனால் நேரம் போய்க்கொண்டிருக்கிறது.

தொண்டமான் லங்கா கார்டியன் 83.11 01 V 6 (13) 3-ப 4 - 6 அமைச்சரும், இ. தொ. காங்கிரஸ் தலைவருமான தொண்டமான் அண்மையில் இந்தியாவிற்கும், ஐக்கிய அமெரிக்காவிற்கும் சென்று வந்துள்ளார். இந்தியாவில், இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசு தொடர்பு கொள்ளும் முறைபற்றி பலமான விமர்சனங்களை இவர் கேள்விப்பட்டுள்ளார். தமிழர்கட்கு அநீதி இழைக்கப்படுகின்றதென்பதில் த. ஐ வி முன்னணிக்கும், இ. தொ. காங்கிரசிற்கும் இடையே ஓர் பொதுவான தன்மை நிலவுவதை அவர் காண்கிறார். பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு நம்பிக்கையிருப்பதாகத் தெரிவிக்கின்றார். த. ஐ வி. முன்னணி, தனிநாட்டுக் கோரிக்கையினை விடும பட்சத்தில், அதற்குப் பதிலான தகுந்த மாற்றீடு முன்வைக்கப்படுவதன் அவசியத்தினையும், இவ்வாறு ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓர் உடன்பாட்டினை இந்தியாவின் நல் ஆதரவு மூலமே பெற முடியும் என்பதனையும் தெரிவித்துள்ளார்.

(தொடரும்)

## தமிழர்களுக்கு எதிரான

# மனித உரிமை மீறல்களின் குறிப்பேடு

### 2 - 1 - 1985

| இடம் | தன்மை | சம்பவ விபரம் |
|---|---|---|
| முல்லைத்தீவு | ஏனைய | மாங்குளம், முல்லைத்தீவுப் பகுதிகளில் உழவு இயந்திரங்களை உபயோகிப்பதற்கு பாதுகாப்புப்படையினர் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். மோட்டார் சயிக்கில்களை பொலிசாரிடம் கையளிக்க வேண்டுமென எல்லா மோட்டார் சயிக்கில் சொந்தக்காரரும் பணிக்கப்பட்டனர். |
| வவுனியா | இறப்பு, காயம் | இளம் மருதங்குளத்திற்கு அண்மையிலுள்ள ஒரு வயலில் வேலை செய்துகொண்டிருந்த ஒரு குடும்பத்தினர்மீது ராணுவத்தினர் சுட்டதில் சின்னப்பு யோகராஜா, யோகேஸ் (வயது 12), யோகேஸ்வரி (வயது 14), சுந்தரம் இரத்தினம் (வயது 30) ஆகியோர் கொல்லப்பட்டனர். யோகராஜா யோகநாதன் (வயது 10) படுகாயமடைந்தார். |

### 3 - 1 - 1985

| இடம் | தன்மை | சம்பவ விபரம் |
|---|---|---|
| மட்டக்களப்பு | கைது, காணாமல்போனவர் | புல்லுமலை, பிள்ளையார் கோவிலில் திருவெம்பாவை பூஜை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, என். இராஜேஸ்வரன் (வயது 22), கே. திருநாவுக்கரசு (வயது 17), ஐ கணேசராஜா (வயது 20), சி. விக்னேஸ்வரன் (வயது 19). எஸ். சுதுமாரன் (வயது 20), ரி. சக்திவேல் (வயது 22) ஆகியோரும், இரு அரசாங்க நில அளவையாளர்களாகிய கே. தங்கராஜா (வயது 30), எஸ். விஷ்ணுநாதன் (வயது 26) ஆகியோரும் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டனர். இவர்களைத் தாம் கைது செய்யவில்லையென பொலிசார் பின்னர் மறுத்துள்ளனர். |
| கொழும்பு | ஏனைய | யாழ்ப்பாணம் பிரஜைகள் குழுவின் தூதுக்குழு, சுவிஸ் அரசாங்கத்தின் பிரதிநிதிகளான பேராசிரியர் ஹென்றி ஒற், பி. மொனெட் ஆகியோருடன் கலந்துரையாடினர்கள். |
| யாழ்ப்பாணம் | காயம், காணாமல்போனவர் | வசாவிளானைச் சேர்ந்த 60 வயதான நாகமணி சண்முகம் ஆனையிறவுக்கு அண்மையில் கண்டி வீதி வழியாக கால்நடைகளைக் கொண்டு செல்கையில் ராணுவத்தால் தொடையில் சுடப்பட்டு காயப்படுத்தப்பட்டார். அவருடன் சென்ற 14 வயதுள்ள சின்னராசா ரவீந்திரன் காணாமல் போய்விட்டார். |
| யாழ்ப்பாணம் | ஏனைய | பருத்தித்துறை இணைப்புச்சேவைகள் முகாமின் 40 யாருக்கு உட்பட்ட நிலப்பகுதி பாதுகாப்புப் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டது. ஏற்கெனவே கடற்கரையோரத்திற்கு அப்பால் பிரகடனப்படுத்தப்பட்ட 100 யார் பிரதேசத்துடன் இதுவும் சேர்த்துக்கொள்ளப்படும். ஹாட்லிக் கல்லூரியும், தபாற்கந்தோரும் பல தெருக்களும் இப்பகுதியில் அடங்கும். |
| யாழ்ப்பாணம் | அறிக்கை | வடபகுதியில் 14,000 குடும்பங்களைச் சேர்ந்த 75,000 மக்கள் பாதுகாப்புச் சட்டங்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். |
| யாழ்ப்பாணம் | சித்திரவதை | பண்டத்தரிப்பில் ராணுவத்தால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட இளைஞர்கள் சிலர், சித்திரவதைக்குட்பட்டதனால் மூளைக்கோளாறு உள்ளவராகக் காணப்பட்டனர். அவர்கள் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். |
| யாழ்ப்பாணம் | சேதம், காயம் | ராணுவத்தினர் புன்னாலைக்கட்டுவனில் ஓர் உழவு இயந்திரத்தை எரித்தனர். கோண்டாவில் பஸ் டிப்போவிற்கு அருகே ஒரு மினி பஸ்ஸையும் ஒரு மோட்டார் வண்டியையும் அடித்து துவம்சம் செய்து, ஒரு சாரதிக்கு காயம் ஏற்படுத்தினர். தெல்லிப்பழையில் பாண் ஏற்றிச் சென்ற ஒரு வானைச் சேதப்படுத்தினர். |
| யாழ்ப்பாணம் | சேதம் | ஊர்காவற்றுறை, மாதகல் கடற்கரையோரங்கள், கடலிலிருந்து கடற்படையினரின் 'செல்' தாக்குதலுக்குள்ளாயின. மக்கள் வேறு பகுதிகளுக்குப் பாதுகாப்புக் கருதிச் சென்றனர். |
| மன்னார் | ஏனைய | மன்னார் ஆண்டாள்குளம் வீதியில் வசித்துவரும் 100 குடும்பங்கள்வரை பாதுகாப்புப் படையினரின் தாக்குதலுக்குப் பயந்து பிற்பகல் 2 மணிக்குப் பின்பு காடுகளுக்குச் சென்று பொழுதைக் கழிக்கிறார்கள் என்பது அறியப்பட்டுள்ளது. |
| தமிழ்நாடு | அகதிகள் | பாதுகாப்புப் படையினரின் அட்டூழியங்களினால், ஸ்ரீ லங்காவின் வடபகுதியிலிருந்து 400 தமிழ் அகதிகளை ஏற்றிச்சென்ற ௦ வள்ளங்கள் இந்தியாவிலுள்ள நாகபட்டினத்தைச் சென்றடைந்தது. 350 பேரை ஏற்றிக்கொண்டு ஸ்ரீலங்காவை விட்டுப் புறப்பட்ட 3 வள்ளங்கள் இன்னும் வந்துசேரவில்லையென அகதிகள் கூறினார்கள். |

### 4 - 1 - 1985

| இடம் | தன்மை | சம்பவ விபரம் |
|---|---|---|
| மட்டக்களப்பு | கைது | விசேட துப்புத்துலக்கும் பிரிவினர் சித்தாண்டியைச் சேர்ந்த விவசாயியா ர நல்லதம்பி சின்னத்துரை (வயது 22) என்பவரைக் கைது செய்தனர். |
| மட்டக்களப்பு | கைது | குருகுலசிங்கம் தயானீஸ்வரன் (பேக்கறித் தொழிலாளி), தங்கராசா தில்லையம்பலம், குஞ்சித்தம்பி சிவராசா (லொறிச்சாரதி). கந்தையா ஞானசேகரம் (கிளினர்) ஆகியோர் திக்கோடையில் உகண பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். |
| மட்டக்களப்பு | கைது | ஆறுமுகத்தான் குடியிருப்பில் இராமசாமி கனகரத்தினம் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டார். |
| யாழ்ப்பாணம் | சேதம், காயம் | இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் வாகனங்களைச் சோதித்த ராணுவத்தினர், திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகஞ்செய்து கதிரேசு தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர், வயது 63), காசிப்பிள்ளை ஞானசேகரன் (வயது 22) ஆகியோரைக் கொன்றனர். நடராஜா கனகலிங்கம் (தச்சுத் தொழிலாளி, வயது 35) படுகாயமடைந்தார். (இதன் விளைவாக அவரது இடதுகால் பின்பு எடுக்கப்பட்டது.) கொலைகள் குறித்து விசாரணை நடாத்திய நீதிபதி கொலை எனத் தீர்ப்பளித்தார். |
| யாழ்ப்பாணம் | இறப்பு | திருநெல்வேலி தெற்கைச் சேர்ந்த கணேசன் சோமேஸ்வரன் (மாணவன், வயது 21) என்பவரைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொன்று சடலத்தை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். |

(தொடரும்)

## முன்செல்ல ஒரு பாடல்

அன்பே —
ஓர் பாடல் பாடு
களைத்த இதயம்
கண்மூடி மயங்கவும்
இறக்கை கட்டிப்பறக்கவும் அல்ல

கட்டி வைத்திருக்கும் கைவிலங்குகளை
கழற்றி எறிந்து
முன் செல்ல.

இருளில் மறைந்த வாழ்வு
ஒளியில் புலர,
ஓர் சூரியனைக் கொணர.

எஸ். எச். எம். ரபீக் □

## பக்கவாத்தியங்கள் இல்லாத பாட்டுக் கச்சேரி

இவன்:
பக்க வாத்தியங்கள் இல்லாமல்!
கச்சேரி செய்யும்
ஒரு பாட்டுக்காரன்.

இவன் செய்யும் கச்சேரிகள்;
பக்க வாத்தியங்கள் இல்லாத வெறும்
பாட்டுக் கச்சேரிகளாயும்
தன் ஆசைக்கு
இவனே தேடிப் போய்ச் செய்யும்
'ஓசி'க் கச்சேரிகளாயும் இருப்பதால்
எப்படித்தான்
'சுருதி' சுத்தமாகவும் 'லயம்' தவருமலும்
(இ) ராக 'பாவம்' சிறக்க
பொருள் பொதிந்த 'உருப்படி' களை!
பொறுக்கி எடுத்த 'தில்லறை' களை!
தேவார திருவாசகங்களை
திருமந்திரத்தை, 'தேவர்நாமா'வை,
திருப்புகழை 'தில்லாஞ' வை
பிசிறில்லாத தன் இனிய குரலில்
வெகு
அருமையாக இவன் மேடைகளில் பாடினுலும்
இவன் கச்சேரி 'ஓடியன்ஸ்' ஸைக் கவர்வதில்லை
இவன் பாட்டெதற்கும்
கைதட்டி ஆரவாரம் செய்து
மகிழ்ச்சி தெரிவிக்கப் படுவதில்லை.

'இனிப்பது' நஞ்சானுலும்! அதை
எவ்விலை கொடுத்தும் வாங்கி
விருப்பொடு உண்கிருர்கள்!
'கசப்பது' மருந்தானுலும்! அதை
காசின்றிக் கொடுத்தாலும்
எமக்கிந்தக் 'கசப்பு' வேண்டாம்
என்றேற்க மறுக்கின்றர்கள்!
உண்மையில்
பக்க வாத்தியங்கள் இல்லாத
ஓசிக் கச்சேரி படுதோல்விதான்!
இவனுக்குத்தான் அல்ல;
எவனுக்கும்தான்!
இங்குதான் அல்ல,
எங்கும்தான்!
இன்றுதான் அல்ல;
என்றும்தான்!

— மாஜினி □

## சந்தேகம்

இப்பொழுது
எனக்கு
உன்மீதும்
சந்தேகந்தான்.

சாத்தான்களே
வேதம் ஓதுகின்றன,

கடவுளோ,
கண்மூடி மௌனியானுர்.

இப்பொழுது
எனக்கு
என்மீதும்
சந்தேகந்தான்.

நெடுந்தீவு மகேஷ் □

# இன்னொரு முகம்

அ. யேசுராசா

ஈழத்தின் மூத்த ஓவியர்களில் ஒருவரான அ. மாற்கு வின் ஓவிய — சிற்பக் காட்சி மார்ச் 17, 18 ஆம் திகதிகளில் யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இன்னொரு முகம் என்ற தலைப்பிலான இக்காட்சியை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் பிரிவு ஒழுங்கு செய்திருந்தது. 89 ஓவியங்களும் 40சிற்பங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. கண்காட்சியை ஒட்டி மாற்குவின் படைப்புக்களைத் தாங்கிய சிறு நினைவு வெளியீடொன்றும்வெளியிடப்பட்டது தமிழியல் நிறுவனத்தால் மாற்குவின் 15 வர்ண ஓவியங்கள் படஅட்டைகளாக (Picture Cards) தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டன.

இரண்டாம் நாளன்று மாலை 4.30 மணிக்கு, மாற்குவின் படைப்புகள் பற்றிய கலந்துரையாடலொன்று நடைபெற்றது. ஓவியர் ரமணி கலந்துரையாடலின் இணைப்பாளராகச் செயற்பட்டார் மூத்த ஓவியர், ஓவிய மாணவர், கலையார்வமுள்ள இளைஞர் என, ஏராளமானோர் இக் கலந்துரையாடலுக்கு வந்திருந்தனர்.

### ரமணி

25 ஆண்டுகளாக மாற்கு மாஸ்ரருடன் தொடர்பு கொண்டுள்ளேன். 60 களில் அவருடன் தொடர்பு கொண்டு வளர்ந்தவன் நான். அவர் மறைவாகவே இருந்து வளர்ந்தவர். பின்னர்தான் சிரித்திரன் அலை, மல்லிகை போன்ற சஞ்சிகைகள் அவரை வெளிப்படுத்தின. தென்னிலங்கையில் இத்தகைய காட்சிகள் ஒரு கிழமை, இரண்டு கிழமை, வரை நடைபெறும். இங்கு இரண்டு நாட்கள் நடைபெறுகிறது. அது தான் ஒரு குறை.

### சோ. கிருஷ்ணராஜா

அண்மைக்காலமாக ஓவியம் பற்றிய அக்கறை வளர்ந்து வருகிறது. தேடலும் படைப்புலகமும் நூல்மூலமான அறிமுகத்தைத் தொடர்ந்து இக் கண்காட்சி அவரை வெளிக்கொண்டு வருகிறது. தனித்துவமான ஓர் ஓவியர். நூல்கள் ஆயிரக்கணக்கில் அச்சிடப்படுகின்றதால் பலரால் படிக்கப்படுகின்றன. ஆனுல் ஓவியம் ஒரு பிரதிதான் படைக்கப்படுகிறது இதனுல் மக்களிடம் போகும் சாத்தியப்பாடு அதற்குக் குறைவு திசை, ஓவியத்துறை வளர்ச்சிக்கு உணர்வு பூர்வமாகப் பணியாற்றி வருகிறது. மாற்குவின் நோக்கம் கலைக்கோட்பாடு என்பன விரிவாக ஆராயப்பட வேண்டும். ஏராளமான ஓவியங்கள் அவரிடம் முடங்கிக் கிடக்கின்றன. கன்வஸிலும் அவர் ஓவியம் வரையவேண்டும்.

### ரமணி

மாற்கு பயன்படுத்திய சாதனங்கள் சாதாரணமானவை. சோக்கு, மட்டை, கடதாசி ஆகியவற்றையே மாற்கு பெரிதும் பயன்படுத்துகிருர். இவை குறுகிய காலத்திற்குத்தான் நின்றுபிடிக்கும். கன்வஸ், எண்ணெய் வர்ணம் (Oil Paint) போன்றவற்றின் விலை மிக அதிகம். போதிய வருமானம் கிடைத்தால் அவரால் இவற்றைப் பயன்படுத்த முடியும்.



### க. கனகசபாபதி

படம் தத்ரூபமாக வேண்டுமென்ற கருத்து முன்பு இருந்தது. கமரா வந்ததும் இது போல் ஏன் செய்யவேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. வரலாற்றில் பல்வேறு கலைக்கோட்பாட்டு ஓவியங்கள் படைக்கப்பட்டுள்ளன, பெரும்பாலானவை அவை வரையப்பட்ட காலங்களில் உரிய மதிப்பைப் பெறவில்லை. சாதனங்களின் விலைகள் மிகவும் அதிகரித்துவிட்டன. நீடித்து நிலைக்கும் ஓவியங்களைப் படைக்க, இவற்றை வாங்க, நாம் ஓவியருக்கு உதவவேண்டும். ஓவியத்திற்கு வண்ணம், வடிவம், கோடுகள் தான் அடிப்படை. பல ஓவியர்களைப் பார்த்துள்ளேன். ஆனுல் S R. கனகசபையைப் போல் உருவப்படத்தை விரைவாக வரைபவர்களைப் பார்க்கவில்லை அவரது Black out என்ற ஓவியத்தில், இருளும் ஒளியும் அற்புதமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

### கொ. றெ. கொன்ஸ்ரன்ரைன்

ஓவியத்தில் எதை நாம் காண்கிறோம்? சிலர் ஓவியனைக் காண்பதாகக் கூறுகிருர்கள். சிலர் அறிவாற்றலை, உணர்வைத் தேடுகின்றனர் அவரது ஆரம்பகால கழுவுதற் பாணி ஓவியங்களில் Craftmanship (வினைத்திறன்) ஐக் காணலாம். நிறம்பற்றிய பிரக்ஞை, இசைவு, சமநிலை என்பன அழகியற் பரிமாணம். மற்றது உணர்வுப் பரிமாணம், உதாரணம் சோகம், மூன்ருவதாக தேர்ந்தெடுக்கும் பாணி. உதாரணம், பிக்காசோ. ஓவியத்தைப் பார்க்கும் பார்வைகள் வேறுபடலாம், Composition உருவவெளிப்பாடுகளை உக்கிரத்துடன் வெளிக் கொண்டு வருவதற்குப் பயன்படுகிறது. ஜாமினிராய், கீற்ஸ் ஆகியோரின் கீழைத்தேயப் பாணியை மாற்குவின் ஆரம்பப்படைப்புகளில் காணலாம். கியூபிசத் தன்மையை தாகூர், காந்தி ஆகியஓவியங்களில் காணலாம். ஆரம்பத்தில் இது குறைவு. ஆனுல் தடலின் ஆரம்பத்தைக் காணலாம். 70 களில் கோடுகளின் செல்வாக்கைக் காணலாம். ராகங்களைப் பற்றிய ஓவியங்களில் விளக்கப் படத் தன்மைகளைக் காணலாம். இவரது கோடுகளின் வெளிநீட்டங்களில் கியூபிசத் தன்மையைக் காணலாம். ஆனுல் அவரது கோடுகள் ஒரு திசையினைக் கொண்டுள்ளன. இதுவரை பரிசோதனை ரீதியில் தேடிக் கொண்டிருக்கிருர்.

பிற்காலப் படைப்புகளில் தொடர்புறுத்தும் தன்மை வெற்றிகாண்கிறது. அவரது உணர்வுப் பரிமாணம் உச்ச வெளிப்பாட்டைக்காண்கிறது,

அண்மையில் ரிச்சாட் கபிரியலிடம் மாற்குவின் சில ஓவியப் பிரதிகளை 'அருந்ததி' காட்டிய போது, அவர் வியந்திருக்கிருர். அவரதுகருத்து முக்கியம். மேல் நாட்டாரின் நோக்கிலல்லாது, நாம் சுயமாக எமது படைப்புகளைப் பார்க்கவேண்டும். சிற்பி சிவலிங்கம் கூறினர், 'மாற்குவின் பிற்கால ஓவியங்கள் highly expressive ஆக இருக்கிறது' என்று இயன் குணநிலக்க என்னிடம் ஒரு முறை கேட்டார் 'உங்களிடம் போர்க்கால ஓவியம் இருக்கிறதா' என்று. இதேபோன்று தான் வெளிநாடுகளிலும் இருக்கும்.

ஹென்றி மூரின் பிரமாண்டப் படைப்புகளைச் சிறிய அளவில் பார்த்தால் விசராகத்தான் இருக்கும். மாற்குவின் சிற்பங்கள், பெரிய படைப்புகளுக்கான மாதிரிகளே. நாம் பெரிய கட்டிடங்கள், வெளிகளில் நவீன சிற்பங்களை வைக்க முயல வேண்டும்.

### ஓவியர் நடராசா

கண்காட்சிப் பகுதி இத்தகைய கலந்துரையாடலை வைத்தது மகிழ்ச்சிக்குரியது. இப்பொழுது ஏற்பட்டுவரும் மாற்றத்தை சமூகத்தில் ஏற்பட்டுவரும் மாற்றமாகவே கருதுகிறேன்.

### சு. வில்வரத்தினம்

சிற்றிலக்கியச் சஞ்சிகைகள் இங்கும், தமிழகத்திலும் ஓவியத்தை மக்கள்முன் கொண்டுவர உதவின. அதன் உச்ச விளைவை இங்கு நாம் அனுபவிகிறோம். மிகுந்த தன்னடக்கத்தோடு ஏனையோரினதும், மாணவர்களினதும் படைப்புக்களை கண்காட்சிகளாக்க உதவி, இறுதியில் தன்னை இக் காட்சிமூலம் வெளிக்கொண்டு வந்தமை மதிக்கத்தக்கது.

### ஓவியர் ரமணி

மாற்குவின் ஓவியங்களில் சிறப்பாக அமைவது, அதிலுள்ள பின்னணி அதன் முழுமைக்கு எல்லாவற்றையும் சேர்த்துத்தான் பார்க்க வேண்டும்.

குப்பிளான் ஐ சண்முகம், சி. ஜெயசங்கர், க. சிதம்பரநாதன, அ. யேசுராசா ஆகியோரும் கருத்துத் தெரிவித்தனர்.

இறுதியில் அ. மாற்கு பேசினுர். தனக்குச் சாதனங்கள் முக்கியமில்லையென்றும்,படைப்புந்தல் நிகழுகையில் எதையும் பயன்படுத்துவதாகவும் கூறிய மாற்கு, எழும் உணர்ச்சிகளை உடன் வரைவதற்கு சிறிய அளவிலான படங்கள் வசதியாக உள்ளன வென்றும், தனது முக்கிய பெறுபேறு தனது மாணவ பரம்பரைதான் என்றும் குறிப்பிட்டார். □

திசையின் சிறுகதை

# வெளிநாட்டுக் காசு


அழகு அருணாசலம்

பங்குனிமாத வெயில் நெருப்பாய் எரித்துக்கொண்டிருந்தது. செடிகளும் கொடிகளும் பற்றைகளும் வெப்பம்தாங்காமல், கருகி இலை உதிர்த்து மொட்டையாகி நின்றன. காற்று? அதுவும் எங்கேயோ தூங்கி விட்டதோ? பங்குனியில், அதுவும் மத்தியான நேரத்தில் திடீரென்று ஓடி ஒழித்து, மனிதரை வாட்டி வதைப்பது அதன் வழக்கமாகி விட்டது.

வெயிலின் அகோரமும், மன உழைச்சலும் சேர்ந்து உடம்பு முழுவதையும் நசிக்கத் தள்ளாடித் தள்ளாடி வந்து கொண்டிருந்தார் அண்ணாமலை. உள்ளங் காலினூடாக உச்சியில் சூடேற்றிய மணல் பாதையை விட்டு விலகி, ஒழுங்கை ஓரத்தில் நின்ற பூவரச மர நிழலில், நின்று நின்று இளைப்பாறிப் பயணத்தைத் தொடர்ந்தார். கையில் இருந்த பழைய குடையும், கடதாசியால் சுற்றி 'ஷொப்பிங் பாக்கில்' சுருட்டிப் பத்திரமாக, மடியில் வைத்திருந்த சிறிய பார்சலும், அதிக கனமாக இருப்பதாக அவருக்கு ஒரு உணர்வு. ஏமாற்றத்தினால் ஏற்பட்ட வெட்கமும், காரியம் நடக்கவில்லையே என்ற துக்கமும், மனதை நிறைத்துப் பாரமாக்கி அமுக்கிக் கொண்டிருப்பதை அவருடைய முகம் தெளிவாகக் காட்டியது.

படலையைத் திறந்து கொண்டு சென்று விறுந்தையில் இருந்த வாங்கில் மெதுவாக உட்கார்ந்தவர்- களைப்பின் மிகுதியால் 'உஸ் அப்பாடா' என்றபடி நீட்டி நிமிர்ந்து, ஆயாசம் தீரப் படுத்துவிட்டார்.

ஆளரவம் கேட்ட மாணிக்கம் அண்ணாமலையினுடைய அன்பு மனைவி. "ஆ.. ஆ... ரது" என்று நீட்டிக் குரல் கொடுத்தபடி வெளியே வந்து- புருஷன் வாங்கில் படுத்திருப்பதைக் கண்டதும்



,'என்ன போன கையோடை வந்திட்டியள். அச்சவாரம் கொடுத்திட்டியளே. எழுத்து எப்பவாம்.'' என்று அங்கலாய்ப்புடன் கேட்டா.

வெயிலில் நடந்து, அலைந்து களைத்த அண்ணாமலைக்கு மாணிக்கத்தின் கேள்வி எரிச்சலையும் கோபத்தையும் ஒருங்கே உண்டாக்கியது. எழுத்தும் இல்லை, ஒரு இழவும் இல்லை கொஞ்சம் களையாற விடு'' என்று சொல்லிவிட்டுக் கண்களை மூடிக் கொண்டு ஆழ்ந்த யோசனையில் மூழ்கிவிட்டார்.

பொறுமை இழந்த மாணிக்கம் 'என்னப்பா நடந்தது? நான் கேட்கிறன், ஒண்டும் சொல்லாமல் கண்களை மூடிக் கொண்டு படுத்து விட்டியள்; நடந்ததை எனக்கும் சொல்லுங்கோவன் நல்லகாரியம் பார்க்கப் போய் இழவு அது இது எண்டு அபசகுனம் மாதிரி- சொல்லக்கூடாதது எல்லாம் சொல்லுறியள்'' என்று கவலையுடன், எங்கேயோ பார்த்தபடி புறு புறுக்கத் தொடங்கி விட்டாள.

மாணிக்கத்தின் சுபாவமே அதுதான். நடந்தவைகளைச் சொன்னால்தான் புறுபுறுப்பு நிற்கும்; அவவின் முகத்தில் புன் சிரிப்பு மலரும். அதுவரை நச்சரித்துக் கொண்டே இருப்பா என்பது அண்ணாமலைக்கு நல்லாகத் தெரியும். விஷயத்தைச் சொல்லிவிட வேணடியதுதான் என்று தீர்மானித்து- 'ம் .. ம் ..' என்றபடி ஒரு பெருமூச்சை வெளியே விட்டுக் களைப்பையும், மனதில் உள்ள பாரத்தையும் சிறிது குறைத்துக் கொண்டு நாங்கள் கேட்டதைவிட பதினையா- யிரம் கூட்டிக் கேட்டு, விலை தீர்த்து அச்சவாரமும் கொடுத்திட்டாரம் முருகேசர். நாங்கள் விலைபேசின கையோடை அச்சவாரம் கொடாமல் விட்டது பெரிய பிழையாய்ப் போச்சு. அச்சவாரம் எண்டு கை நீட்டிவாங்கினால், அவை இன்னொருத்தரிட்டைக் காசு வாங்க முடியுமோ? பேச்சு மாறமுடியுமோ?'' என்று மனதில் இருந்த கவலைகளைச் சொற்களாக்கி வீசிக்கொண்டிருந்தார் அண்ணாமலை. பாவம் அண்ணாமலை! கையில் காசு இருந்திருந்தால் உடனே அச்சவாரம் கொடுத்திருப்பார். அவர் காசு ஆயத்தம் செய்து கொண்டிக்க முருகேசர் இப்படி வம்பு செய்வார் என்று யாருக்குத் தெரியும்.

"அழிஞ்சு போவார் வெளி நாட்டுக் காசை வைச்சுக் கொண்டு ஊரிலே உள்ள காணியளையெல்லாம் வாங்கித் தள்ளுகினம். இவங்களாலே இந்த ஊரிலே இருக்கிறவை, கஷ்டப்பட்டு உழைச்சு ஒரு குழி நிலம்கூட வாங்க முடியாது. அவங்கள் போட்டி போட்டுக் கொண்டு ஆனைவிலை குதிரை விலை குடுப்பினம். கடவுளே நாங்கள் என்ன செய்யிறது. உவ்வளவு காசைக் கொட்டிக்குடுத்து. அந்த நிலத்துக்கை தங்கமோ வெள்ளியோ கிண்டி எடுக்கப் போகினம்''? என்று ஒப்பாரி வைக்கத் தொடங்கி விட்டா மாணிக்கம்.

''சரியப்பா உன்ரை ஒப்பாரியைக் கொஞ்சம் நிற்பாட்டு. எது எது எப்பிடி நடக்க வேணுமோ, அப்பிடித்தான் நடக்கும். வீணாய் அழுது புலம்பி, கத்தி கவலைப்பட்டுப் பிரயோசனம் இல்லை. எங்களுக்கு அந்தக் காணி வர வேண்டிய பலன் இருந்தால் வந்திருக்கும்தானே! இந்தக் காசைக் கொண்டுபோய்ப் பத்திரமாக வை. ஏதோ கடவுள் விட்டவழி'' என்று சொல்லியபடி மடியில் வைத்திருந்த காசை மாணிக்கத்திடம் கொடுத்தார்.

மாணிக்கத்தைச் சமாதானப் படுத்த, நடந்தவைகளைச் சாதாரண விஷயங்களாக வெளிக்குக் காட்டி நடித்தாலும், முருகேசருடைய 'புதுப் பணக்காரப்புத்தியை' எண்ணி வேதனையும் ஆத்திரமும் அடைந்தார் அண்ணாமலை.

ஆத்திரம் வராதா என்ன? அந்தப் பத்தாயிரம் ரூபாவைத் திரட்ட அவர் பட்டபாடும், அலைச்சலும் அவருக்கு மட்டும் தான் தெரியும். மாணிக்கத்தின் கையில் இருந்த ஒரு சோடி காப்பையும், அவர் நெடு நாட்களாகப் போட்டிருந்த நீலக்கல்லுப் பதித்த மோதிரத்தையும் விற்றுப் பணமாக்க — யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக் கடைகளில் ஏறாதபடிகள் இல்லை.

''டவுண் விலை இறங்கிப் போச்சு'' என்ற வழமையான வியாபாரத் தந்திரச் சொல்லடுக்குடனும், முகச்சுழிப்புடன் தேய்த்துப் பார்த்து, நிறுத்துக் கணக்குப் பார்த்து, பெறுமதியைக் கடைக்காரர் சொல்லும் பொழுது ''அட இது எந்தமூலைக்குக் காணும்'' என்று மனதுக்குள் அங்கலாய்த்தார் அண்ணாமலை.

கடைசியில் வந்தது வரட்டும் என்ற தீர்மானத்துடன் விற்கத் துணிந்து விலை பேசிய பொழுது பத்தாயிரம்தான் கைக்கு வரும்போலத் தெரிந்தது. அந்தத் தொகை, அவருடைய அப்போதைய தேவைக்குப் போதும் என்ற திருப்தியுடன் காசை வாங்கிக் கொண்டார்.

அவசரமாக விற்க வேண்டி வந்ததில், ஆயிரம் ரூபாய் வரையில் நட்டமடைந்ததை எண்ணி உள்ளுக்குள் கவலையடைந்தாலும், ஒருவரிடமும் கைநீட்டாமல் சுண்ணியமாகத் தனது காரியம் பார்க்க நகைகள் உதவியதே என்ற சந்தோஷத்துடன், நிலம் விற்பவரிடம் காசோடு போக அதற்குள் அண்ணாமலை கேட்டதைவிடப் பதினையாயிரம் ரூபாய் கூட்டிக் கேட்டு, விலை தீர்த்து, அச்சவாரமும் கொடுத்துவிட்டார் முருகேசர்.

அண்ணாமலையின் மூத்தமகள் மல்லிகா, ''மல்லி மல்லி'' என்று எல்லோரும சுருக்கமாகவும் செல்லமாகவும் அழைக்க இயற்பெயரான மல்லிகா பிறப்புப் பத்திரத்திலும் பள்ளிக்கூட இடாப்பிலும் ஒழித்துக்கொண்டது. ''மல்லியக்கா மல்லியக்கா'' என்று கூப்பிட்டபடி அவளைத்தேடிவரும் சிநேகிதக் கூட்டத்துக்கு அளவே இல்லை.

ஏ எல். பரீட்சையை மூன்றுவது முறையாகவும், கடைசி முறையாகவும் எழுதிவிட்டு இந்த முறையாவது நல்ல 'றிசல்ற்' வராதா என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். கெமிஸ்ட்றியிலும் மற்ஸ்ஸிலும் மகா கெட்டிக்காரி என்று பேர் எடுத்திருந்தாலும், முந்திய இரண்டு தடவைகளிலும் பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான புள்ளிகளைப் பெறமுடியாமல் போனது. மல்லியின் போதாத காலமோ அல்லது கொம்பியூட்டர் செய்த கொடுமையான கோளாறோ யார் அறிவார்?

எழுதாதபாடத்துக்கேபுள்ளி போட்டுக் கொடுக்கும் கொம்பியூட்டர் எதைத்தான் செய்யாது என்றுகவலையடைந்தாள். தன்னுடன் படித்த வாணியும் மனோவும் சென்றமுறை தெரிவாகிப் பல்கலைக் கழகத்துக்குள் புகுந்து விட்டது மல்லியை என்னவோ செய்தது. அது பொறாமையா, அல்லது ஏமாற்றமா ?

சிரித்தமுகம் இனிமையான பேச்சு, கனிவான சொல்லு - நகை நட்டு என்று எதுவும் அதிகம் இல்லாமலே அழகாக இருப்பாள் மல்லி. ''சிரித்தால் முத்துதிரும் வாய் திறந்தால் தேன் சொரியும்'' என்ற பாடலை மல்லியைப் பார்த்த பின்பு தான் கவிஞர் எழுதினரோ என்று எண்ணத் தோன்றும். மாலை வேளைகளில் மல்லியிடம் 'ரியூஷனுக்கு' வரும் மாணவர்களில் ஆரம்ப வகுப்பு முதல் ஏ எல். படிக்கும் மாணவர்கள் வரை இருப்பார்கள்.

விஞ்ஞான பாடங்களைப் பரீட்சைக்கு எடுத்த மல்லிக்குக் கலைப்பாடங்களும் கைவந்தவை, அவள் எந்தப் பாடமும் படிப்பிக்கும் சாமர்த்தியம் வாய்ந்தவள்.

''கல்விச் செல்வம் தீயால் எரியுண்ணாதது, கள்வரால் கவரப்படாதது. எடுக்க எடுக்கக் குறையாதது, 'தொட்டனைத் தூறும் மணற் கேணி' போன்று கற்றாலும் கற்பித்தாலும் அறிவு வளர்ந்து கொண்டே போகும். ஒருவர் செய்த பாவ புண்ணியங்கள் போல கற்ற கல்வியும் பிறவிகள் தோறும் தொடர்ந்து கூடவரும் — முற்பிறவியில் நிறையக் கற்று அறிவு பெற்றவர்கள், அடுத்த பிறவியில் இளமையிலேயே, மிகவும் கூர்மையான புத்தியுள்ளவர்களாக விளங்க இதுவே காரணம். சிறிது தீட்டினாலும் கூர்மையடையும் உருக்குக் கத்தி போன்றவர்கள் இவர்கள். ஏனையோர் எப்படித் தீட்டினாலும் கூர்மையடையாத காய் இரும்புக் கத்தி போன்றவர்கள். எனவே கல்விச் செல்வத்தை வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தேடுங்கள்'' என்று ஒரு புத்தகத்தில் வாசித்திருந்தாள் மல்லி. அந்தத் தத்துவத்தில் அவளுக்கு அசைக்க முடியாத பிடிப்பு ஏற்பட்டு விட்டது.

கற்கவும், கற்பிக்கவும் ஆவல் கொண்ட மல்லி, பணம் எதுவும் வாங்காமல், கல்வியைக் காசுக்கு விற்காமல், கலைமகளுக்கு விலைபேசாமல், தான் கற்றதை மற்றவர்களுக்குத் தானமாகக் கொடுத்துக் கொண்டே இருந்தாள். இதனால் அவள் மன நிறைவும் மகிழ்ச்சியும் அடைந்தாள்.

பல்கலைக்கழகம் சென்று படிக்க வேண்டும் என்பது மல்லியின் ஆசை. ஆனால், அண்ணாமலையின் ஆசையோ வேறாக இருந்தது. மல்லிக்கு ஒரு கலியாணம் செய்து வைத்து விட்டால், தனது கடமைச் சுமையின் ஒரு பகுதியை இறக்கி விடலாம் என்பது அவருடைய அவா. மல்லி படித்துப் பட்டம் பெற்றால் — படிப்புக்கு ஏற்ற மாப்பிள்ளை தேடவேண்டுமே என்ற கவலையும் அவருக்கு இருந்தது.

எப்படி மல்லிக்குக் கலியாணம் செய்து வைப்பது? அண்ணாமலையைப் பெண் கேட்டு இதுவரை யாரும் வரவில்லை. அவரும் மாப்பிள்ளை தேடி, செருப்புத்தேய நடக்கவில்லை. கலியாணத் தரகர்களும் தனக்கு உதவி செய்ய மாட்டார்கள் என்பது அண்ணாமலைக்குத் தெரியும். பணசையில்லாத பெற்றோருடைய பெண்களின் கலியாண விஷயத்தில், தரகர்கள் ஏன் அக்கறை காட்டப் போகிறார்கள்?

ஒருநாள், அண்ணாமலை தனது நண்பர் நாதனைச்

(11ஆம் பக்கம் பார்க்க)

# இளவட்டம்

## காத்து நின்றேன்

ஊரில் ஒரு நாள்
உறங்கும் நேரம்
தெருவில் நான்!

வீடுகள் எல்லாம்
ஒளியில் மிதந்தன!
மின்சாரம் இல்லாத்
தெருக்கள் கூடக்
காடாய்க் கிடந்தது.
இயங்கலின்றித் தவித்தேன்

தடவித் தடவித்
தெருவைக் கடக்க
குடிசை இருக்கும்
குச்சு ஒழுங்கை
கல்லுத் தடக்க
விழுந்து எழுந்தேன்.

குடிசையை நோக்க
கூர்மை பார்வையில்!
தீக்கதிர் வீச்சு
புகை மண்டலம்
விக்கித்துப் போனேன்
எனது குடிசை
எரிந்த தெங்ஙனம்!

ஆத்திரம் நெஞ்சில்!
உயிர்த்தேன் நான்.
நெஞ்சில் ஓருறுதி
நிலைத்து இருக்க
கொடுமையை எதிர்க்கும்
துணிவுடன் நின்றேன்.

காத்து நின்றேன்
கயமைத் தனத்தில்
ஊறிய மனிதரை
நெருங்கத் துணிந்தேன்

— புவிநேசன் □

## சாத்தியமற்ற உயிர்ப்பு

என்னை
நீ
வெதும்பி அழச்செய்தாய்.
இருப்பினும்,
மரத்திலிருந்து
செத்தஇலைகள்
உதிர்ந்த பின்பு,
மீண்டும்
புதிய தளிர்கள்
துளிர்க்காது போகுமா?

இப்போது
நீ
மீண்டும்
வரநினைத்தாய்.
எனக்கோ
உதிர்ந்துபோன
இலைகளுக்காக
மனம் நிறையவே
பரிதாபம் உண்டு.
ஏனெனில்,
மீண்டும் அவை
அரும்பப் போவதேயில்லை;
ஒருவேளை
அம்மரத்திற்கு
எருவாகலாம்.

ஒன்றை மட்டும்
தெரிந்துகொள்:
என்னிடத்தில்
நீ
செத்துவிட்டாய்.
உனது நினைவுகள்
என்
இதயக் கல்லறையில்
புதைக்கப்பட்ட
எலும்புக்கூடுகள்.
உயிர்ப்பு என்பது,
இனிமேல்
சாத்தியமில்லை;

— மாந்தையூரான் □

## தேடல்

வசந்தத்தின் காலடிகள் - என்
வாழ்க்கைப் படிகளில்
எடுத்து வைக்கும்
எதிர்கால நிகழ்வுக்காய்
காத்திருந்தேன்

அதற்கிடையில்
கழுத்து அறுந்த நிலை;
முருட்டு மனநிலைகள்.

கௌரவம் என்பதே
கடைசி இலட்சியம் என்று
அதன் எல்லையை
எட்டிப் பிடிப்பதற்காய்
எதை எதையோ
செய்து தொலைத்தேன்

அவ்வேளை,
வசந்தம் வந்தது.
ஆனால்,
என்னில்
'மனிதம்' இறந்தது.

சுகந்தத்தைச் சுவாசிக்க
வேண்டிய
உரிய காலமும்
கடந்தது.
கலங்குகின்றேன்
உள்ளமும் பேதலிக்கிறது.
மீண்டும்
உயர்வுக்காய்
ஏங்குகின்றது.

உரிய காலம்
கரியாகி விட்டது — இதனால்
நிகழ்காலம்
சுமையாகி விட்டது.
எதிர்கால மாவது
ஏற்றமாய் அமைய
'அனுபவத்தைப்'
பெற்றுக் கொண்டேன்
அதுவே போதும்.

— எஸ். தேவதாஸ் □

## இழப்பு

நாங்கள்
சூரியனைத் தொலைத்துவிட்டு
விடியலைத் தேடிப்
புறப்பட்டதால்
இந்த இழப்பு.

நமது நியாயங்கள்
இருட்டில் கிடந்தபோது
நாங்கள்
வெளிச்சத்தில் வாழ்ந்ததால்
இந்த இழப்பு

எங்கள் வாழ்க்கை
இழப்புக்களுக்கே
உரியதென்றாகிப் போனதா?
இல்லை,
அது மீண்டும்
உழைப்புக்களால்
உருவாக்கப்பட வேண்டியது.

தென்றல் போல
வாழ்வதற்கு
முதலில்
சூறாவளிகளையும்
சுவாசிக்க வேண்டியிருக்கும்;
எங்கள்
சுவாசக்காற்றும்
சூறையாடப் படலாம்.

இனியும் நீ,
விடிந்தபின்
விழிக்கலாம்
எனநினைக்காதே!

நாங்கள்
விழிக்காமல்
இந்த இரவு விடியாது!

நண்பனே!
நாங்கள் இழந்தது
நாளைகளையல்ல!

—நல்லூர்தாஸ்— □

## தாய்

விடியாத இரவொன்றை
வேண்டி அவள் இருந்தாள்
வேதனைச் சுமையொன்றை
வேகவைத்த காரணத்தால்
துயிலாத இரவொன்றில்
தனிமையில் இருந்தாள்
துன்பச் சுமையகற்ற — தன்
இன்பக் கனி அணைக்க

— கலாமலர் நடராசா □

## அணுவும்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏவுகணைகளில் ஒன்றினால் முதல் செய்மதியை (Sputnik) ஏவியது. அதன்பின், விண்வெளியில் முதல் மனிதன் (யூரிகாகரின்). முதல்பெண் (வலென்டீனா ரெரஸ் காவா) ஆகியவர்கள் ரஷ்யர்களாகவே இருந்தனர். இதனால் காழ்ப்புற்ற அமெரிக்கா தனது முழு பணப்பலத்தையும் பயன்படுத்தி ரஷ்யருடைய சாதனைகளை மீறத்தக்கதாக, சந்திரனுக்கு நீல் ஆம்ஸ்ரோங் தலைமையில மூவர் கொண்ட குழுவை அனுப்பியது. இவர்கள் சந்திரனின் மேற்பரப்பு மண்ணையும் தோண்டியெடுத்து சில நாட்களில் திரும்பினார்கள். ஆனால் சந்திரனில் அமெரிக்க மனிதர் சாதித்ததையும் மிஞ்சத்தக்கதாக ரஷ்யாவின் இயந்திர மனிதர் அல்லது ரோபோக்கள் (Robots) மண்ணைக் கொண்டு வந்தது மட்டுமல்லாமல், பல்வேறு ஆய்வுகளையும் புரிந்தன. இதன்பின் ரஷ்யாவும் அமெரிக்காவும் சமமான முறையில் விண்வெளி ஆய்வில் ஈடுபட்டு வருகின்றன. ரேடியோ, TV அலைகளைச் சக்தியூட்டி மீளப்பரப்புவதற்காக ரெல்ஸ்டார் (Telstar) போன்ற செய்மதிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ரஷ்யா அனுப்பிய விண்வெளி ஆய்வுகூடம் பல ஆண்டுகளாக ஆய்வுகள் நடத்தி வருகிறது. அமெரிக்கா அனுப்பிய ஸ்கைலப்: (Sky-Lab) சிலஆண்டுகள் ஆய்வுகள் நடத்திய பிறகு மீண்டும் பூமிக்கு வந்து விழுந்து விட்டது. நல்லவேளையாக மனித சஞ்சாரமற்ற இடமொன்றில், இந்துசமுத்திரத்தில் வீழ்ந்தது. ரொக்கெட் போலக் கிளம்பி, பூமியைச் சில நாட்கள் வலம் வந்தது, விமானம்போல இறங்கும் ஷட்டில் (Shuttle) என அழைக்கப்படும். மீண்டும்மீண்டும் பயன்படுத்தக் கூடிய சாதனங்களை அமெரிக்காவும் ரஷ்யாவும் ஈடுபடுத்தி வருகின்றன.

பூமிக்கு முன்னும் அடுத்தும் தமது சூரியனைச் சார்ந்த சுற்றுப்பாதைகளைக் கொண்ட சுக்கிரன் (Venus), செவ்வாய் (Mars) ஆகிய கிரகங்களுக்கு விண்கலங்களை அனுப்புவதில் இரு அதிவல்லரசுகளும் ஈடுபட்டுள்ளன. செவ்வாயில் உயிரினம் இருக்கலாமென விஞ்ஞானிகள் பல காலம் நம்பிவந்துள்ளார்கள். இதை ஆராய்வதற்கு 1976 இல் அமெரிக்காவின் இரண்டு விண்கலங்கள் செவ்வாயில் தரை இறங்கின. ஆனால் உறுதியான முடிவு பெற முடியவில்லை. 1988 இல் ரஷ்யா அனுப்பிய இரண்டு கலங்கள் செவ்வாயின் ''சந்திரன்கள்'' (உபகிரகங்கள்) ஃபோபோஸ் (phobos), டெய்மோஸ் (Deimos) ஆகியவற்றை ஆராயும். இந்த 20 ஆம் நூற்றாண்டின் முடிவுக்குள் உறுதியான முடிவு பெறக்கூடியதாயிருக்கும்.

### சீனா, இந்தியா

தற்போது, வளர்முக நாடுகளாகிய சீனாவும், இந்தியாவும் அணு ஆய்வில் மட்டுமல்லாமல் விண்ஆய்விலும் போட்டியிட்டு வருகின்றன. ஆனால், இந்தியா இன்னமும் வறுமையிலும்நிலப் பிரபுத்துவப் பிடியிலும் இருப்பதால், இப்போட்டியில் சீனாவே முன்னணி வகிக்கிறது. எனினும், ரஷ்யாவின் உதவியுடன் இந்தியா சீனாவை எட்டிப் பிடிக்கிறது.

விண் ஆய்வு தற்போது எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்துவந்தாலும், அணு ஆய்வும் தொடர்ந்து நடந்து தான் வருகிறது. ஆனால், அழிவு வேலைக்கான அதி நூதனமான ஆயுதங்கள் (ஐதரசன் குண்டு, நியூட்ரோன் குண்டு, அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் குவிக்கப்பட்டுள்ளன அணுவில் அடைபட்டுக் கிடக்கும் பிரமாண்டமான சக்தியைக் கட்டுப்படுத்தி ஆக்கவேலைகளில் பிரயோகித்திருந்தால், இந்த நூற்றாண்டின் இறுதிக்குள், ஐ. நா. மன்றத்தின் அனுசரணையுடன் முழு மனித சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தைப் பெருமளவு உயர்த்தியிருக்கலாம். இன்னுமொரு உலகயுத்தம் நிகழாமல் தடுத்து விட்டால், இது அடுத்த நூற்றாண்டிலே தான் சாத்தியமாகலாம். "அடுத்த உலக யுத்தம் அணு ஆயுதங்களினால் போராடப்படும்; அதற்கும் அடுத்த யுத்தம் அம்பு வில்லினால் போராடப்படும்," என சில தீர்க்கதரிசிகள் கூறுவர். ஏனெனில், அணு யுத்தத்தில் உலகத்திலுள்ள நாகரிகங்கள் ஒன்றையொன்று அழித்துவிடும். அதன்பின் மனிதகுலம் மறுபடியும்வில்லேந்திய காட்டுமிராண்டிப் பருவத்திலிருந்து தான் ஆரம்பிக்க வேண்டி வரும்!

### ஆக்கவேலைகளில் அணு சக்தி

தொழில் நுட்ப வளர்ச்சியடைந்த சில நாடுகளில், வெவ்வேறு துறைகளில் அணுச்சக்திப் பிரயோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது சோவியத் ஒன்றியத்தில் அணுச்சக்திப் பிரயோக ஆய்வுக்கென, விஞ்ஞானிகளையும் அவர்களின் குடும்பங்களையும் கொண்ட ஒரு விசாலமான'' அணுநகரம்'' (Atom-grad) நிர்மாணிக்கப்பட்டது. அக்காலத்து அமெரிக்க அணு ஆயுத ஏகபோகத்தைத் தகர்த்தெறிந்தது. அதன் பின்னரே அணுவின் ஆக்க வேலைப் பிரயோகத்தில் ஈடுபட்டது. எனினும், அண்மையில் செர்னோபைல் அணு உலையில் ஏற்பட்ட விபத்து காரணமாக கட்டற்ற கதிரியக்க் கசிவினால் பலர் இறந்தனர், பலர் புற்றுநோய்வாய்ப்பட்டனர். (விண்வெளிப் பிரயாண முயற்சிகளிலும் விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன) அணு உலை விபத்து ஒரு துக்ககரமான நிகழ்வு தான். ஆனால், இதனால் சோவியத் விஞ்ஞானிகள் விரக்தியடையவில்லை. தொடர்ந்தும், அணுவிலிருந்து மனித சமுதாயத்துக்கு உபயோகமான வேலைகள் பற்றிய ஆய்வு நடக்கிறது. கட்டற்ற கதிரியக்கம் புற்று நோயைப் பிறப்பித்தாலும், கட்டுப்படுத்தப்பட்ட கதிரியக்கம் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்குமென அறிந்துள்ளோம் போக்குவரத்துச் சாதனங்களை இயக்குவதிலும் பாதகமில்லாமல் அணுச்சக்திப் பிரயோகத்தின் சாத்தியக் கூறுகளை விஞ்ஞானிகள் ஓரளவு வெற்றிகரமாக ஆராய்கிறார்கள். விண்வெளிப் பிரயாணத்திலும் அணுச் சக்தியால் இயங்கும் கொம்பியூட்டர் கட்டுப்பாட்டிலுள்ள பிரம்மாண்டமான ''வானக் கப்பல்கள்'' அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சாத்தியமாகலாம். இந்த வானக் கப்பல்களை இயக்கும் கொம்பியூட்டர்களுக்கு, விஞ்ஞானிகள் பூமியிலிருந்தவாறே ரேடியோ அலைகளின் மூலம் உத்தரவுகள் பிறப்பிப்பார்கள்.

அணுவூடுருவலின் பயனாக வெளிப்பட்ட பெரும் சக்தி விண்வெளியூடுருவலுக்கான சாதனங்களை இயக்குவதற்குப் பயன்படப் போவதும், அணுயுகமும் விண்வெளியுகமும் இந்த நூற்றாண்டில் ஒருங்கமைந்து வருவதும், தற்காலப் பௌதிக இயலின் குறிப்பிடத்தக்க அம்சமே!

### கணணி யுகம்

20 ஆம் நூற்றாண்டில் பௌதிகத்தின் மிகச்சிறந்த கண்டுபிடிப்பான இலத்திரனியல் கொம்பியூட்டர் (Electronic Computer) அல்லது கணணி, அணு ஆய்விலும் விண் ஆய்விலும் தேவையான நுண் கணிப்புகளுக்கு பயன்படுத்தப் படுகின்றது. ஏனெனில் மனித மூளையினால் நாட்கணக்காகத் தான்செய்யக்கூடிய கடினமான அலுப்பூட்டும்கணிப்புகளை, அதிவேகமாகவும் பிழையின்றியும் இவை செய்கின்றன. எனவே இவற்றை 'இலத்திரனியல் மூளைகள்'' எனவும் அழைக்கலாம். இந்த நூற்றாண்டைச் சிலர் "கொம்பியூட்டர்யுகம்" எனவும் அழைக்கிறார்கள். ஆனால் 21 ஆம் நூற்றாண்டைத் தான் அப்படி அழைக்கவேண்டி வரும் ஏனெனில் அடுத்த நூற்றாண்டிலேதான் இலத்திரனியலில் (Electronics) பிரம்மாண்டமான முன்னேற்றம் நிகழப் போகிறது.

அப்போது மனிதனின் எல்லா முயற்சிகளும் கணணி மயமாகி விடும். வேகம், திருத்தம் என்பவற்றில் மட்டுமல்லாது, விவேகத்திலும் சாதாரண மனித மூளைகளை வெல்லக்கூடிய கணணிகள் உற்பத்தியாக்கப்படும். ஜனரஞ்சகமான இசை மெட்டுகளை இயற்றுவதற்கும், நவீன கவிதைகள் புனைவதற்கும், சதுரங்கம் (Chess) விளையாடுவதற்கும், மொழி பெயர்ப்பதற்கும் கணணிகளை உருவாக்குவதில் விஞ்ஞானிகள் ஏற்கனவே ஓரளவு வெற்றி கண்டு வருகிறார்கள்.

கணணி மூளைகளைக் கொண்ட ரோபோ (Robot) என அழைக்கப்படும் இயந்திர மனிதன், அடுத்த நூற்றாண்டில் சர்வ சாதாரணமாய்விடும் இந்த ரோபோக்கள், கதிரியக்கத்திலிருந்து பாதுகாப்பாக அணு ஆய்விலும், மனிதரில்லா வானக்கப்பல்களை இயக்கிவிண் ஆய்விலும் 21 ஆம் நூற்றாண்டிலேயே பெருமளவில் பயன்படுத்தப்படும். ஆனால் அதற்கிடையில் இந்த நூற்றாண்டிலேயே, பௌதிக ஆய்வு காரணமாக நாம்,

அணுவைத் துளைத்து விண்ணை அளந்து
மனுக்குலம் பயனுற பல தொழில் செய்வோம்;
பஞ்ச பூதத்து இயல் கண்டு தெளிவோம். □

# இந்தியாவின் மிக நெருங்கிய நட்பு

## கல்கட் பேச்சின் பின்னணி

அண்மையில் இந்திய அமைதிப்படை உயரதிகாரிகளான கல்கட் போன்றோருக்கு இந்தியத் தூதுவராலயத்தில் பிரியாவிடை வைபவம் இடம் பெற்றது. இவ்வைபவத்தில் ஜே. ஆரும், இந்தியத்தூதர் மெஹ்தோத்ராவும், கல்கட்டும் நிகழ்த்திய பேச்சுக்கள் ஒரே சுருதியிலேயே அமைந்திருந்தன. இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கவே இந்திய அமைதிப்படை இங்கு வந்ததாகவும், அதற்காக அது எண்ணரிய தியாகங்கள் செய்ததாகவும் இவர்கள் மூவரினதும் பேச்சுகள் அமைந்தன.

ஆனால் இத்தனை தியாகத்தைச் செய்ததாகச் சொல்லிக் கொள்பவர்கள், இலங்கை அரசின் பாராட்டைப் பெற முடியவில்லை. மாறாக அமைதிப்படை வெளியேற்றத்திற்கான காலக்கெடுவை மட்டுமே பெற்றுக் கொண்டனர். வெளியேற்றத்தைத் தவிர்க்க முடியவில்லை. காலத்தைத் தள்ளிப் போட்டபோதெல்லாம் இந்திய அரசும் வெளியுறவு அமைச்சரும், தூதவரும் இலங்கைத் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கான உத்தரவாதம் கிடைக்கும் வரை அமைதிப்படை வெளியேற முடியாது என்றே கூறினர்கள். இருக்கும் வரையும் தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக என்றுகாரணம் காட்டியவர்கள் வெளியேறும்போது இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பாதுகாக்கவேதாம் இங்கு இருந்ததாகச் சொல்லுகிறார்கள்.

**எஸ். இரத்தினம்**

இதில் எது சரி? அவர்களைப் பொறுத்தவரை இரண்டுமே சரி. தமது பிராந்திய நலனுக்கு குந்தகமில்லாமலிருக்கும் சூழலை ஏற்படுத்தும் வரையும் தாம் இங்கிருப்பதற்கான காரணத்தை எந்தவகையிலும் தேடிக்கொள்வதற்காக இரண்டையுமேசொன்னார்கள். இதில் விசித்திரம் என்னவென்றால், இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டைக்காக்கவிரும்புகிற இன்றைய அரசும், தமிழ் மக்களின் பாதுகாப்பை நிரந்தரமானதாக்க ஒரு அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொள்ள விரும்பும் தமிழ் மக்களின் பெரும் ஆதரவைப் பெற்ற ஓர் அமைப்பும் இவர்களின் வெளியேற்றத்தை பெரிதும் அழுத்தி நின்றமையால்தான் இவர்கள் வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் உருவானது என்பதே ஆகும்.

இந்திய அரசிற்குச் சாதகமற்ற வெளியுறவுக் கொள்கையை உருவாக்கிய ஜே ஆர். இலங்கையின் உள்ளேயே இனமுரண்பாட்டை வளர்க்கும் சூழ்நிலையையும் உருவாக்கினர். ஜே. ஆரின்கீழ் பிழையாகக் கையாளப்பட்ட இலங்கையின் உள்நாட்டுக் கொள்கையும், வெளிநாட்டுக் கொள்கையும் ஒன்றுசேர்ந்தே இந்திய அரசு இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை வகுப்பதற்கும், இறுதியில் அமைதிப்படை என்ற பேரில் இங்கு தனது படைகளைக் கொண்டுவந்து நிறுத்தவும் வழிவகுத்தது. ஜே. ஆர் அரசு கையாண்ட பிழையான வெளியுறவுக் கொள்கை, தனது பிராந்திய நலன்களுக்கு எதிரானதாக அமைவதையிட்டு ஆத்திரம் அடைந்த இந்திய அரசு, தனது நலன்களைப் பாதுகாப்பதற்காகவே தான் ஈழத்தமிழர் இனப்பிரச்சினையைத் தனக்குச் சாதகமாக்க முனைந்தது. அந்தப்பிரச்சினையைச் சாதகமாக்கியே இலங்கைக்குள் பிரவேசித்த இந்திய அரசு, இங்கு வந்தபின்னலோ அந்தப் பிரச்சினைக்கான போராட்டத்தையும், போராளிகளையும் நசுக்க முனைவதற்கான ஒடுக்குமுறையைத் தனது கைக்கு மாற்றிக் கொண்டபோது, பெரும்பாலான தமிழ்மக்களையும் பாதிக்கும் வகையில் நடந்து கொண்டது. இதனால் தனது படைகளை வாபஸ் பெறும் போதோ (தனது படையினர் தமது கைகளில் டி. விடெக்குகள் சகிதம் திரும்பினலும்) இலங்கை அரசினதும், தமிழ் சிங்கள மக்களினதும். முழு வெறுப்போடும் சர்வதேச ரீதியான அபகீர்த்தியோடும் வெளியேறுகிறது மட்டுமல்லாமல், தான் எந்த இனத்தின் பிரச்சினையைத் தளமாகக் கொண்டு இலங்கைக்குள் காலடி எடுத்து வைக்க முனைந்ததோ, அந்தப் பிரச்சினைக்கான தளத்தையும் முற்றாக இழந்தே வெளியேறுகிறது. தளத்தையும் அதற்கான தார்மீக வலுவையும் இழந்து விட்டது.

இவ்வாறு ஈழமண்ணில் தனது வீரம், தார்மீகம், தளம் எல்லாம் களத்தே போக்கி வெறுங்கையோடு திரும்புகின்ற இந்திய அரசு, தனது பிராந்திய நலன்களைப் பேணுவதற்காகவும், தனக்கு சாதகமற்ற சூழல் உருவாகியிருப்பதை மாற்றுவதற்காகவும் இயன்றளவு முயற்சிக்கும். ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து தான் இழைத்துவிட்ட தவறினல் தனது நலன் பிழைத்துவிட்டது என்பது இந்திய அரசுக்கு நன்கு தெளிவாகி விட்டது.

எனவே இதையே சாட்டாக வைத்து முன்புபோல் இலங்கையுள் இந்தியாவால் நுழைந்துவிட முடியாது. தமிழ் மக்கள் கண்ணில் இந்தியா 'ரட்சகராக' தோற்றிய காலம் 1987 ஒக்ரோபர் 10 இன் பின்னர் மறைந்துவிட்டது. எனவே இந்தியா, இலங்கைத் தமிழர் சார்பான நிலைப்பாட்டில் நின்ற தனது தளம் சரிந்து போக, புதிய வழியைக் கண்டு

(11ஆம் பக்கம் பார்க்க)

# கொம்யூனிச நாடுகளிலே

## முன்னணிக் கட்சிக்கு ஏற்பட்டுவரும் கதி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

'செம்படை' கிழக்கு ஐரோப்பாவில் புகுந்த கட்டத்தில் விசேட பங்கீட்டு முறையும், விசேட கடைகளும் விசேட வீடுகளும், விசேட போக்குவரத்து வசதிகளும், ஒரு சோவியத் பத்திரிகையாளர் அண்மையில் கிண்டலாகக் குறிப்பிட்டது போல், 'விசேட சுடுகாடுகளும்' கூட சோஷலிச ஆட்சியாளர்களின் அதிகாரச் சின்னங்களாகிவிட்டன. இந்தச் சலுகை முறை வாய்ந்த அதிகார அமைப்பு, கிழக்கு ஐரோப்பாவில் 'நாற்று' நடப்பட்டது.

எனினும், ஸ்ராலின் யுகத்தில், சோவியத் யூனியனில் என்றாலென்ன, கிழக்கு ஐரோப்பாவில் என்றாலென்ன, பெரும்பாலான பொது மக்களுடைய நிலையோடு ஒப்பிடும்போது அதிகாரிகள் சொகுசாக வாழ்ந்த போதிலும், அவர்களும் பாதுகாப்பற்ற நிலையில், அரச பயங்கரவாதத்திற்கு அஞ்சவேண்டியிருந்தமையால், அவர்களது ஆடம்பர வாழ்க்கை அவாவிற்கும் ஓர் எல்லை இருந்தது

மூன்றாவது கட்டம் பிரஸ்நேவ் யுகத்தில் எய்தப்பட்டது. கிழக்கு ஐரோப்பா முழுவதிலும் பெரும்பாலான பிரஜைகளின் அன்றாட வாழ்க்கை அரச பயங்கரவாதத்திற்கு உட்பட்டிருந்த போதிலும், அதிகாரிகளைப் பொறுத்தவரை பயந்து பீதியுற்றநிலை கணிசமாகத் தளர்ந்து விட்டது. மேலும், இலட்சியவாத யுகம் எப்பொழுதோ மறைந்து விட்டது. கொம்யூனிஸ்ட் கட்சிகளின் மேல்மட்டத்தில் இருந்தவர்கள் இப்பொழுது, இறுகிப் போன வறட்சி மனப்பான்மை மேலோங்கிய 'சினிக்கல்' அதிகாரிகளாக மாறிவிட்டனர். இவர்களில் பெரும்பாலோர், தமது பதவிகளைப் பயன்படுத்தி எவ்வளவைத்தமக்குச்சுருட்டிக் கொள்ள முடியுமோ, அதனைச் செய்தார்கள். இந்தச் சூழ்நிலையிலேதான் ஊழலும், இலஞ்சமும் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்குப் பெருகின. தனி அதிகாரிகள் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி பெரும் பணக்காரர் ஆகினர்.

பெரிஸ்த்ரோய்க்கா நடவடிக்கைகள் தொடங்கப்பட்டதும், மார்க்கோஸ், டுவலியர் போன்றோரின் அறவொழுக்கத்திலும் பார்க்க எந்தவிதத்திலும் வேறுபட்டதோ மேம்பட்டதோவல்ல என்பது, தெட்டத் தெளிவு. முழு அமைப்புமே புழுத்து நாற்றம் எடுத்திருந்தது.

திறந்த அரசியல்முறை, சுதந்திரமாக இயங்கும் பொதுளின் அரசாங்கங்கள் இந்த எண்ணக்கருவை மிக்க ஆர்பத்தோடு வரவேற்று, நடைமுறைப்படுத்தின. ஏனென்றால் சோவியத் யூனியனிலுள்ள அரசாங்கத்தைப போன்று, இந்த அரசாங்கங்களுக்கும் தமது மக்களை அடக்கி ஒடுக்கி உண்மையான மனித உரிமைகளுக்காகப் போராடுபவர்களைத் துன்புறுத்தி வதைப்பதைநியாயப்படுத்தக்கூடிய சுலோகங்கள் தேவைப்பட்டன. உண்பதற்கு உணவும், உறங்குவதற்கு வசிப்பிடமும் ஒருவனுக்கு இல்லாவிட்டால், அவன் பேச்சுச் சுதந்திரத்தைப் பற்றி அல்ல, உணவு, தங்குமிட வசதிகளைப்பற்றியே அக்கறை கொண்டிருப்பான் என்ற எண்ணம் பரவியிருந்தது.

மனித உரிமைகள் பற்றித் தமது மக்களின் சிந்தனை எல்லையை ஓரளவு மட்டுப்படுத்துவதன் மூலம், பசியால் வாடும் தமது மக்களின் அதிருப்தியை அடக்கலாம் என்று, பல மூன்றும் உலக அரசாங்கங்கள் கருதுகின்றன.

கலப்புப் பொருளாதார அமைப்புக்களையும், பல கட்சி ஆட்சி முறைகளையும் நோக்கியே, கிழக்கு ஐரோப்பாவின் போக்கு செல்கின்றது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். ஆனால் இன்றுள்ள நிலையில் கிழக்கு ஐரோப்பாவின் அரசியல், பொருளாதார அமைபபுக்கள் திட்டவட்டமாக எவ்வாறு எதிர்காலத்தில் அமையும் என ஆரூடம் கூறமுடியாது என்றே, நினைக்கின்றேன்.

இந்த வடிவங்கள் எல்லாம் ஒரே சீரானவையாய் இருக்கும் என எண்ணுவதற்கு நியாயம் இல்லை. கிழக்கு ஐரோப்பா என்ற எண்ணக்கரு சோவியத் மேலாதிக்கத்தின் விளைவாக இப்பகுதிகளின் மீது திணிக்கப்பட்ட அரசியல் முறைகள், சொத்துரிமை வடிவங்கள் போன்றவற்றிலிருந்து எழுந்த ஒன்றே. செக்கோஸ்லோவாக்கிய நாட்டைச் சேர்ந்த சில மாறுபட்ட கருத்துடையவர்கள், தமது நாடு கிழக்குஐரோப்பாவைச் சேர்ந்ததல்ல, மத்திய ஐரோப்பாவைச் சேர்ந்ததே என வாதிடுகின்றனர். கிழக்கு ஜேர்மனியர் பலரும் இவ்வாறுதான் தமது நாட்டைப்பற்றிக் கூறிக் கொள்வார்கள் என நினைக்கிறேன். உண்மையில் இந்தப் பிரதேசம் பல இனங்களையும், சமய பாரம்பரியங்களையும், பண்பாடுகளையும் உள்ளடக்கிய ஒன்றே. இந்தப் பல்வேறு தன்மைகள் தத்தமது தனித்துவத்தைக் கூர்மைப்படுத்த எதிர்காலத்தில் முனையும் என, எதிர்பார்க்கலாம். எனவே எதிர்காலத்தில் இச்சமுதாயங்களுக்கிடையே எவ்வளவோ வேறுபாடுகளைக் காணக்கூடியதாகவும் இருக்கலாம்.

இப்பொழுது கிழக்கு ஐரோப்பாவைப பொறுத்தவரை, எதிர்காலம் இவ்வாறுதான் அமையும் என, திட்டவட்டமாகவோ நிச்சயமாகவோ ஒன்றும் கூறமுடியாது. அந்தப்பிரதேசத்தைப்பொறுத்தவரை வரலாறு, திறந்து விரிந்த ஒன்றாக விளங்குகின்றது. □

கட்சிப் பிரமுகர்கள் நடாத்திய தில்லுமுல்லுகள், பெருமளவிலான பணக்கையாடல்கள் எல்லாம், அம்பலத்திற்கு வந்துள்ளன. பிரஸ்நேவின் மருமகன் சுர்பனோவ், உஸ்பெக் கட்சித்தலைவர் றசிடோவ் போன்றோர் இத்தகைய முறைகேடான நடவடிக்கைகளுக்கு உதாரணமாவர்.

**றெஜி சிறிவர்த்தன**

தமிழில்: கனகு □

கிழக்கு ஐரோப்பாவில் அரசியல் பூகம்பம் ஏற்பட்டதும், அந்த நாடுகளிலே ஆட்சி அமைப்பின் உயர்மட்டங்களில் அமர்ந்திருந்தவர்கள், தமது பதவிகளையும் அதிகாரங்களையும் பயன்படுத்தி தமது சொத்துக்களைப் பெருக்கியதுடன், வெளிநாட்டு வங்கிகளிலும் சேமிப்புக்களை வைத்திருந்தனர் என்றஉண்மைகளெல்லாம் அம்பலமாகியுள்ளன ருமேனிய ஜனதிபதியாகவிருந்த சீசெஸ்கு போன்றோரினதும், அவரது குடும்பத்தினரதும் அரசியல் அறவொழுக்கத்தின் மட்டம் சனத்தொடர்புச் சாதனங்கள், சட்ட ஆட்சி — இவையொன்றுமே இல்லாதவிடத்து, நிலைமை இவ்வாறு மோசமடைவதைவிட வேறு வழியே இல்லை.

அரசியல் சுதந்திரத்தைப் பலி கொடுத்துத்தான் பொருளாதாரச் சமத்துவ நிலையை எய்தலாம் என்ற எண்ணம், வெறும் மாயையே என்ற முடிவிற்கே வரவேண்டும்.

இது தொடர்பாக, 'மொஸ்கோ நியூஸ்' இல் (21.1.90) வெளிவந்த கட்டுரைக்கு முன்னுரைபோல் அமைந்த ஒரு பந்தியினை இங்கு மேற்கோள் காட்டுவது பொருத்தமாயிருக்கும்: சமூக பொருளாதார உரிமைகள் குடியியல், அரசியல் உரிமைகளுக்கு மேலானவை என சோவியத் பிரச்சார சாதனங்கள் பல தசாப்தங்களாகப் போதித்து வந்தன. சர்வதேச சட்டத்துறையில் இந்த எண்ணக்கரு ஓரளவு தாக்கத்தையும் ஏற்படுத்திற்று. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுக

# நிகழ்வுகள்

### 20-3-90 செவ்வாய்

கடந்த நான்கு வருடங்களின் பின் நடம்பெறும் யாழ். மத்திய கல்லூரி, பரியோவான் கல்லூரி கிரிகெற் போட்டிகளுக்கான பலவிதமான ஆபத்தங்களுக்கிடையே நேற்று மாலே புகையிரத நிலேத்தருகில் இரு பகுதி மாணவர்களும் மோதிக் கொண்டனர் □ தெற்கில் தமிழ் இளேஞர் பெருமளவில் ஆயுதங்களுடன் கைது □ எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கும் க.பொ.த. சாதாரணப் பரீட்சை எக்காரணம் கொண்டும் பின் போடப்படமாட்டாது. என யாழ். கல்வித்திணைக்கள அதிகாரி கூறினுர்.

### 21-3 90 புதன்

வடபகுதியில் எஞ்சியிருந்த இந்தியப்படை நேற்று முற்று முழுதாக வாபஸ் பெறப்பட்டது □ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலகம் நேற்றுக் காலே கோண்டாவிலில் திறக்கப்பட்டது □ காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ சங்கராச்சாரியார் பிரபாகரனுக்கு ஆசிச் செய்தி ஒன்றை அனுப்புயுள்ளார் □ பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் நேற்று அடையாள வேலே நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

### 22-3-90 வியாழன்

அரசமைப்பின் 6 வது ஷரத்தை நீக்குவதற்கு நிபந்தனேயுடன் ஆதரவு தர முஸ்லிம் கொங்கிரஸ் இணக்கம் தெரிவித்துள்ளது □ சம்பளத்துடன் வழங்கப்படவேண்டிய ஊக்குவிப்புப்பணம் இதுவரை தமக்கு வழங்கப்படாததை ஆட்சேபித்து மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த 300 ஊழியர் நேற்று வெளிநடப்புச் செய்தனர் □

### 23-3-90 வெள்ளி

தமிழீழ மண்ணில் இந்தியப் படை கொலேவெறி பிடித்து அலேந்தது என தமிழீழ விடுதலேப் புலிகள் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது □ அமிர்தலிங்கத்தை எல்.ரி.ரி.ஈயினர் கொன்றதாகக் கூறுவதால் அவர்களேக் கைது செய்துவிசாரணே நடந்தவேண்டும் என தமிழர் கூட்டணி எம்.பி கோவிந்தன் கருணுகரன் கூறினுர் □

### 24-3-90 சனி

தமிழீழ விடுதலேப் புலிகளின் மக்கள் முன்னணி 10 அம்சத் திட்டமொன்றை உடனடியாக அமுல்நடத்தவுள்ளது □ திருமலே மாவட்டத்தில் இடம்பெயர்ந்த சிங்கள அகதிகளே மீளக் குடியமர்த்துவது சம்பந்தமாக விடுதலேப்புலிகளுடன் அரச அதிகாரிகள் பேச்சுக்களே மேற்கொண்டுள்ளனர் □ வேலேதேடி மலேசியா சென்ற நூற்றுக்கணக்கான இலங்கையர் நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக மலேசியாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது □

### 25-3-90 ஞாயிறு

நேற்றைய இந்தியப்படை வெளியேற்றம் புதிய வரலாற்றுத் திருப்பம் என அன்ரன் பாலசிங்கம் கூறினுர் □ ஒரிஸ்ஸா மாநிலத்தில் தற்போதுள்ள தமிழ் அகதிகள் அந்தமான் தீவுககு அனுப்பப்படவுள்ளதாக ஒரிஸ்ஸா முதல்வர் கூறிஞர் □ தமிழ்மக்கள் மீது 'ரோ' தலேயீட்டை நிறுத்துமாறு விடுதலேப்புலிகள் வி.பி.சிங் அரசிடம் கோரிக்கை விடுத்தனர் □

### 26-3-90 திங்கள்

தமிழர்களின் உண்மையான வரலாறு பாடத்திட்டத்தில் மறைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சருக்கு தமிழ் ஆசிரியர் சங்கம் மகஜர் அனுப்பியுள்ளது □ வல்லவையல் ராஜீவ், பெருமாள் ஆகியோரின் கொடும்பாவிகள் நேற்று எரிக்கப்பட்டன □ வட, கிழக்கு மாகாண சபையின் புதிய செயலாளராக சொர்ணலிங்கம் கணேசநாதன் ஜனதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார் □

## இந்தியா...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்கத் திட்டமிட்டதன் விளேவே இலங்கை அரசின் கவனத்தைக் கவரும் ஐக்கிய இலங்கைக்கான ஆதரவும், தமிழீழப் பிரிவினேக்கெதிரான அதன் புதிய கோஷமுமாகும். இந்தியா அடிப்படையில் தமிழீழம் பிரிவதை என்றுமே (தனது பிரதேச நலன்களேக் கருத்தில் கொண்டு) ஆதரிககப் போவதில்லே. என்ருலும் அதை முன்னர் முதன்மைப்படுத்தியதில்லே. ஆனுல் மாறிய இன்றைய சூழலில் இந்தியா தனது சுலோகத்தை மாற்றத் தொடங்கியுள்ளது.

தனது இந்த நிலேப்பாட்டை மேலும் இலங்கை அரசுக்குத் தெளிவாக்கும் முயற்சியே, இவர்களால் தூண்டப்பட்ட வரதராஜப்பெருமாளின் ஈழப் பிரகடனமாகும். இந்தப் பிரகடனம் பின்ஞல் நிகழவிருக்கின்ற ஒரு நிகழ்வுக்கு முன்னேடியாக ஒத்திகை செய்து காட்டப்பட்ட ஒன்றெனவே கருதவேண்டும். ஒருவேளே தமிழீழ லட்சியம் உண்மையாகவே நிறைவேறும் சூழல் ஏற்படும் பட்சத்தில், இந்தியா அதை முழுமூச்சாக எதிர்க்கும் என்பதையே இந்தியா வரதராஜப் பெருமாள் மூலம் செய்து காட்டியுள்ளது என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். முஸ்லிம் கொங்கிரஸ் 6 வது ஷரத்தை எதிர்ப்பதும் ஒற்றைபாட்சிக்குள்ளேயே தமிழர் பிரச்சினே தீர்க்கப்பட வேண்டும் என்று புளொட் ஜனநாயக அமைப்புப் பிரமுகர் சித்தார்த்தன் கூறுவதும் இதன் பின்னணியிலேயே பார்க்கப்படவேண்டும். விடுதலேப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே முறுகல்நிலேயை ஏற்படுத்துவதற்கான காய்நகர்த்தல்கள் எங்கெல்லாமோ இந்தியாவால் மேற்கொள்ளப்படுவதன் வெளிக்காட்டலா இது?

எது எவ்வாருயினும், இந்தியா இலங்கைக்குள் மீண்டும் நுழைவதென்பது மிக் கஷ்டமே. ஆனுல் அப்படி நடந்தாலும் அது வெகு விரைவில் ஏற்படக்கூடிய் தொன்றல்ல. எப்பவோ ஒருநாள் வரும் என இந்தியா காத்திருக்கிறது என்பதன் அறிகுறிகளே இவை. இந்தக் காத்திருப்பின் வெளிக்காட்டலாகவே ''இலங்கையின் நண்பனுக வந்த இந்திய அமைதிப்படை இப்போது மிக நெருங்கிய நண்பனுகத் தாயகம் திரும்புகிறது'' என்ற கல்கட்டின் பேச்சு நிற்கிறது □

(சென்றவாரம் ''இந்தியா கடைப்பிடித்தகாந்தீயம்'' என்ற கட்டுரையை எழுதியவரும் எஸ், இரத்தினமே. அதை எழுதியவர் சரண்யன் அல்ல. தவறுக்கு வருந்துகிறேம்.)

## போர்க்கால...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

### முக்கிய பிரச்சினைகள்

போர்க்கால இலக்கியங்கள் சில முக்கியமான பிரச்சினைகளை எழுப்பின. பாசிச எதிர்ப்புப் போரின் முக்கியத்துவம் என்ன? மக்களின் வீரவுணர்வைத் தட்டியெழுப்பி அதை வலுப்படுத்திய காரணி யாது? மரபு வழிவந்த தேசபக்தியா அல்லது புரட்சியால் தட்டியெழுப்பப்பட்ட புதியதொரு தேசியப் பொறுப்புணர்வா? சோவியத் மக்கள் தமது நாடு, தமது முன்னோர்களின் புனித பூமி என்பதற்காகப் போராடுகிறார்களா? அல்லது எதிர்காலத்தில் சுபிட்சத்தைத் தருவதாக வாக்களிக்கும் பூமியைப் பாதுகாக்கவா? மிகக் கொடூரமான மரணத்துக்கும் பட்டினிக்கும் உட்படுத்தப்பட்ட, முன்னுவமை காணுத மனோதிடத்தை வெளிப்படுத்திய கோடானுகோடி சோவியத் ரஷ்ய மக்களின் இயல்பு பற்றிய எத்தகைய முடிவுகளை வகுக்க இயலும்? லெனின்கிராட் முற்றுகையிடப்பட்டிருந்த 900 நாட்களில் ஏழு லட்சம் நகரவாசிகள் நாஜிகளின் குண்டு வீச்சுக்கும் பசிக்கும், பட்டினிககும் இரையாளார்கள். ஒரு நாடு முழுவதும் ஒரு அசாதாரணமான தீரச் செயல்களையும் தியாகத்தையும் செய்ய முடியுமென்றால், அதற்கே உரிய அதன் உள்ளார்ந்த தன்மைகளா? அதன் ஆன்மாவா? ஸ்டாலினியக் கொடுங்கோன்மையையும் கொடும் அடக்குமுறைகளையும் மறந்து மக்கள் ஒரே கொடியின் கீழ் திரளக் காரணம் என்ன? இத்தகைய கேள்விகளுக்கான பதில்கள் வழக்கமான மார்க்சிய விளக்கங்களைத்தாண்டிச் சென்றன.

காலங்காலமாகவே ரஷ்யர்களிடமிருந்து வந்த வீரப்பண்புகள், சோவியத் யூனியனின் பல தேசிய இன மக்களின் ஒற்றுமையை வலுப்படுத்திய பொது இலட்சியம் (நாஜிச எதிர்ப்பு) ஆகிய இரண்டு அம்சங்களையும் எழுத்தாளர்கள் வலியுறுத்தினர். ஆயினும் 'தேசப்பற்று' என்ற அபசத்தியகே கட்சியாலும் அரசாங்கத்தாலும் மேலதிக அழுத்தம் தரப்பட்டது.

### ஐக்கியமும் சுதந்திரமும்

இலக்கியத் துறையில் குழுச் சண்டைகளும், வெளிநிர்ப்பந்தங்களும் தற்காலிகமான ஒய்வு பெற்றன. தணிக்கை விதிகள் தளர்த்தப்பட்டன. பாணிகளிலும் கருத்துகளிலும் சுதந்திரம் அதிகரித்தது. பல ஆண்டுகள் மௌனத்திலாழ்த்தப்பட்டிருந்த பழம் எழுத்தாளர்கள் மீண்டும் எழுதவும், பிரசுரிக்கவும் தொடங்கியிருந்தனர். இருபதுகளில் இருந்தது போன்ற ஒரு இலக்கிய மறுமலர்ச்சிக்கான அறிகுறிகள் தோன்றலாயின. பாசிச எதிர்ப்புப் போரில் உலகெங்கும் கம்யூனிஸ்டுகளும், கம்யூனிஸ்ட் அல்லாதவர்களும் ஏற்படுத்திக் கொண்ட கூட்டணி இலக்கியத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சோவியத் எழுத்தாளர்களும் சுதந்திரத்தை நேசிக்கும் அனைத்து மக்களின் சகோதரததுவம் பற்றிப் பேசத் தொடங்கினர், மேலை நாடுகளுடனும் அமெரிக்காவுடனும் ஒரு பண்பாட்டுப் பரிமாற்றம் பற்றிப் பேசவும் தொடங்கினர். மூன்றாம் அகிலம் கலக்கப்பட்டிருந்ததாலும் கிரேக்க வைதீக கிறித்துவத் திருச்சபையுடன் அரசாங்கம் நல்லிணக்கம் கொள்ளத் தொடங்கியதாலும் இறுக்கம் தளர்த்தப்படும் என்ற நம்பிக்கை உருவாயிற்று. ஆனால் போருக்குப் பிந்திய நிலைமைகள் முற்றிலும் வேறு விதமாக இருந்தன.

கவிதை — ஆங்கிலம் வழி தமிழில்: ஆர் சிவகுமாா

நன்றி: ரஷ்யப் புரட்சி: இலக்கிய சாடசியம் □

## மண்ணே...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சவந்தரா புல் மாட்டுக்கு நல்ல தீனி அத்துடன் அதன் வேரில் நல்ல வாசனே எண்ணெய் உண்டு. நிலத்தைத் துளேக்கும் எலிகளுக்கு அந்த வாசனே பிடிக்காது. எனவே, நெல்லே வெட்டும் அகழனிலிருந்து பாதுகாப்புக் கொடுக்கிறது சவந்தரா புல்.

வன இலாகாவில் அதைப் பெறலாம். வன இலாகா அதிகாரி, தபால் பெட்டி 509, வன இலாகா கொழும்பு2 என்ற விலாசத்திற்கு எழுதி, அந்தப் புல்லேப் பெற்றுக் கொள்ளலாம்.

நன்றி: இலங்கைச் சூழல் கொங்கிரஸ் □

## வெளிநாட்டுக்...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்தார். இருவரும் பள்ளித் தோழர்கள். அந்தரங்க சங்கதிகளே மனம்விட்டுப் பரிமாறிக் கொள்ளும் அளவுக்கு அவர்களுடைய நட்பு மிகவும் நெருக்கமானது. சுக துக்கங்களேப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது — மல்லியின் கலியாணத்தைப் பற்றிச் சொன்ஞர் அண்ணுமலே.

''உம்முடைய மகள் மல்லியின் அழகுக்கும், குணத்துக்கும், ஏற்ற ஒரு பெடியன் இருக்கிருன். கிளிநொச்சியில் இருபத்தைந்து ஏக்கர் வயல், டவுனில் தென்னந்தோட்டம், பட்டதாரி. உத்தியோகத்தை வெறுத்து, விவசாயம் செய்கிருன். சொத்துக்குக் குறைவில்லே. சோத்துக்கும் தளப்பம் இல்லே. ஒழுங்கு செய்யவா'' என்ருர் நாதன்.

நாதன் சொன்னவற்றைக் கேட்ட அண்ணுமலே, ''எக்கச்சக்கமாகக் கேட்பார்களோ? சாதாரண ஆட்களே வாய்க்கு வநதபடி சீதனம் கேடகும் பொழுது, இவ்வளவு பெரிய முதிசகாரன் ......'' என்று வார்த்தைகளேச் சொல்லி முடிக்காமல் இழுத்தார்.

நீர் எதற்கும் மனதை அலட்டிக்கொள்ள வேண்டாம். பொடியன் ஒரு ''ரைப் பானவன்.'' சீதனம் ஒரு சதமும் வாங்காமல் கலியாணம் செய்வேன் என்று ஒற்றைக் காலிலே நிற்கிருன். தகப்பனே பத்து வயதிலே பறிகொடுத்தவன். அவனுடைய விருப்பத்துக்கு மாருக தாயும் எதுவும் சொல்லமாட்டா. அதுமட்டுமல்ல, சொன்ஞல் இரண்டு பேரும் மறுவார்த்தை பேசமாட்டார்கள்'' என்று விபரங்களே எடுத்துச் சொன்ஞர் நாதன்.

இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு இளேஞன் இருப்பானு என்று ஆச்சரியத்தால் அதிர்ந்து போனுர் அண்ணுமலே. ''இந்த இடம் மல்லிக்கு ஒழுங்காகி விட்டால் ... கடவுளே'' என்று மனதுக்குள் அங்கலாய்த்தார்.

மல்லயின் சாதகக் குறிப்பை வாங்கிக் கொண்டுபோன நாதன் இரண்டு நாட்களில் மகிழ்ச்சியுடன் வந்தார்.

''அண்ணுமலே சாதகங்கள் இரண்டும நல்ல பொருத்தம். பதினேந்து பொருத்தங்களில் பதின்மூன்று உத்தமமாகப் பொருந்தியிருக்கிறது. அதாவது, எழுபத்தைந்து வீதத்துக்கு மேலே பொருத்தம். ஒரு நல்ல நாளில் நீங்கள் மாப்பிளே கேட்டு சம்பிரதாயப்படி அவர்கள் வீட்டுக்குப் போகவேண்டும். நான் எல்லாம் கதைத்து விடடேன் உங்களோடை நானும் வருவேன்'' என்று சொல்லிவிட்டுச் சிறிது நேரம் யோசனே செய்து மீண்டும் தொடர்ந்தார்.

''ஒரு சின்ன விஷயம். அவர்கள் சீதனம்,வீடு வாசல் என்று எதுவும் கேட்கவில்லே. இருந்தாலும் உங்கள் பிள்ளேக்குத் தானே—ஒரு நாலு பரப்பு நிலமாவது கொடுக்க வேண்டும். அவர்கள் விரும்பிய நேரம், ஆறுதலாக, அந்த இடத்தில் ஒரு வீட்டைக் கட்டுவார்கள். அப்படிச் செய்தால் தான் போகிற இடத்திலேபிள்ளேக்கும் மதிப்பு. உங்களுக்கும்பெருமை, இந்தக் கலியாணத்தை நடத்திவைக்கிற எனக்கும் கௌரவமாக இருக்கும்'' நான் சொல்லுறது சரிதானே என்று பார்வையால் வினவினுர் நாதன்.

நாதன் சொல்லுவதிலும் நியாயம் இருப்பதாக உணர்ந்த அண்ணுமலே, ''சரி ஒரு நாலு பரப்பு நிலம் வாங்கிக் கொடுத்துவிடுகிறேன்.'' என்று வாக்குறுதி கொடுத்துவிட்டார்.

கலியாணகாரியம் கருக்கட்டிவிட்டது. விரைவாகக் காரியங்களேக் கவனிக்க வேண்டும் என்று தீர்மானித்த அண்ணுமலே, நாலுபரப்பு நிலம பார்த்து, விலேபேசி விட்டு, நகை நட்டுகளே விற்றுக் காசு கொண்டு போவதற்குள் —

முருகேசரின் 'வெளிநாட்டுக் காசு புகுந்து விளேயாடிக் காரியத்தைக் கெடுக்கும் என்று நினைத்தாரா அண்ணுமலே? கண்களே மூடியபடி யோசனேயில் ஆழ்ந்து விட்டார். □

திசை
THISAI

# இனி மலையகத் தமிழர்கள் தலைநிமிர்ந்து செல்லலாம்

— தொண்டமான்

''முந்திய காலங்களில், போதுமான தராதரப் பத்திரங்கள் இருந்தும் மலையகமக்களுக்கு வேலை கிடைப்பது மிகக்கடினமாக இருந்தது. ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. 400 மலையக இளைஞர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களாகப் பயிற்சி பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.'' இவ்வாறு அமைச்சர் தொண்டமான் 124 மலையக இளைஞர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களாகப் பயிற்சி பெற்று வெளியேறும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கண்டி அஸ்கிரிய சர்வதேச விளையாட்டரங்கில் நடந்த மேற்படி வைபவத்தின் போது அவர் மேலும் கூறியதாவது:

முன்னர் இருந்த நிலை இப்போது மாறிவிட்டது. மலையக மக்கள் அரசாங்க உத்தியோகம் பெறும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. அவர்கள் இனி தலை நிமிர்ந்து தமது 'லயங்க'ளுக்குச் செல்லலாம்.

மேற்படி பயிற்சி பெற்ற மலையக இளைஞர்களுக்கு விசேட அதிரடிப்படை பயிற்சியும், மிக நவீன ஆயுதங்களைப் பாவிக்கும் முறைபற்றிய பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளன.

## எயிட்ஸ் நோய்க்கு எதிராக...

விசேட மருத்துவக் குழுவொன்று, உல்லாசப் பயணிகள் கூடும் இலங்கையின் தென்பகுதிக் கடலோரப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிக்கு மருத்துவக் குழு அனுப்பப்பட்டுள்ளதன் முக்கிய நோக்கம், இப்பகுதியில் உல்லாசப் பயணிகளால் பயன்படுத்தப்படும் ஆண், பெண் விபச்சாரிகளுக்கு எயிட்ஸ் நோய் ஏற்படாமல் பாதுகாக்கவும், இப்பகுதியில் எயிட்ஸ் நோய் பரவாமல் தடுப்பதற்குமே.

இப்பகுதிகளில் 20,000 க்கு மேற்பட்ட ஆண், பெண் விபச்சாரிகள் உள்ளதாகவும் ஆண், விபச்சாரிகளில் அனேகமானோர் 15 அல்லது, 20 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவே உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உல்லாசப் பயணிகள் வந்துசேரும் நொவம்பரிலிருந்து ஏப்ரில் மாதம் வரையிலான காலப் பகுதியே இத்தகைய விபச்சாரிகளைக் கண்டுபிடிக்கக் கூடிய காலம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## இஸ்ரேலிய நலன்பிரிவு மூடப்பட, மத்திய கிழக்கின் 'கஜானா' திறபடும்!

மிக விரைவில் இந்தியாவில் நடைபெறவிருக்கும் மாநாடு ஒன்றில் கலந்துகொள்ளச் செல்லவிருக்கும் சபாநாயகர் எம். எச். மொகமட், மேற்படி மாநாட்டில் கலந்துகொள்ள வரும் யசீர் அரபாத்தை இலங்கைக்கும் வருமாறு அழைப்பு விடுக்கவுள்ளார். இலங்கையிலுள்ள முஸ்லிம் அமைப்புகளின் சார்பிலேயே முகமட் இவ் வழைப்பினை விடுக்கவுள்ளார்.

கடந்த வாரம் ஜனாதிபதி பிரேமதாஸ இலங்கையிலுள்ள இஸ்ரேலியர் நலன்காக்கும் பிரிவை ஏப்ரில் மாதம் 20 ஆம் திகதிக்குள் மூடிவிடவேண்டும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து பல நல்ல விளைவுகள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதியின் மேற்படி உத்தரவின் பின்னர் அரபாத் மட்டும் வரப்போவதில்லை, அவரோடு சேர்ந்து மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளின் கஜானாவிலிருந்து கோடிக்கணக்கான நிதியுதவியும் இலங்கைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நாசகார இயக்கம் இன்னும் இறக்கவில்லை

— பிரேமா

''மீண்டும் மக்களை அச்சுறுத்தி சாதாரணமக்களின் வாழ்க்கையைச் சீர்குலைப்பதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன''

மேற்கண்டவாறு ஜனாதிபதி பிரேமதாஸ, டி. எஸ். சேனநாயக்க மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவில் உரையாற்றும் போது கூறினார்.

ஜனாதிபதி மேலும் கூறியதாவது: ''பாதுகாப்பு நிலைமை சீரடைந்துள்ள போதிலும் சிலர் சதிநாச வேலைகளுக்குப் புத்துயிர்ப்பு அளிக்க முயல்கின்றனர். இவர்களைப் பற்றி மாணவர்களும் மக்களும் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். சதிநாச வேலைகளில் ஈடுபடும் இயக்கம் இன்னும் இறந்து விடவில்லை. இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு மக்கள் என்னிடம் அதிகாரத்தைக் கையளித்தனர். மக்கள் என்னிடம் கையளித்துள்ள அப்பணியை என்ன நேர்ந்தாலும் நிறைவேற்றியே தீருவேன்''

## இலங்கையின் தேசிய புது வருடம்

தமிழ் — சிங்களப் புதுவருடதினமான ஏப்ரில் மாதம் 14 ஆம் திகதியை இலங்கையின் தேசிய புது வருடமாகப் பிரகடனம் செய்துள்ளதாக ஜனாதிபதி பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

மேற்படி அறிவித்தலை, ஆனமடுவ என்னும் இடத்தில் உள்ள தபால் அலுவலகத்தைத் திறந்துவைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி அறிவித்தார். இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:

இந்தப் பிரகடனத்துக்கான தூண்டுதலை பத்திரிகைகளில் வாசகர் ஒருவர் எழுதிய கடிதத்திலிருந்தே நான் பெற்றேன். இப்புதுவருட தினத்தில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகிய சகல இன மக்களும் எல்லா வேற்றுமைகளையும் நீக்கி, ஐக்கியப்படுவோமாக.

## பிரத...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு இது வழிகோலும். மேலும் ஹமீத் தனக்கு எதிர்காலத்தில் சவாலாக வளர முடியாதவர் என ஜனாதிபதி கருதுகிறார்.

இதற்கிடையில் தனக்கும் புதிய பதவி கிடைக்கலாம் என ரஞ்சன் விஜயரத்ன கூறித்தனது நப்பாசையைப் பத்திரிகையாளரிடம் சூட்சுமமாக வெளியிட்டிருந்தபோதும் பிரதமராகும் வாய்ப்பு பெரும்பாலும் அவருக்குக் கிட்டாது எனறே அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

# திசைமுகம்

*''சுதந்திர ஒளியினில் மனங்குளி*
*அதன்வழி திசையெலாம் துலங்கவே''*

## விஷம் கக்கும் பத்திரிகை

வழமையாகவே இனவாத விஷத்தைக் கக்கிவரும் தென்னிலங்கைப் பத்திரிகைகள் இலங்கையிலிருந்து இந்தியப் படைகள் நீங்கியதுதான் தாமதம் தமது இனவாதக் குரலை பலமாக உயர்த்தத் தொடங்கியுள்ளன. குறிப்பாக இத்தகைய இனவாதப் போக்கை கிளறிவிடுவதில் முதன்மைவகிக்கும் 'ஐலன்ட்' பத்திரிகை, கடந்த 25ஆம் திகதியிலிருந்து தனது இனவாதத்தின் குரூரப் பற்களைப் பலவித கோணங்களில் அபிநயம் பிடித்துக் காட்டியுள்ளது.

இது வெளியிடும் செய்தியிலும் சரி, ஆசிரிய தலையங்கத்திலும் சரி அடியோடி நிற்கும் முக்கிய போக்கு, சிங்கள வெகுஜன அபிப்பிராயத்தைப் புலிகளுக்கும் அரசுக்கும் எதிராகத் தூண்டிவிட முயற்சிப்பதே வேறுவிதத்தில் இதைச் சொல்வதானால் இதன் அபிப்பிராய உருவாக்கம் என்பது புலிகளையும் அரசையும் மோதவிடுவதை இலக்காகக் கொண்டுள்ளது என்றே சொல்லவேண்டும்.

கடந்த ஞாயிறு தலைப்புச் செய்தியில் ''விடுதலைப் புலிகள் ஆயுதங்களை அரசாங்கத்திடம் கையளிக்காது. ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்கள் கூறுவதுபோல், தமிழீழம் கிடைக்கும் வரையும், அவர்கள் பலவித காரணங்கள் காட்டி, ஆயுதங்களை ஒப்படைக்கமாட்டார்கள்'' என்று கூறியுள்ளது கடந்த திங்கள் ஆசிரியத் தலையங்கத்தில். ''தற்போது அரசாங்கத்துக்கு முக்கிய தடையாகஇருப்பது விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிப்பது சம்பந்தப்பட்டதே. இந்தியப் படைகள் நீங்கியதான இன்றைய நிலையில் இவர்கள் ஆயுதங்களைக் கையளிப்பார்களா? இந்த ஆயுதங்களைக் கையளிக்கும் விவகாரத்தினால்தானே விடுதலைப் புலிகளும் அவர்களது டில்லி நண்பர்களும் மோதிக்கொள்ள நேர்ந்தது'' என்று கிண்டிவிட்டிருக்கிறது

கடந்த செவ்வாய் தலைப்புச் செய்தியில் ''பெரிய கேள்வி: பிரபாகரனின் அடுத்த நடவடிக்கை என்ன?'' என்று கேள்வி எழுப்பும் அப்பத்திரிகை, ''ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கையளிப்பதில்லை என்பதனால் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் பெரிய முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன'' எனக் கூறுகிறது.

கடந்த புதன் செய்தியில் ''ஆயுதங்களுக்குப் பிரியாவிடை இல்லை'' என்ற ஆசிரிய தலையங்கத்தில் ''விடுதலைப் புலிகளோடு பொருத நேரிடும் என்ற பயத்தினால் அரசாங்கம் பேசாதிருக்கக் கூடாது. ஆயுதங்களை ஒப்படைக்கச் செய்வதில் அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கூறுகிறது.

விடுதலைப் புலிகளின் ஆயுதம் பற்றி இவ்வளவு அலட்டிக் கொள்ளும் இப்பத்திரிகை இந்தியப் படை நீங்கிய பின்னர், தமிழ்மக்களின் பிரச்சினையை எவ்வாறு விரைவாகத்தீர்க்கலாம் அதன் பின்னர் எவ்வாறு ஆயுதங்கள் தேவையற்றுத் தானாகவே உதிரலாம் என்பது பற்றி ஒரு வார்த்தை கூட எழுதாததுதான், அது எங்கே காலூன்றி உள்ளது என்பதைக் காட்டுகிறது.

## ரஞ்சனைக் கொல்ல இரண்டாவது சதி

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சரான ரஞ்சன் விஜயரத்ன, தன்னைக் கொலை செய்வதற்கு இரண்டாவது முறையும் சதிகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கடந்த வாரம் கூறினார். இதுபற்றிய விரிவான தகவல்களை அவர் கூறுவிட்டாலும் மேலெழுந்தவாரியாகக் கிடைத்த பொலிஸ் தகவல்களில் இருந்து பெற்றவை. வருமாறு:

கடந்த ஜனவரி மாதம் முதலாவது சதி மேற்கொள்ளப்பட்டது ஆனால் அது நிறைவேற்றப்படாது முறியடிக்கப்பட்டது. ஆனால் இரண்டாவது முறையாக மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சதி மிகப் பாரதூரமானதாகும் எனக் கூறப்படுகிறது. இச்சதியின் முக்கிய பாத்திரமாக விளங்கியவர் ஒரு ராணுவ பொலிஸ் சிப்பாயாகும். இவர் உத்தியோக ரீதியான வீடியோ படப்பிடிப்பாளராகவும், அமைச்சர் ரஞ்சன் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளைப் படமெடுப்பவராகவும் இருந்துவந்துள்ளார். ஆனால் மேற்படி வீடியோ படப்பிடிப்பாளராக இயங்கி வந்த ராணுவ, பொலிஸ் சிப்பாய் உண்மையில் ஜே. வி. பியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் என்றும், சந்தர்ப்பம் வாய்க்கும்போது அமைச்சரைச் சுட்டுக் கொல்லவோ அல்லது அவரது உணவில் 'சயனையிட்' கலக்கவோ ஏவப்பட்டிருந்தார் என்றும் தெரிய வந்துள்ளது.

## பிரதி பொலிஸ் மாஅதிபர்மீது பிடிவிருந்து

சர்ச்சைக்குரிய டி. ஐ. ஜி உடுகொம்பொல மீது உயர்நீதிமன்றம் பிடிவிருந்து பிறப்பித்துளளது.

விஜயதாஸ லியனராச்சி என்பவரின கொலைவழக்குச் சம்பந்தமாகவே உயர்நீதிமன்ற நீதிபதி விக்னேஸ்வரன் அவர்கள் இப்பிடிவிருந்தைப் பிறப்பித்தார்

அரசு தரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர் பாலித்த பெர்ணன்டோ டி. ஐ. ஜி. உடுகம்பொல, வெஷிங்டனில் உள்ளார் என்றும், அவர் ஏப்ரில் முதல் வாரத்தில் இலங்கைக்குத் திருப்புவார் என்றும் கூறினார்.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 30-3-1990 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. D. / 83 / News / 90.